# வீர சுதந்திரம்

[வரலாற்று நாடகம்]

ஆசிரியர் :

எஸ். டி. சுந்தரம்

உலக நூலகம்

1, சன்னதி தெரு, லட்சுமிபுரம்,

சென்னை-600014.

முதல் பதிப்பு, 1974.
இரண்டாம் பதிப்பு, 1977.
உரிமை ஆசிரியருக்கே

விலை ரூ. 7-00

**காணிக்கை**

இந்தியாவின் சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிர் ஈந்த வீரத்தியாகிகளுக்கும், இன்னும் நம்மோடு வாழ்ந்து, வீர விடுதலையைக் காப்பாற்றும் தேசபக்தர்கட்கும், நாளை நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பேற்க இருக்கும் இளஞ்சிங்கங்களுக்கும் இந்த நாடக நூலை அன்புடன் படைக்கிறோம்.

அச்சிட்டோர்: மூவேந்தர் அச்சகம், சென்னை-14.



செக்கிழுத்த செம்மல்

கொடிகாத்த குமரன்

# பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்...

[எஸ். டி. சுந்தரம்]

'வீரசுதந்திரம்' என்னும் இந்த நாடகத்தை எழுதி அரங்கேற்றியபோது நமது நாட்டுத் தந்தை மகாத்மா காந்தி அடிகள், சுதந்திர இந்தியாவைப் பற்றிக் கூறிய சில கருத்துக்கள் நெஞ்சத்தில் எழுந்தன பெரியோர் களது பொன் மொழிகளை நினைவுபடுத்திக் கொண்டால் தான், இந்த நாடகத்தைக் காண வேண்டிய அவசியம் நமக்கு நன்கு புலப்படும்.

அண்ணல் கூறுகிறார்! 'சுதந்திரம் பெற்றது பெரிய காரியம் அல்ல! மக்கள் கட்டுப்பாடான முறையில் நடந்து கொண்டால்தான் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க முடியும். 'கிராமங்கள் ஒவ்வொன்றும் சகல அதிகாரங்களையும் பெற்ற பஞ்சாயத்துக் குடியர சாக இருக்க வேண்டும்' 'சுதந்திர இந்தியாவில், மனித சக்தியை வேலையின்றி முடக்கி வைப்பதும், அதிகாரங் களைச் சிலரிடமே குவிப்பதுமான யந்திரவாழ்க்கைக்கு இடமே கிடையாது.'—

சுதந்திர இந்தியாவைப் பற்றி அண்ணல் காந்தி இப்படிக் கனவு கண்டார். ஆனால் இன்று நம் நாடு ஜீவனற்ற ஒரு யந்திர இந்தியாவாக மாறிவரும் கொடு மையைப் பார்க்கிறோம் இது ஏன்?

அடுத்து என் நினைவுக்கு வந்தது பேரறிஞன் ரஸ்கின் (Ruskin) அவர்களது பொன்மொழி, 'Art of

making yourself rich in the ordinary mercantile Economist's sense, is the art of keeping your neighbour poor' அதாவது, 'நாம் மட்டும் மேலும் மேலும் வியாபார ரீதியில் பணக்காரன் ஆகவேண்டும்' என்று முயற்சிக்கும் கலை, நமது அண்டை வீட்டாரை மேலும் மேலும் ஏழையாக்க நாம் செய்யும் கலையாக முடிந்து விடும், என்று கூறுகிறார்.

அடுத்து என் நினைவுக்கு வந்தது, ஆங்கிலப் பேராசான் சார்லஸ் டிக்கன்ஸ்! பிரஞ்சுப் புரட்சியின் பின்னணியில் தீட்டிய உயிரோவியமான 'Tale of Two Cities' 'இரு நகரங்களின் கதை' என்ற அமர காவியத்தின் சில வரிகள்! அவர் கூறுகிறார் :—

'அது மிக மிகச் சிறந்த காலமாக இருந்தது! அதுவே மிகமிக மட்டமான கால மாகவும் இருந்தது. அது வெற்றி நிறைந்த சொர்க்கமாக இருந்தது. அதுவே தோல்வியின் நரகமாகவும் இருந்தது; ஆங்கே எல்லாம் நிறைந்திருந்தது! ஆங்கே எதுவுமே இல்லாத வறுமை நிலையும் இருந்தது! அறிவுத் திறம் நிறைந்த காலமும் அதுதான். முட்டாள்களின் முழு ஆதிக்கம் நிறைந்த காலமும் அதுதான்! ஆயிரமாயிரம் அழகு மலர்கள் பூத்துக் குலுங்கும், இளவேனிற் பருவமும் அதுதான்! முதுமையின் நடுக்கம் நிறைந்த இலையுதிர் காலமும் அதுதான்! அங்கே செல்வக் கொழிப்பு ஒருபுறம்! வறுமையின் கொதிப்பு மறுபுறம்! பிரபுக்களின் கும்மாளம் ஒருபுறம்! பராரிகளின் பட்டினி ஓர்புறம்! அந்தக் காலம் ஏறக்குறைய இந்தக் காலத்தைப் போலவே இருந்தது' என்கிறார்.

மேலும் கூறுகிருர்: 'மனித அஜாக்ரதை யினுலும் கெட்ட நடத்தையாலும், ஏற்படும், கொடிய நோய்கள், மக்களில் நல்லவன் என்றும், தீயவன் என்றும், ஏற்றத் தாழ்வு பார்க்காமல் எப்படி வேகமாகப் பற்றிப் பரவு கிறதோ, அதேபோல், ஒரு அரசாங்கத்தின் ஈவு இரக்கமற்ற அலட்சியத்தினுலும், பொறுக்க முடியாத கொடுங்கோன்மையினுலும், உற் பத்தியாகும், பயங்கரமான புரட்சித் தீயும், மக்களிடையே நல்லவரென்றும் கெட்டவ ரென்றும் பாரபட்சம் பார்க்காமல் மொத்தச் சமுதாயத்தையே பொசுக்கிச் சாம்பலாக்கி விடுகிறது.'

என்று நூறு ஆண்டுகட்குமுன், எழுதிய அந்த சிந்தனைச் சிற்பியின் எழுத்தோவியம், என்றும் உண்மை தான் என்பதை, இன்றைய நமது நாடு நிரூபணம் செய்து வருவதைப் பார்க்கிருேமே! இது எவரால் வந்த வினை? இந்த அவல நிலை வரக்காரணம் என்ன?

இதற்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் நமது வள்ளுவர் பெருந்தகையின் ஒரு திருக்குறள் நம்மை மிக மிகச் சிந்திக்க வைக்கிறது.

'எற்றிற்குரியர் கயவர்? ஒன்று உற்றக்கால், (தம்மை) விற்றற்குரியர் விரைந்து'—என்கிறது குறள்.

பொருளும் அதிகாரமும் சேர்ந்தால் எவ்வாறு மனிதன் தனது ஆத்மாவையே, தனது இலட்சியத்தையே, விற்றுவிடுகிருன் என்பதை, பொருட்பாலின் கடைசி அதிகாரத்தில், வரும் இந்தக் கடைசிக் குறளில் சுட்டிக் காட்டி, இன்றைய அவல நிலையை உயிர் துடிக்க வைக் கிருர். 'என்னடா இது? இந்த நாடகத்திற்கும்

இத்தகைய உயர்ந்த ஞானிகளின் எண்ணங்களுக்கும் என்ன சம்பந்தம் 'என்று வாசகர்கள் நினைக்கலாம். என்ன செய்வது? வீர சுதந்திரத்திற்காக உயிர்விட்ட பெரியவர்கள் எல்லாம் பெரும் ஞானிகள். ஆதலால், இவர்களைப்பற்றி எண்ணம் வருவது இயற்கை! மேலும் இந்தப் பொய்யா மொழிகளை, அடிக்கடி எண்ணுவதால், இன்று, சுதந்திரம் என்ற பெயரால் நடக்கும் பொய்யான தீமைகள் மறைய வழியுண்டு என்று தோன்றுகிறது.

மேலும் நாடகம் என்றால் ரசிகர்களை ஒருபடியாவது உயர்த்துவாதாக அமைதல் வேண்டும், என்பதும் ஆன்றோர் கருத்து. நாடகம் என்பது வெறும் கேளிக்கை கூத்து மட்டுமல்ல—மனதை உயர்த்தும் ஒரு மகாசக்தி அது! நாடகத்தைப் பார்ப்பவரைவிட, நாடகத்தில் பாத்திரமேற்று நடிக்கும் கலைஞர், மூன்றடி உயரத்தில், மேடையில் நின்று நடிப்பதன் அர்த்தமென்ன? பார்ப்பவர் எல்லோருக்கும் தன் நடிப்பின் ஆற்றல் தெரியவேண்டும் என்பது ஒன்று நடிகர்பேசும் பேச்சுக்கள் அரங்கத்தைப் போலவே கொஞ்சமாவது உயர்ந்ததாக அமைதல் வேண்டும், என்பது மற்றொன்று அதனால்தான் மிக உயர்ந்த செல்வமான, வீர விடுதலையின் சில சிறப்பான பகுதிகளை, இந்த நாடகத்தின் வாயிலாக அரங்கேற்றத் துணிந்தேன்.

நாம் பெற்ற சுதந்திரம், ஏதோ வெள்ளைக்காரன் பார்த்த ஒரு சில உத்தியோகங்களை நம்ம ஆட்கள் சில பேர் கையில் ஒப்படைப்பதற்காக மாத்திரம் அல்ல வெள்ளையனின் பிரித்தாளும் கொள்கையை வாங்கி நம்ம ஆட்களின் கையில் ஒப்படைக்கும் கீழ்த்தரமான தொரு அரசியல் சூழ்ச்சிக்காக வாங்கிய சுதந்திரமல்ல இது! அத்தகைய கேவலமான சுயநலச் சுதந்திரத்தைப்

பெறுவதற்கு திலகர், வ.உ.சி. காந்தி, லஜபதி போன்ற மகான்களும், தாகூர், பாரதி போன்ற மகாகவிகளும் நேதாஜி, பகத்சிங், குமரன் வாஞ்சி போன்ற வீரப்பெருந் தகைகளும் தேவையில்லை.

ஒருசில இராணுவ வீரர்களையோ, அல்லது ஒருசில வக்கீல் பேச்சாளிகளையோ கொண்டு, அத்தகைய அரை குறைச் சுதந்திரத்தை நாம் அடைந்திருக்க முடியும். வெள்ளையனுடன் ஒரு சமரச ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு, அவன் அமைத்த காமன்வெல்த்தில் நம் நாட்டுப் படிப்பாளிகளும் சுகமாகப் பதவி வகித்துக் காலங்கழித்திருக்க முடியும்! கேவலம் உத்யோக மாற்றங்களுக்கல்ல நமது விடுதலை. அதிகார மாற்றங் களுக்கல்ல அரசியல் சுதந்திரம்! திருடர்களின் பதவி வெறிக்காக மட்டும் அல்ல வீரசுதந்திரம்! இந்த நாடு இமயம்போல் உலகரங்கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். தனக்கு மட்டுமல்லாமல் தாரணிக்கே ஒரு நாகரிக அரணாக விளங்க வேண்டும். அதற்கேற்ற படி பாரதநாடு, 'முன்னைப் பழமைக்கும் முந்தும் பழமையதாய், பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியதாய்' விளங்க வேண்டுமெனக் கனவு கண்டார்கள் பெரியோர்கள்.

'அகிலத்தில் சமாதானம் நிலவ வேண்டும், அதற்கு இந்தியா உதவ முடியும் —அத்தகைய இந்தியா சுதந்திர மாகச் செயல்படும் உரிமை வேண்டும், அதற்காகவே, விடுதலை வேண்டுகிறோம், என்றுதான்' வரலாறு போற்றும் நமது வீரத் தலைவர்கள், மகா கவிஞர்கள், மாவீரர்கள், வாலிபச் சிங்கங்கள் அனைவரும் தியா கத்தின் பலிபீடத்திலே தங்கள் உடல், பொருள், ஆவி, சொந்தம், பந்தம் சுகம் அத்தனையையும் பலிதானமாகக்

கொடுத்து, வீரசுதந்திரத்தை நிலைநாட்டினார்கள். இந்திய சுதந்திரம் ஏதோ சும்மா வந்த சுக்குமிளகல்ல. ஏதோ சிலரது பேச்சால் வந்துவிட்ட சுதந்திரமல்ல. இது வீர விடுதலைஎன்பதை எவராவதுமறந்தால், அவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள் என்றுதான் வரலாறு தீர்ப்பளிக்கும்!

ஓராயிரம் ஆண்டு போராயிரம் செய்து, நூறுயிரம் உயிர்களைப்பலியிட்டுப் பெற்றது வீர சுதந்திரம்! வெற்றியின் சாசனம்! இந்த விடுதலை வரலாற்றின் மகா காவியத்தில் சில ஏடுகளை, சில வீரர்களைப் பற்றிக் கூறுவதே, இந்த நாடகத்தின் குறிக்கோள்.

சுதந்திரத்தின் அடிப்படையை அறிந்து கொள்ளாமலே, நாம் உரிமைகளைப்பற்றிப் பேசுகிறோம். கடமைகளைப் பற்றிப்பேசவே கசக்கிறது நமக்கு. 'வீடு வாழ, நாடு உயர, வேலை செய்' என்றால் கோபம் வருகிறது! 'உலகம் எக்கேடோ கெட்டுப் போகட்டும். நீ மட்டும் நன்றாகக் குடித்துவிட்டுப் படுத்துத் தூங்கிக் கொண்டே இரு'' என்று எவனாவது சொன்னால் அந்தப் பேச்சு இனிக்கிறது. அப்படிப் பேசுபவரின் திருவடிகளில் மலர்முடி சூட்டிவிட்டு, இனிமேல் நமக்கென்ன குறை; எல்லாவற்றையும் இந்தப் பேச்சுக் கடவுளே நிறைவேற்றி விடும், என்று தூங்கப் போய்விடுகிறோம்.

'கடமைகளை ஆற்றும் கையாலாகாதவனுக்கு உரிமை வாழ்க்கையில்லை. 'தன் வீட்டையும் தன் மனைவியையும் மற்றொருவன் காப்பாற்றுவான்' என்று நினைக்கும் பேடி மகன் ஒருவனுக்கு, அந்த வீட்டில் என்ன மரியாதை இருக்கும்? வந்தவன் போனவனுக்கெல்லாம் அந்த வீடும்; வீட்டில் இருப்பவர்களும், சொந்தமாகி, நாளடைவில் அடிமைகளாகி விடுவார்களல்லவா. 'அதைப்போல் கடமை செய்யும் ஆற்றலற்றவர்கள்'

வாழத் தகுதியற்றவர்கள். ஏதோ தேர்தல் கோமாளிகளிடம் இந்த நாட்டின் உரிமையை அடகு வைத்து விட்டோ, அல்லது தேர்தல் சமயத்தில் ஓட்டுரிமையை ஈனவிலைக்கும் போனவிலைக்கும் விற்று விட்டோ, குடிகேடர்களாய், அடியார்க்கு அடியர்களாய், வாழ முடியும் என நினைக்கிறார்களே! இது நியாயமா? இந்த அபாயகரமான நிலையில் ஏதோ சில நாள் சுகம் அனுபவிக்கலாம். தூங்கலாம். தூக்கம் கலைந்து எழுந்ததும் தாங்கள் செய்த தவறுகள் புரிகின்றன! மனச்சான்று விசுவரூபம் எடுத்து அவர்களை வதைக்கிறது! அந்த மனச்சான்றை மீண்டும் அடக்கி வைக்க மேலும் அரசியல் போதைகள்! அறிவற்ற கோணற் செயல்கள். இத்தியாதி...இத்தியாதி...இதெற்கெல்லாம் காரணம் என்ன? முன்னை நம் அன்னை நாட்டில் மூண்டிருந்த பெருமையறியாத மூடத்தனந்தான். விடுதலை வந்து முப்பது ஆண்டுகளில், நமது முந்தையரின் வீரத்தை அவர்கள் ஆற்றிய தியாக வரலாற்றை, இளைய தலைமுறைக்குச் சொல்லிக்கொடுக்க மறந்தேவிட்டோம்! இல்லை. மறுத்துவிட்டோம்! நாம் அனுபவிக்க விரும்பிய சில கீழான விளம்பரத்திற்காக, நமது முன்னோரின் மேலான பெருமையை இரும்புத்திரை போட்டு மறைத்துவிட்டோம். நம்மை மட்டும், பெரிதுபடுத்தி மக்களுக்கிடையே ஊர்வலம் வந்தோம், தேர்வலமும் வந்தோம். தேர்தல் வரங்களையும் பெற்றோம்.

புதிய வால் நட்சத்திரங்களின் புகழ் மேகத்தில், பழைய சூரியனும் சந்திரனும் சற்று மறைவதுபோல் நமது முன்னோடிகளான தியாக வீரர்களது வரலாற்றை திரைக்குப்பின் மூடி மறைத்தார்கள். மக்களின் மறதியை தங்களது பதவிப் பித்தலாட்டத்திற்கு மூலதனமாக்கிக் கொண்டு, புதுப்புது மேடைகளில் போலி நாடகம் போட்டார்கள். சில புதுப் புத்திசாலிகள்!

பதவித் திரை அற்றுவிழும் காலம் வந்தது. போலிப் புலி வேடம் கலைந்தது. உண்மைகளை உலகம் உணரும் அவசியத்தைக் காலப் பேரொளி மீண்டும் ஏற்படுத்தி விட்டது! அன்று வீர சுதந்திரத்தை வாங்கிய தியாகத் தளபதிகளைப் பற்றி எழுத, அந்நிய ஆட்சியின் தடை அமுலில் இருந்தது. ஆகையால், கற்பனைப் பாத்திரங்களைக் கொண்டு 'கவியின் கனவாக்கி' நாட்டின் அகத்தை, பல நாடகங்களாக ஆக்கிக் காட்டினேன். இன்று உரிமையுள்ள காலம். வரலாற்று உண்மைகளைக் கலை வடிவமாக, இன்றைய இளைஞர்களுக்குச் சொல்லும் பொறுப்பை நல்லதொரு அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இப்படித்தான் மற்ற நாடுகள் செய்கின்றன. அதனால்தான் அந்த நாட்டின் இளைஞர்களுக்கு தேசபக்தி நிறைவாக இருக்கிறது. தேசபக்தி இருந்தால்தான் சோதனைச் சமயத்தில் சுதந்திரத்தைக் காப்பாற்றும் வீரசக்தி மக்களுக்கு வரும்.

'Eternal vigilance is the price for freedom' 'வீர விடுதலையைக் காக்க, இடையீடற்ற விழிப்புணர்வு நமக்கு வேண்டும்.' என்பதை மறக்கக்கூடாது. இன்றும் ஒரு ரஷ்ய வாலிபனைச் சந்தித்தால், அமெரிக்கனைப் பார்த்தால்,

'We have won a patriotic war against Nazis!'

'ஒரு மாபெரும் தேசபக்திப் போராட்டத்தில், நாசிகளை வெற்றி கண்டோம்' என்று பெருமிதத்தோடு நெஞ்சு நிமிர்ந்து கூறுகின்றான். அத்தகைய பெருமிதம் நமது இளைஞர்கள் பெற வேண்டும். ஒரு நாட்டின் ராணுவம் மட்டும் ஒரு நாட்டைக் காப்பாற்றிவிட முடியாது. நெருக்கடியான சோதனைகள் நமது சுதந்திரத்திற்கு வரும்போது, மக்கள் எல்லோருமே வீரசக்திகளாக மாறி நாட்டைக்காக்க வேண்டிய நேரம் வரும்! அப்படி மனிதர்

களை வீரர்களாக்கவல்ல பெருவீரர்களின் கதையின் கலை வடிவமே இந்த 'வீர சுதந்திரம்' என்னும் நாடகம். இதில் ஆங்காங்கு வரும் சில இணைப்புக் கற்பனைப் பாத்திரங் களைத் தவிர, மற்றவை யாவும் உண்மைப் பாத்திரங்கள். உயிர்கொடுத்த தெய்வங்கள். சரித்திரத்தின் சான்று கள். வரலாற்றின் வலிமைகள்! இந்திய விடுதலை மாளி கையின் அஸ்திவாரங்கள்

இந்த அஸ்திவாரத்தின் வலிமையை அறிந்தால்தான் இன்று கட்டிக் குடியிருக்கும், சுதந்திர மாமணி மாளிகை யின் அருமை பெருமைகள் நமக்குத் தெரியும். இன்று ஜனாதிபதியின் மாளிகையில், புதுடெல்லியின் பார்லி மென்ட் கட்டிடங்களில், இருநூறு ஏக்கர் நிலத்தில் அமைந்த மொகல்நந்தவனத்தில, கோடானு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பேரணி மாட கூடங்களில், ஆயிரமாயிரம் சிப்பாய்கள் ஆலவட்டம் போட, பாரதத் தின் ஜனாதிபதி பவனி வருகிறார் அந்த மாளிகையில் ஆயிரமாயிரம் சிகப்பு ரோஜா மலர்கள் மலர்கின்றன மணம் வீசுகின்றன என்றால், அந்த மணத்தில் ஜனாதிபதி மனமகிழ்ந்திருக்கிறார் என்றால், அந்தச் செம் மலர்களின் மகரந்த மணத்தில், செங்கோட்டையின்கொடியில், நம் தேசீயத் திருப்பூர் குமரனின் இரத்தம் துடிக்கிறது. தூக்குமேடையில் பகத்சிங் கக்கிய புரட்சி இரத்தம் கனல்கிறது! நேதாஜியின் துடி துடித்த இதய ரத்தம், ஜனாதிபதி மாளிகை தோட்டத்தைச் செம்மையாக்கியுள்ளது! அன்னை சொரூப ராணியின் தலையி லிருந்து கொட்டிய இரத்தம், வீரர் சிதம்பரம் கல்லுடைத்த கரங்களின் இரத்தம்; லஜபதிராயின் வீர நெஞ்சம் வடித்த குருதி; தில்லையாடி வள்ளியம்மையின் உயிர்; பாபு கனுவின் இள மண்டை வெடித்துச் சிதறிய கபாலக் குருதி! மற்றும் பெயர் தெரியாத லட்சோபலட்சம் இளஞ்சிங்கங்கள், வீரச் செம்மல் களின் இதயமடை திறந்து கொட்டிய தியாகக் குருதி யின் உரத்தினால் பயிரானவைதான் ஜனாதிபதி மாளிகை

யில் மலரும், சிகப்பு ரோஜாக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. நினைவிருக்கட்டும்! நீங்கள் அனுபவிக்கும் போகங்கள்யாவும் ஏழையின் தியாகத்தால் வந்த யோகங்கள்!

எண்ணற்ற தியாகிகளது எலும்புக் கூடுகளில் கட்டப்பட்டவைதான் சுதந்திர நாட்டின்—ஜனுதிபதி—கவர்னர்களின் மாளிகைச் சுவர்கள், சட்டசபைகளின் கட்டிடங்கள், என்பதை ஜனுதிபதிகளே! கவர்னர்களே! மந்திரிகளே! எம்.பி.க்களே எம்.எல்.ஏ க்களே மறந்து விடாதீர்கள்! மறந்தால் உம்மை உலகம் மறந்துவிடும் தோழர்களே மறந்துவிடும். தயவுசெய்து மறக்கப்படும் பொருள்களாகி விடாதீர்கள். வரலாற்றை மறவாமல் இருட்டடிப்புச் செய்யாமல், உருப்படியாக மக்கள் மனக்கோயிலில் என்றும் வீற்றிருக்கும் பெருமையைப் பெறுங்கள்.

ஜனுதிபதிகள் கவர்னர்களின் மாளிகைகளில் சுதந்திர விழா குடியரசு விழா இன்னும் என்னென்னவோ ஆடம்பர விருந்து விழாக்கள் எல்லாம் நடைபெறுகின்றனவே! அந்த திருவிழாக்களில் ஒரு நாளேனும் நமக்காக உயிர் விட்ட தியாகிகளின் திருவுருவங்கள், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதுண்டா? ஏன்? வைக்கப் பயப்படுகிறீர்களா? அல்லது மறந்து விடுகிறீர்களா? வைத்தால் நமது வரலாறு புதிய வலிமை பெற்றுவிடும் என்று கூச்சப்படுகிறீர்களா? பயப்படுகிறீர்களா? இல்லை! கேட்க நாதியில்லை என்ற அகம்பாவமா?

இந்த நாடகத்தைக் கண்டு இத்தகைய உயிர்த் துடிப்பை நாம் ஒவ்வொருவரும் பெறவேண்டும். அந்த இதயத் துடிப்பிலே, ஒரு புதிய கடமையுணர்ச்சி உதயமாக வேண்டும். அதுவே நமது பிரார்த்தனை! இந்த இலட்சிய வேகத்தின் உயிர்த்துடிப்பே இதில் வரும் காட்சிகள்! காணுங்கள்-கருத்தினை எழுதுங்கள்.

மாயத்திரை விலகட்டும்: தூய காவியம் தொடரட்டும். மன அரங்கத்தில் வீர ஒளி பரவட்டும். தேசபக்தியை, தேசீய சக்தியை அறிந்து பெருமைப்படுத்தும் சில வீரர்களுக்கு நமது இதயக்கனிந்த நன்றி.

“இனி ஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்...... ......? ...வேண்டாம், ஜகத்தினை அழிக்கும், புரட்சி எரி மலை சீறிப்பாயுமுன்பு இந்த நாட்டில் நல்லது நடக்கட்டும். சுத்த வீரர்கள் வெல்லட்டும். மகாத்மாவின் சத்ய வசனங்கள் நிறைவேறட்டும். அரசியல் மந்திரங்களும் ஆதிக்கவாதிகளின் தந்திரங்களும் மறையட்டும்! கடமை வீரர்களது காரிய உறுதிபெருகட்டும். இந்தியாவின் வீரவிடுதலைக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பிரிவினை வியாதி குணமாகட்டும்—சத்தியம் வெற்றிபெறட்டும்!



# ஆசிரியர் முன்னுரை

இந்திய சுதந்திர வெள்ளிவிழாவை முன்னிட்டு நாடகச் சக்ரவர்த்தி சி. கன்னய்யா, நாடகப்பெரும் புலவர் பரிதிமாற் கலைஞர், நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோரது நூற்றாண்டு நினைவு, நாடகவிழாவில் இந்தநாடகம் அரங்கேற்றப்பட்டது. இது வரை இந்த நாடகம் பலமுறை நடந்துள்ளது. இப்போது நூல்வடிவாக வருகிறது— ஆதரவு நல்கும் ரசிகப் பெரு மக்கட் சபையினர்களுக்கும், எங்கள் நன்றி. இந்த நாடகத்தை ஒவ்வொருகல்லூரியிலும் நாடக ஆசிரியரின் அனுமதி பெற்று உரிய கௌரவத்தொகை வழங்கி நடத்தலாம—என்றே நூல்வடிவில் வெளியிடுகிறோம். பொது நூலகங்களிலும், கல்வி நிலைய நூலகங்களிலும் இதை வாங்கி வைத்தால் இளைய சமுதாயம், நமது வீர விடுதலை வரலாற்றின் சில பகுதிகளை அறிந்து பெருமைப்படும் என்று கருதுகிறோம்.

இந்த நாடகத்தில் வரும் பாத்திரங்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கிறதே என்று மலைப்புற வேண்டாம் திறமையுள்ள நடிகர்கள் தங்கள் கலைத் திறமையைக் காட்டவும். சிரமத்தைக் குறைக்கவும் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது இந்நாடகத்தில் ஒரே நடிகர் பல வேடங்களைத் தாங்குவதற்கேற்றபடி நாடகத்தின் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளதைக் கவனித்தால், நாடக அமைப்பு எளிமையாக முடியும். வாஞ்சி— திருப்பூர்குமரன்- எம். என். ராய்- மூன்று வேடங்களை

யும் ஒருவரே ஏற்று நடிக்கலாம். மூன்றும் மூன்று வேறு பட்ட நடை உடை கால மாற்றங்களைக் கொண்டவை.

மேஜர்கண்ணன்—பகத்சிங்— காந்திபக்தன் கந்த சாமி இந்த மூன்று பாத்திரங்களையும் ஒருவரே ஏற்று நடிக்கப் போதிய இடைவெளியும் அவகாசமும் இருக் கிறது. வ. உ. சி. தலைவர் பகத்சிங் தந்தை, கடைசிக் காட்சியில் வரும் ஆசிரியர் இவை போன்ற பாத்திரங் களையும் ஒரே நடிகர் ஏற்று நடிக்கலாம் அதேபோல்—பொன்னம்மாள்-பகத்சிங்கின் தாய் இரண்டு வேடங் களையும் ஒரே நடிகை ஏற்றுத் தமது திறமையை வெளிப் படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. இதைப் போன்ற நாடகத்தை இப்படித்தான் நடத்த முடியும்-நடத்தலாம் என்பதை அனுபவத்தின் வாயிலாக உங்களுக்குக் கூறிக் கொள்கிறோம். மற்றுமோர் முறை, எமது நன்றியை வீரர்கட்கும் ரசிகப் பெருமக்கட்கும் பணிவன் புடன் படைக்கிறோம்.

அன்புள்ள,

**எஸ். டி. சுந்தரம்**



# வீர சுதந்திரம்

(நாடகம்)

## பாத்திரங்கள்

1. மேஜர்-டாக்டர் கண்ணன்
2. ஆஷ்
3. விஞ்ச்
4. கலெக்டர்கள் P. A.
5. வ. உ. சிதம்பரம்பிள்ளை
6. சுப்பிரமணியசிவா
7. வாஞ்சிநாதன்
8. சி. ஐ. டி. கிட்டு
9. வாஞ்சியின் மனைவி பொன்னம்மாள்
10. மாடசாமி
11. சங்கரன்
12. நீலகண்ட பிரம்மச்சாரி
13. பாரதியார்
14. பாரதிதாசன்
15. அரவிந்தர்
16. ஜெனரல் டயர்
17. சான்டர்ஸ்
18. லாலா லஜபதிராய்
19. எம் என். ராய்
20. பகத்சிங்
21. ராஜகுரு
22. சுகதேவ்
23. கிஷண்சிங் (பகத்சிங்கின் தந்தை
24. B. S. சுந்தரம்
25. ராமன் நாயர்
26. குமரன்
27. இன்ஸ்பெக்டர் அகமட்
28. திருப்பூர் டாக்டர் கோபால மேனன்
29. சத்தியாப் பிள்ளை
30. கத்தியாப் பிள்ளை
31. உத்தியாப் பிள்ளை
32. சோணாசல பூபதி
33. காந்திபக்தன் கந்தசாமி
34. ஆசிரியர்
35. வசந்தி (புரட்சிப் பெண்)
36. வித்யாவதி தேவி (பகத்சிங்கின் தாய்)
37. கருப்பாயம்மாள் (குமரனின் தாய்)

மற்றும் போலீஸ், பொதுமக்கள், தலைவர்கள், சாரணர்கள் முதலியோர் பின்னணிக் குரல்கள்

# பின்னணி முன்னுரை

## காட்சி-1

[நாடகக் குழுவின் பிரார்த்தனைப் பாடல் முடிந்ததும் கணீரென்று கேட்கும் இரண்டு பின்னணிக் குரல்கள் கீழ்க்காணும் முன்னனி உரையைக் கம்பீரமாகப் பேசட்டும்]

பின்னணிக்குரல் : பெரியோர்களே! தாய்மார்களே! உங்களுக்கு எம் தலைதாழ்ந்த வணக்கங்கள். ஒரு நாட்டின் சுதந்திரம், அந்த நாட்டின் இழக்க முடியாத செல்வம் அந்த விடுதலை வரலாற்றின் மறக்க முடியாத சில சம்பவங்களைக் கொண்ட 'வீர சுதந்திரம்' என்னும் இந்த நாடகத்தை உங்களுக்கு வழங்குகிறோம்.

குரல்-1 : உலக மாவீரன் என்று சரித்திரம் கூறும் அலெக்ஸாண்டர் முதல், நேற்று வந்த அயூப்கான் வரை எத்தனையோ படையெடுப்பாளர்களை, நமது புண்ணிய பாரதநாடு பல போர்க் களங்களிலே சந்தித்திருக்கிறது! முறியடித்திருக்கிறது!

குரல்-2 : எந்தப் படையெடுப்பாளனும் இந்த நாட்டை முழுமையாக வெற்றி கொள்ள முடியவில்லை. வெற்றிகொள்ள முடியாது.

குரல்-1 : இடைக்காலத்தில் செயலற்றுக் கிடந்த தாய கத்தில், நமக்குள்ளே இருந்த ஜாதி-சமய-மொழி—பங்காளிப் பகைமைகளால்—பதவி வெறிப் பூசல்களால் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் இந்த நாடு அடிமை இருட்டிலே சவவுறக்கம் எய்திக் கிடந்தது.

குரல்-2 : அடிமைப் பேருறக்கத்தைத் துரத்தி, மக்களை மனிதர்களாக்கப் புதிய பூபாளம் பாடினுர் மகாகவி பாரதியார்! தெய்வத் தமிழில் திருப்பள்ளியெழுச்சிப் பாடி, சுதந்திரப் போருக்கு நாட்டை ஆயத்தப் படுத்தினுர்!

குரல்-1 : ஓராயிரம் ஆண்டு உறங்கிக் கிடந்த பின்னர் வாராது போல் வந்த மாமணியாம் சுதந்திரத்தைப் பெற்ருேம்! நமது விடுதலைக்கு வெள்ளி விழாவும் கொண்டாடிவிட்டோம்!

குரல்-2 : ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ல் குடியரசுத் திருநாளும் ஆகஸ்டு 15ல் சுதந்திர விழாவும் கொண்டாடுகிருேம்! கோட்டையிலே கொடி பறக்க விடுகிருேம்! பெரிய பெரிய பதவிகளை வகிக்கிருேம்! பல பேறுகளை அனுபவிக்கிருேம்!

குரல்-1 : இதற்கெல்லாம் காரணம், நமது பெரியோர்கள் செய்த மகத்தான தியாகத்தால் நாம் பெற்ற வீரசுதந்திரம்!

குரல்-2 : சுதந்திரம்! அது நம் வாழ்வின் ஜீவன் வரலாற்றின் பெருமை! தியாகத்தின் பரிசு! தீரத்தின் காவியம்! வீரத்தின் விமரிசனம்! சுட மரியாதையின் ஆத்மா! நாகரிகத்தின் சின்னம்! நாம் இன்று பெற்றிருக்கும் பெருமைகளுக்கெல்லாம் காரணம் சுதந்திரம்! இதைக் கண்ணெனக் காப்பது நமது கடமை!

குரல்—1 : இக்கடமையிலிருந்து நாம் தவறினல், நாளை நம்மைச் சரித்திரம் கேலி செய்யும்! புதுவுலகம் வசைபாடும்! மனித இனமே நம்மை 'சீ' என ஒதுக்கித் தள்ளிவிடும்

குரல்-2 : சுதந்திரத்தைக் காக்க வேண்டுமானல் அதன் பெருமையை நாம் முதலில தெரிந்துகொள்ள வேண்டும்!

குரல்-1 : அதை அடைவதற்கு நமது பெரியோர்கள் பட்ட எண்ணரிய இன்னல்களை எண்ணிப் பார்க்க வேண்டும்!

குரல்-2 : நாம் நாள்தோறும் எத்தனையோ கற்பனைக் கதைகளைப் பொழுதுபோக்காகக் கண்டு மகிழ்கிறோம்! ஆனல் நமக்காக, நம் பொருட்டு, நாம் வாழ, உயிர்நீத்த வீரர்களின் கதையை, ஒரு நாளாவது கேட்கவேண்டும்! எண்ணிப் பார்க்க வேண்டும். இதுவே அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் காணிக்கை!

குரல்—1 அவர்கள் தியாகத்தின் சின்னமாக—நமது! மானத்தின் உருவமாக, இதோ விண்ணுயர்ந்து

நிற்பது நமது தாயின் மணிக்கொடி! அது நமது இலட்சிய வானத்தின் துருவ தாரகை. இதய வானின் காலைக் கதிரொளி! நமக்காக உயிர்நீத்த வீரர்களின் ஓயாத உயிர்த் துடிப்பே இந்தக் கொடியின் உருவில் நம் முன் காட்சி தருகிறது! தாயின் மணிக்கொடி!—நம் தாயின் மணிக்கொடி!



## காட்சி : 2

**காலம் :** *பகல்*

**இடம் :** *ஒரு பூந்தோட்டம். ஒருபுறம் காந்தி சிலை மறு புறம் கஸ்தூரிபா சிலை. நடுவில் ஒரு தேசீயக் கொடி!*

**நிழ்ச்சிய் :** *சாரணர்களின் சுதந்திர விழா.*

**பாத்திரங்கள் :.** *டாக்டர் மேஜர் கண்ணன், சாரணச் சிறுவர்கள் முதலியோர்.*

[*திரை உயர்கிறது. ஒளி பரவுகிறது. இருபது இளைஞர்கள் சாரணர்கள் உடுப்பில் ஆளுக் கொரு தேசியக் கொடியை ஏந்தி, வீரநடை போட்டவண்ணம் பாடி-குடியரசு தினத்தைக் கொண்டாடுகிறார்கள். எல்லோரும் 'தாயின் மணிக்கொடி' என்ற பல்லவியைப் பாடட்டும்· ஒவ்வொருவரும் ஒவ்வொரு அடியைப் பாடட்டும்.*]

தாயின் மணிக் கொடி
　　தாயின் மணிக்கொடி! (தாயின்)

காந்தி தந்த செல்வமாம்
　　காக்க வேண்டும் விடுதலை—
ஏந்தி நிற்கும் எமது நாட்டின்
　　ஈடிலா மணிக்கொடி! (தாயின்)

திலக தேவன் தந்தது
　　தீர மாதவக் கொடி
தியாகியாம் சிதம்பரம்
　　தந்தவீர நற்கொடி! (தாயின்)

குமரன் ஆவி தந்தது
கோடி கோடி வீரர்கள்
அமரரான தியாகிகள்
அவர்கள் தந்த கொடியிது! (தாயின்)

அமுதமான எமது தாய்
அன்னை கஸ்தூரியும்
தமிழின் வீர வள்ளியம்மை
தான்படைத்த நற்கொடி! (தாயின்)

இமய கங்கை காவிரி
எமது அன்னை குமரியும்
சமய பேதமின்றிப் பாடும்
சத்தியத் தருட்கொடி! (தாயின்)

பாரெலாம் மதித்திடும்
பேரருட் பெருங்கொடி
பாரதி கவிஞர் தெய்வம்
பாடிவைத்த நற்கொடி! (தாயின்)

போபடைத்த விடுதலை
பெற்றதிந்த நற்கொடி
பார்த்ததும் வணங்க வேண்டும்
பெருமைதந்த நற்கொடி!
ஜெய்ஹிந்த்...ஜெய்ஹிந்த்...ஜெய்ஹிந்த்

[இந்தச் சமயத்தில் விழாவிற்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டிருந்த இராணுவ டாக்டர் கண்ணனை மற்ெருரு சாரணச் சிறுவன் அழைத்து வருகிறுன். ஒருவேட்டு முழங்குகிறது இராணுவ மேஜர் உடுப்பில் அவன் வந்ததும். கொடி வணக்கம் செய்கிறுன். இளைஞர்கள் எல்லோரும் தேசிய வாழ்த்துப் பாடுகிறுர்கள்]

ஓர் இளைஞன் : மேஜர்-டாக்டர் கண்ணன்! சல்யூட்—Now National Anthem—நாட்டு வாழ்த்து.

ஜனகண மனஅதி நாயக ஜெயஹே
  பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்துகுஜ ராத மராட்ட
  திராவிட உத்கல வங்கா
விந்த்ய இமாசல யமுனா கங்கா
  உச்சல ஜலதித ரங்கா
தவசுப நாமே ஜாஹே
  தவசுப ஆசிச மாகே
காயே தவஜய காதா
ஜனகணமங்கள தாயக ஜயஹே
  பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜெயஜெய ஜெயஜெயஹே.

சாரணச் சிறுவர்கள் : ஜெய்ஹிந்த்! மேஜர் மாமா வாழ்க டாக்டர் மாமா வாழ்க! வாழ்க!

[என்று தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்]

மேஜர் : அமைதி! அமைதி! குழந்தைகளே! எனக்கு வாழ்த்து வேண்டாம். தாயின் மணிக்கொடிக்கு இவ்வளவு பக்தியோடு வணக்கம் செலுத்தும் உங்களுக்குத்தான் நான் ஆயிரம் தடவை வாழ்த்து சொல்லணும். என்னரும் நாட்டின் வருங்கால வீரச் செல்வங்களே! நீங்கள் பல்லாண்டு வாழ்க! வளமோங்கி வாழ்க என என் மனமாற வாழ்த்துகிறேன்! ஜெய்ஹிந்த்!

ஒருவர் : மாமா, உங்களுக்கு நன்றி சொல்லணுமாம். அதுக்கு உங்க உத்தரவு வேணுமாம்!

மேஜர் : ஓ! சொல்லுடா கண்ணு, சொல்லு.

சாரண இளைஞன் : எனதரும் மாணவ நண்பர்களே! நம்ம நல்லூர் கிராமத்திலே பிறந்தவர் நம்ம மாமா—டாக்டர் கண்ணன். இப்போ நம்ம இந்திய ராணுவத்திலே பெரிய மேஜர். நம்ம மாமா மாதிரி நாமும் பெரிய வீரரா இருக்கணும், டாக்டரா வரணும்—மக்களைக் காப்பாத்தணும். சோல்ஜரா வரணும்—நாட்டைக் காப்பாத்தணும். பட்டாளத்திலே இருந்து பத்து நாள் விடுமுறையில் வந்தார். வந்த இடத்திலேகூட நாம் கூப்பிட்ட உடனே வந்துவிட்டார். 'ஜெய்ஹிந்த்! வாழ்க இந்தியா' என்று பத்தாயிரம் முறை எழுதின இந்த ஏட்டையும் அவருக்கு அன்பளிப்பாகத் தருகிறோம். இப்போது நம்ம மாமா நமக்கு நம்ம சுதந்திரத்தின் கதையைச் சொல்லணும்னு கேட்டுக்கறேன். நன்றி!

மேஜர் : பாரத நாட்டின் வருங்காலப் பெரியோர்களே! நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும். நானும் உங்களைப்போல் இந்த மண்ணில—இதே ஊரில், ஒரு குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தவன்தான். என் தந்தை இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த வீரர். நாடறிந்த தேசபக்தர்! தியாக சீலர்! அவர் கடைசிக் காலத்தில், சுதந்திர நாட்டில், நான் இராணுவப் பணியாற்றி நாட்டைக் காக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படியே இராணுவத்தில் பணி புரிகிறேன். டாக்டர் பரிட்சையில் முதல்தரமாகத் தேறினேன். தனியாக டாக்டர் வேலை பார்த்திருந்தால் பல லட்சம் சேர்த்திருப்பேன். பெரிய பணக்காரனாகியிருப்பேன். ஆனால் என் தந்தை சொற்படி

இராணுவத்தில் சேர்ந்தேன். சைன படையெடுப்பில் அடிபட்டதால் என் ஒரு கண் போய்விட்டது. பாகிஸ்தான் படையெடுப்பில் ஒரு கால் நொண்டியாகிவிட்டது. ஆனால் என் மனக்கண் நன்றாகவே இருக்கிறது. என் துணிச்சல் இன்னும் நொண்டியாகவில்லை. உடலில் உயிர் இருக்கும்வரை—என்னால் முடிந்தவரை நமதருந்தாய் நாட்டுக்கு, என்னாலான பாதுகாப்புப் பணியைச் செய்வது என்று முடிவு செய்திருக்கிறேன். நமக்காக வீரர்கள் வாங்கிய நம் நாட்டின் சுதந்திரத்தை நமது உயிர்போல் காக்க வேண்டும். சுதந்திரம் நமது வீரப் பெரியோர்கள் உயிர் கொடுத்துப் பெற்றுத் தந்த செல்வம்! அதை உயிரினும் மேலாக மதித்துக் காப்பாற்றுவது இந்த மண்ணிற் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும். சரி. நன்றி. நான் வருகிறேன். வேறொரு விழாவுக்குப் போகணும். வரட்டுமா?

லீடர் : என்னங்க மாமா : சுதந்திர வீரர்களின் கதையை சொல்றேன்னுட்டு, இப்போ திடீர்னு புறப்பட்டீங்க?

மேஜர் : (சிரித்து) சொல்றேண்டா கண்ணு, சொல்றேன் அதுக்கு ஒருநாள் போதாது. வீர சுதந்திரத்தின் கதையைச் சுருக்கமாச் சொல்றேன். இந்தியத் தாயின் மணிக்கொடியின் பெருமையை அதற்காக உயிர்தந்த மகான்களில் சில வீரர்களைப்பற்றி மட்டும் இப்போ சுருக்கமாச் சொல்றேன். கவனமாகக் கேளுங்கள். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்......

[விளக்கின் ஒளி மெதுவாகக் குறையட்டும். விளக்க உரை பின்னணியில் தொடர்ந்து கேட்கட்டும் தெளிவாக, திட்பமாக, நுட்பமாக, நிதானமாக,

உறுதியாகச் சொற்கள் உச்சரிக்கப்படல் வேண்டும்.]

குரல்–1 : இருபதாம் நூற்றுண்டின் ஆரம்ப காலம்... புண்ணிய பாரதநாடு ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்த இருண்ட காலம்! இந்தியன் என்ருல், கூலி வேலை செய்யும் அனுதை என்று உலகத்தார் எண்ணத் தொடங்கிய காலம்! அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் மண்டிக் கிடந்த அந்தத் துயர நாட்களிலே...உயிரைத் துச்சமென எண்ணி எழுந்தனர் விடுதலைச் சிங்கங்கள்...

குரல்–2: மேற்கே— மராட்டிய மாநிலத்தில் மாவீரர் பாலகங்காதர திலகர்! சுதந்திர இயக்கத்திற்கு வழி வகுத்தார். ‘சுதந்திரம் எமது பிறப்புரிமை—அதை அடைந்தே தீருவோம்’ என்று சிம்ம கர்ஜனை செய்தார்.

குரல்-1 : கிழக்கே-வங்க மாநிலத்தில் அறிஞர் கோமான் அரவிந்த கோஷ், பிபின் சந்திரபால் போன்ற மேதைகள் வீரத்துடன் சுதந்திரப் போர்க்களம் கண்டனர்.

குரல்-2 : வடக்கே—பஞ்சாப் பெருநிலத்தில் ஞானப் பெருந்தகை லாலா லஜபதிராய்! அஞ்சாத சிங்கமென சுதந்திரப் போருக்கு அணிவகுத்தார். தள்ளாத வயதில் தளகர்த்தராக நின்று தன்னுயிர் நீத்தார்.

குரல்-1 : தெற்கே—கன்னித் தமிழ்நாட்டில் கப்பலோட்டிய தமிழன்! வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை,

புதியதொரு விடுதலை வேள்விக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்! தீரர் சிதம்பரத்தின் விடுதலைப் போராட்டத்தைக் கண்டு திருநெல்வேலிக் கலெக்டரான விஞ்ச் கதிகலங்கினான். அவரது நியாயவாதத்தைக் கேட்டு நடுங்கியது வெள்ளையனின் கொள்ளை நிர்வாகம்!



## காட்சி : 3

**காலம் :** பகல்.

**இடம் :** திருநெல்வேலி கலெக்டர் காரியாலயம்.

**நிகழ்ச்சி :** விசாரணை.

**பாத்திரங்கள் ;** ஆஷ், விஞ்ச், கலெக்டர் P.A., வ.உ.சி, சிவா, போலீஸ்காரர்கள், மக்கள்.

[குற்றம் சாட்டப்பட்ட வ. உ. சிதம்பரம் பிள்ளையும் சுப்ரமணிய சிவாவும் அச்சமற்ற சிங்கங்கள் போல் உட்கார்ந்திருக்கின்றனர். சப்–கலெக்டர் ஆஷ் விசாரிக்கிறான்.]

ஆஷ் : என்ன மிஸ்டர் பிள்ளைவாள், உம்ம பேரைக் கேட்டா தூத்துக்குடியே அலறுது. திருநெல் வேலியே நடுங்குது, பிகேர்ஃபுல்; (Be Careful) மிஸ்டர் பிள்ளைவாள். நீர் இந்த ஊர்லே எல்லாத் தையுமே கலக்கிக்கிட்டிருக்கீர்!

வ. உ. சி. கலக்குவது உங்கள் வேலை தெளிய வைப்பது தான் எங்கள் கடமை.

ஆஷ் : அப்ப நடந்ததே கோரல் மில்ஸ் ஸ்ட்ரைக், அதுக்கு நீர்தான் காரணம். பாவம்! அன் எஜு கேடட் லேபரர்ஸ் (Uneducated Labourers) படிக் காத ஜனங்க! அவுங்களை உங்க அரசியல் லாபத் துக்குப் பயன்படுத்தப் பாக்கிறீங்க.

வ. உ. சி. : தவறு தவறு. இருப்பவன் தரவில்லை. உழைப்பவன் வரவில்லை. இதுதான் நிலைமை; இதில் அரசியல் எதுவுமில்லை.

ஆஷ் : நீரும் சமரசம் பேச முயற்சிக்க இல்லே?

வ. உ. சி. : பேசித் தீருவதில்லையே பெரும் பசி! கொழுத்தவன் கொடுத்தால் இளைத்தவன் சிரிப்பான்.

ஆஷ் : முதலாளிக்கு லாபம் கிடைக்க இல்லையே!

வ. உ. சி. : 'முதலைக்கு மீன் கிடைக்கவில்லையே' என்று, நீர் ஏனய்யா கவலைப்படுகிறீர்? பசி அய்யா பசி! அது பற்றி எரியும் புது நெருப்பு! அதைக் காகிதத்தால் மூட நினைப்பது ஆபத்து! பேசித் தீர்க்கலாம் என்பது பைத்தியக்காரத்தனம்! துப்பாக்கியால் துரத்த நினைப்பது மிருகத்தனம்! ஏழைகளைக் காப்பதே துரைத்தனம்.

ஆஷ் : முதல்லே எல்லாத்தையும் வேலைக்கு வரச் சொல்லும் பிறகு பார்க்கலாம்.

வ. உ. சி. : பார்க்கலாம்! நொண்டிச் சமாதனம். இதை நீரே அவர்களிடம போய்ச் சொலலும்.

ஆஷ் : வாட்! நான் சப்-கலெக்டர்! பெரிய ஆபீஸர். அந்தக் கூலிக்கார பசங்ககிட்டே நான் பேச மாட்டேன்!

வ. உ. சி. : ஷட் அப்(Shut up) யாரைப் பார்த்துக் கூலிக்காரர்கள் என்கிறாய்? நாங்கள் கொடுக்கும் வரிப்

பணத்தில் சம்பளம் வாங்கும் பொதுநல வேலைக்காரன் நீ.

ஆஷ் . வாட்? வாட் யூ ஸே?

வ. உ. சி : எஸ், யூ ஆர் எ பப்ளிக் சர்வெண்ட் Yes, You are a Public Servant.) நீ ஒரு பொதுநல வேலைக்காரன்.

ஆஷ் : நோ, ஐ ஆம் ஹிஸ் மெஜஸ்டிஸ் கவர்ன்மெண்ட் ஆபீசர். ( I am his Majesty's Govt. Officer! I See) இப்பத்தான். தெரியுது. எல்லாத்துக்கும் நீதான் காரணம். சரி. நீர் போம். மேலே நான் பாத்துக்கறேன்.

வ. உ. சி. : ஓய்! மேலே பார்ப்பதென்னய்யா மேலே. முதலில் மண்ணிலே இருக்கும் மனிதர்களைப் பார்க்கக் கற்றுக்கொள்ளும்.

ஆஷ் : ஏங்கிட்டே பேசிப்புடலாம் கலெக்டர் மிஸ்டர் விஞ்ச்துரை வர்ரார். அவர்கிட்டே காட்டும் உமது சுதந்திரப் போராட்டப் பிரதாபத்தையெல்லாம்

வ. உ. சி : யார் வந்தால் என்ன. சுதந்திரம் எமது பிறப்புரிமை. அதை அடைவது எமது கடமை. ப்ரீடம் இஸ் அவர் பர்த் ரைட். வி ஷெல் ஹேவ் இட்.

[கலெக்டர் விஞ்ச்துரை வருகிறார். சப்-கலெக்டர் ஆஷ் வணங்கிவிட்டு]

ஆஷ் : குட் ஆப்டர் நூன் சார் ஆஸ் பெர் கலெக்டர்ஸ் ஆர்டர் தே ஆர் ஹியர் சார். கலெக்டர் மே டீல் வித்

தெம் சார். Good after noon sir! As Per Collector's order they are here Sir! Collector may deal with them Sir!

[மீண்டும் வணங்கி ஆஷ் போகிருன். வ உ.சி முதலில் எழுந்து மரியாதை தருகிருர். கலெக்டர் 'உட்காருங்கள்' என்று சொல்லாமல் இருப்பதைக் கண்டு அவராகவே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு[

வ.உ.சி. உட்காருங்கள் சிவம்.

விஞ்ச் : (சிரிப்புடன்) உம். நோ ரெஸ்பெக்ட்? மரியாதை இல்லே.

வ. உ. சி. : உம்மை மனிதர் என்று மதித்ததால் தான் நீர் அழைத்தவுடன் இங்கு வந்தோம். வந்திருக்கும் எங்களை உட்காருங்கள் என்று சொல்லும் சாதாரண மரியாதைகூட கலெக்டர் மறந்து விட்டீர். கலெக்டரின் மரியாதை காற்றிலே பறந்துவிட்டது. மிஸ்டர் விஞ்ச், மரியாதை என்பது கேட்டுப் பெறுவதல்ல, மிரட்டிப் பெறும் முரட்டு விஷயமுமல்ல. கொடுத்துப் பெறும் கொடைக்குத்தான் மரியாதை என்று பெயர்.

விஞ்ச் : பரவாயில்லே பரவாயில்லே. (சமாளித்து) ப்ளீஸ் சிட்டவுன் மிஸ்டர் பிள்ளே. உங்களே எதுக்காகத் தெரியுமா கூப்பிட்டேன். அதிஷ்டம் உங்களே அளேக்குது. யெஸ்! லக் உங்களே வெல்கம் பண்ணுது. பெரிய பதவி உங்களுக்காகக் காத்திருக்குது. இதோ பாருங்க, இந்த நாட்டிலே பெரிய பணக்காரன்— பட்டதாரிங்க— பதவிககாரங்க—

மடாதிபதிங்க எல்லாம் எங்கள் பக்கம். நீங்க மாத்திரம் தனியா என்ன பண்ண முடியும்? நீங்களும் எங்க பக்கம் சேர்ந்துடுங்க. உங்களுக்கு ராஜாங்கத்திலே சொல்லி, பெரிய அட்வகேட் ஜெனரல் பதவி வாங்கித் தர்றேன்.

வ. உ. சி. : என்ன?

விஞ்ச் : ஆமாம், அட்வகேட் ஜெனரல் ஆப் மெட்ராஸ் பிரசிடென்சி. ரொம்ப ரொம்ப பெரிய பதவி. என்ன! வெரி குட், சரி மௌனம் சம்மதம், சரி வாங்க. இனி நாம் நண்பர்கள். கை கொடுங்க

வ. உ. சி. : கொஞ்சம் பொறுங்கள். பதவி என்னும் மாய வலைக்கு அகப்படும் தீயவிலங்கல்ல என் உள்ளம் என்ன மிஸ்டர் விஞ்ச்! வந்ததும் கர்ஜனை செய்தீர், இப்போது கைகுலுக்க வருகிறீர். முதலில் பய முறுத்தினீர். இப்போது ஆசை காட்டி மோசம் செய்கிறீர். கேவலம் பட்டம் பதவிக்காகத் தேசத் துரோகம் செய்யும் பேடிப் பயல்களிடம் இப்படிப் பேசும். என்னிடம் பேசாதீர். தேசபக்தர்களைத் தடி யால் அடிக்கிறீர். தேசத் துரோகிகளைப் பணத்தால் அடிக்கிறீர். தலைவர்களைக் கேவலம் பதவியால் அடிக்கப் பார்க்கிறீர்! மிஸ்டர் விஞ்ச்! சற்றுமுன் தான் மரியாதையைப் பற்றிப் பேசினீர்! ஜாக்ரதை! யார் முன்னின்று, என்ன பேசுகிறோம் என்று நன்றாக நான்குமுறை எண்ணிப் பார்த்து, வார்த் தையை எண்ணிப் பேசும். எமது இதயத்துள்ளே இலங்கும் தேசபக்தி என்ற எரிமலையைக் கேவலம் உனது பதவி எனும் பழைய காகிதத்தைப் போட்டு மூடிவிடலாம் என்று எண்ணாதே. உலை வாயை

மூடலாம். எரியும் மலைவாயை மூட உன் ஏகாதி பத்தியத்தால் முடியாது மிஸ்டர் விஞ்ச்.

[வெளியில் 'வந்தேமாதரம்' என்று மக்கள் குரல் வானளாவ எதிரொலிக்கிறது. கலெக்டரின் தனி உதவியாளன் ஓடி வருகிறான்.]

கலெக்டர் பி. ஏ. : (மூச்சு வாங்க ஓடிவந்து) சார் ஜனங்க சார், சார்.

விஞ்ச் : யார் ஜனங்க? துரத்து நாய்களை! நடுத்தெரு விலே துரத்து.

பி. ஏ. : வந்தேமாதரம் சார்! வந்தேமாதரம். பத்தாயிரம் பேர் கூடிட்டாங்க சார். பயங்கரம்! டேன்ஜர்! சார் வந்தேமாதரம் சார்!

விஞ்ச் : என்ன மேன் இது! வந்தேமாதரம்! இன்னொரு தடவை அப்படிச் சொன்னே, டிஸ்மிஸ். போ. ஏன் நடுங்குறே?

பி. ஏ. : என்ன சார்? ஐயோ, அத்தனை பேரும் ஆபீ ஸையே தூளாக்கிடுவாங்க போலிருக்கு சார்.

[மக்கள் குரல் மேலும் வலுவடைந்து 'வந்தே மாதரம் வந்தே மாதரம்,' எனக் கேட்கிறது.]

வ. உ. சி. : சரி. நேரமாகிறது மிஸ்டர் விஞ்ச்! வெளியே என் மக்கள் என்னை எதிர்பார்க்கிறார்கள். நான் புறப் பட வேண்டும். நேரமாகிறது. என்ன சமாச்சாரம்? ஏன் அழைத்தீர்? சீக்கிரம் பதில் சொல்லும்!

ஆஷ் : (புலிபோல் உறுமி) உம். கலெக்டர் என்கிற மதிப்பு கொஞ்சம்கூட இல்லையே. நோ ரெஸ்பெக்ட், நோ ரெஸ்பெக்ட்.

சிவா : ஓய்! உம்மை மனிதரென்று மதித்ததால்தான் உமது அழைப்புக்கு மரியாதை கொடுத்து இங்கு வந்திருக்கிறோம்.

விஞ்ச் : ஹு இஸ் திஸ் மேன்? யார் இந்தப் பரதேசி? ஓ......ஓ...... இந்தப் பரதேசி மேன் பேர்தான்......

வ. உ. சி. : ஓய்! யாரைப் பார்த்துப் பரதேசி என்கிறாய்? இங்கு குடியேறிய பிற நாட்டானுக்குத்தான் பரதேசி என்று பெயர்! இவர் எங்கள் சுதேசி இயக்கத்தின் தலைவர். பாரதத்தின் வீரப்புதல்வர்களில் ஒருவர்! பெயர் சுப்ரமணிய சிவம்.

விஞ்ச் : ஓ என்ன மேன் மிஸ்டர் சுப்ரமணிய சவம்?

வ. உ சி : என்ன?

சிவா : மன்னித்து விடுங்கள் பிள்ளைவாள்! பாவம்! தமிழ் அறியாதவன்! ஓய், சவம் என்றால் செத்த பிணம் என்று அர்த்தம். நான் ஜீவனுள்ள சிவமய்யா, சிவம்!

விஞ்ச் : ஓ...ஐ...சீ! சாரி மிஸ்டர் சவம்! என்ன மேன் நீங்க போற இடமெல்லாம் ஒரே ரகளை இருக்குது, கலகம் இருக்குது, நீதானே வீ ர சு த ந தி ர ம் வேணும்னு வீதியெல்லாம் பாடினே?

வ. உ. சி. : ஆம் பாடினார். பாடுவார். பாடவைப்பார்!

விஞ்ச் : அந்தப் பாட்டை எழுதியது யார் மேன்? வெரி பவர்ஃபுல் சாங்!

வ. உ. சி. : அதைப் பாடியவர் எங்கள் மகாகவி பாரதி யார். அவர் எங்கள் நாட்டு கீட்ஸ்! ஷெல்லி!

விஞ்ச் : ஓ திஸ் ஷெல்லி இஸ் கில்லிங் மி! டேக்கிங் மை லைஃப் அவுட். இந்தப் பாரதிப் பாட்டுப் பாடியே—நாட்டை ஆட்டி வைக்கிறிங்க! நெருப்பைக் கக்கும் எரிமலை நீங்க! நீங்க நடந்தா பூமியே நடுங்குது! பேசினு புரட்சி வருது. எழுதினு கலகம் வருது! மந்திரவாதிங்க மாதிரி சனங்களை ஆட்டி வைக்கிறிங்க! உம்மாலே ஒரே தொல்லை...தொல்லை.

சிவா : உங்கள் ஆதிக்க வெறிக்குத் தொல்லை கொடுப்பதுதான் எங்கள் விடுதலை இயக்கத்தின் வேலை.

விஞ்ச் : உங்க பேச்சையும் பாரதி பாட்டையும் கேட்டா, செத்த பொணங்கூட எழுந்து வந்து சுதந்திரம் எங்கே சுதந்திரம் எங்கேன்னு கேக்கும் மேன்!

வ. உ. சி. : அதற்காகத்தானே நாங்கள் பாடுபடுகிறோம் உறங்கிக் கிடக்கும் வீர உணர்ச்சிக்கும் உயிர் கொடுத்து விடுதலைப் போராட்டத்தில் வெற்றி அடைவதே எங்கள் லட்சியம்.

விஞ்ச் : விடுதலைப் போராட்டம்! அரசியலைப் பத்தி எங்களுக்கு என்ன மேன் தெரியும்?

வ. உ. சி. : யாரைப் பார்த்துக் கேட்கிறாய்? மற்றொரு முறை கேட்காதே. உங்கள் இனத்தவர்

காடு மேடுகளில் சுற்றிய அந்த நாட்களிலேயே, அறிவுத் திறம் படைத்து, அரசியல் நெறி வகுத்து, பாராண்ட பரம்பரையின் வீரப் புதல்வர்கள் நாங்கள்!

விஞ்ச் : ஓல்டு ஸ்டோரி, பழைய கதை மேன், பழைய கதை!

வ. உ. சி. : புதிய காவியம் தொடங்கிவிட்டது. அதன் முதல் அத்தியாயந்தான் சுதந்திர இயக்கம்! சுதேசி விரதம்!

விஞ்ச் : சட்டத்திலுள்ள எல்லாக் குத்தங்களையும் செஞ்சிப் போட்டிங்க. உங்களுக்காக ஜெயில் வெயிட் பண்ணுது மேன், ஜெயில்! பயங்கரச் சிறை!

வ. உ. சி. : சிறை என்ன சிறை! வீரபாண்டிய கட்ட பொம்மனின் உயிரைப் பறித்த உன் தூக்கு மரத் துக்கே கூட நாங்கள் இனிப் பயப்படப் போவ தில்லை. (கலெக்டர் கலங்கிப் பார்க்க) ஏன் கலங்குகிறாய்? வீரன் பெயர் கேட்டதும் வெள்ளை யுடல் நடுங்குகிறதா!

விஞ்ச் : என்ன! உன்னாலே அட்மினிஸ்ட்ரேஷனே கெட்டுப் போச்சு! நோ பீஸ் மேன்! நோ நிம்மதி! நிம்மதியே இல்லே!

வ. உ. சி. : இனி என்றுமே நீங்கள் நிம்மதியை எதிர் பார்க்க முடியாது. இந்தியாவின் விடுதலைப் போரில் நாங்கள் வெற்றி பெறும்வரை, எங்கள் சுதந்திரக் கோட்டையில் தாயின் மணிக்கொடி பட்டொளி

வீசிப் பறக்கும் வரை, உமக்கும் நிம்மதி இல்லே, எமக்கும் ஓய்வில்லே, உலகுக்கும் அமைதி இல்லே. இதெல்லாம் உமக்குப் புரியப் போவதுமில்லே.

விஞ்ச் : யூ ஷட் அப். நீங்க ரெண்டு பேரும் இந்த ஜில்லாவை விட்டே வெளியே போயிடணும். அது மட்டுமில்லே. பாலிடிக்ஸைப் பத்தி, அரசியலேப் பத்தி ஒரு வார்த்தைகூட மேடையிலே, ஜனங்க கிட்டே பேசமாட்டேன்னு ரைட்டிங்லே எழுதிக் கொடுக்கணும்.

வ. உ. சி. : என்ன? எழுதிக் கொடுக்க வேண்டுமா? மனிதனின் பேச்சுரிமைக்குத் தடையா? பகுத்தறி வற்ற இந்த நாட்டு மிருகங்கள்கூட உனது கொடுங்கோலேப்பற்றிக் கத்திப் பேசும். கர்ஜனே செய்யும். அப்படித்தான் நான் என்னய்யா பேசி விட்டேன். என் நாட்டு மக்களே சுதேச பக்தி கொள்ளச் சொன்னேன்.

விஞ்ச் : சொன்னே மேன்! சொன்னே! விதேசிப்பொருளே வெறுக்கச் சொன்னே.

வ. உ. சி. : ஆம். வியாதிக்கு மறுந்தொன்று சொன்னேன்.

விஞ்ச் : ம். சொன்னே மேன்! சொன்னே! சும்மா இருந்த ஜனங்களேத் தூண்டிவிட்டே!

வ. உ சி. : இல்லே. பயமென்னும் பள்ளத்தைத் தாண்டச் சொன்னேன்.

விஞ்ச் : அதிகாரத்தை அவமானப்படுத்தினே,

வ. உ. சி. : இல்லே. அகம்பாவத்தை அழிக்கச் சொன்னேன். இறுமாப்பை இறக்கச் சொன்னேன்.

விஞ்ச் : உம். பல தடவை எச்சரிக்கை செய்தேன். தடையுத்தரவு போட்டேன். கேக்கலே! கேக்கமாட்டே!

வ. உ. சி. : தடையுத்தரவு! (சிரித்து) காட்டாற்று வெள்ளத்தைக் கையால் தடுக்கமாட்டான் புத்தி சாலி!

விஞ்ச் : அவமானம்!

வ. உ. சி. : அதுவே உமது ஆட்சிக்கு நாம் தரும் வெகுமானம்!

விஞ்ச் : பேசாதே!

வ. உ. சி. : பேச வைக்கிறாய்!

விஞ்ச் : செஞ்சதும் குத்தம்! செய்யறதும் குத்தம்! எல்லாமே குத்தம்—குததம்!

வ. உ சி. : எம் தேசபக்தி என்ற சத்யதர்மத்திற்கு நீர் தரும் பெயர் குற்றமென்றால், அந்தக் குற்றத்தை, முபபது கோடி மக்களும் முன்னூறு கோடி முறை செய்துகொண்டே இருப்போம்.

விஞ்ச் : பாலிடிக்ஸ் இஸ் தி கேம் ஆப் ஸ்கவுன்ட்ரல்ஸ்!

வ. உ சி. : நோ. பேட்ரியாடிஸம் இஸ் தி டூட்டி ஆப் ஏ ரியல் மேன்.

விஞ்ச் : இதெல்லாம்விட மற்றொரு மாபெரும் குத்தம் செஞ்சிருக்கே?

வ. உ. சி. : அதென்னய்யா அது! மாபெரும் குற்றம்? சும்மா பயப்படாமல் சொல்.

விஞ்ச் : வங்காளத்திலே புரட்சி செஞ்ச அந்த வந்தே மாதரம் என்ற கோஷத்தை ஜனங்ககிட்டே சொல்றே; சொல்லிக் கொடுத்திருக்கே. ஆ! வந்தே மாதரம்! டேன்ஜரஸ் கோஷம்!

வ. உ. சி : வந்தே மாதரம்! அருமையான ஒரு வார்த்தை அதைக் கண்டு நீர் ஏனய்யா பயப்படுகிறீர்? 'எம்மைப் பெற்ற தாயே! அம்மா பாரதியே! உனக்கு வந்தனம்' என்கிறோம். இதில் என்னய்யா பெரிய பயங்கரத்தைப் பார்த்து விட்டீர்? உம்மைப் போன்ற வொரு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட் பங்கிம் சந்திர சாட்டர்ஜி வங்காளத்தில் எழுதிய பாட்டுத்தானே இது?

விஞ்ச் : இஸ் இட்? அப்படியா?

வ. உ. சி. : ஆம். வந்தேமாதரம்! அதுவே எங்கள் தாரக மந்திரம் இந்த நாட்டின் கடைசி தேசபக்தன் உயிர் பிரியும் வரை, அவன் உடல் வெந்து கருகிச் சாம்ப லாகும்வரை இப் புனித மந்திரம் முழங்கிக் கொண்டே இருக்கும்! வந்தே மாதரம்!

விஞ்ச் : ஷட் அப்! ஷட் அப்!

வ. உ. சி : வந்தேமாதரம்!

விஞ்ச் : ஆ! வந்தேமாதரம்! செடிஷன்! கான்ஸ்பிரஸி!

வ. உ. சி. : வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்-முடிதாழ்த்துவோம்
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ அவ மானமோ

[வந்தேமாதரம் பாடல் ஒலிக்கிறது. ஆஷ் போலீசுடன் வருகிறான். வெளியிலிருந்தும் எதிரொலிக்கிறது.]

விஞ்ச் : வந்தேமாதரம் டேஞ்சரஸ் ஸ்லோகன். கான்ஸ்பிரேஸி செடிஷன். ட்ரீசன். ஷட்டப். போலீஸ் ஆஷ் கமான். அரெஸ்ட் தெம். புட் தெம் இன் ப்ரிசன். ஐ வில் ஸ்மாஷ் திஸ் வந்தேமாதரம்.

வ. உ. சி. : வந்தேமாதரம்.

சிவா : வந்தேமாதரம்

[கடுகி வந்த காவலர்கள் வ. உ. சி. சிவா இருபெரும் வீரர்களின் பொற்கரங்களுக்கு இரும்பு விலங்கிட, வெளியிலிருந்த மக்கள் கூட்டம், 'வந்தே மாதரம்' என்று வானதிர முழக்கமிட, காவலர்கள் துப்பாக்கிகளை வெடிக்கும் வேட்டொலிகளுடன் காட்சி முடிகிறது.]

**காட்சி முடிவு**

## காட்சி-4

**காலம் :** *பகல்*

**இடம் :** *ஒரு சாலை ஓரம்*

**நிகழ்ச்சி :** *வெள்ளைக்காரனுன் ஆட்சிக் கொடுமையைப் பற்றி மக்கள் பேசுதல்.*

**பாத்திரங்கள் :** *தினசரிப் பத்திரிகை ரசிகர் கூட்டம், வாஞ்சி, சங்கரன் மாமா, சி. ஐ. டி.*

*பத்திரிகை ரசிகர் :* தேசபக்தர் சிதம்பரனுருக்கு நாற்பது வருஷம் கடுங்காவல். சுப்ரமணிய சிவாவுக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனை! துப்பாக்கித் துரைத்தனம்! தென்னகமெங்கும் கலவரம்! சுமார் பத்துப் பேர் கொல்லப்பட்டனர்! நாம் மனிதர்களாக வாழப் பாடுபட்ட சிதம்பரம் பிள்ளை, சிறையில் மாடு போல் செக்கு இழுக்கிறுர்! ஞானப் பழமான சிவம் சித்ரவதையை அனுபவிக்கிறுர்.

*[இதைப் பின்னணியில்கூடச் சொல்லாம். இதைக் கேட்ட வண்ணம் கலெக்டர் காரியாலயத்தின் குமாஸ்தா சங்கரன்குட்டி அய்யர் வருகிறுர். வீரவாஞ்சியும் அங்கு வருகிறுன்.]*

*சங்கரன் :* ஏண்டாப்பா வாஞ்சி...இதென்னடா இது அநியாயம். வெள்ளைக்காரன் விஞ்சுதுரை என்னமோ ரொம்பப் புத்திசாலின்னு நான் நெனச்சுண்டிருந்

தேன்...என்ன இப்படி ஒரே அசட்டுத்தனமா நடந்துண்டிருக்கான்!

வாஞ்சி : எல்லாம் உங்களைப் போன்ற ராஜபக்தர்கள் கொடுக்கற இடந்தான் அவனை இப்படி மடத்தனமா ஆக்கியிருக்கு! இதோ பாருங்க மாமா...இனி மேலாவது ஜாக்கிரதையா இருங்கோ. வெள்ளைக் காரன் பெரிய புத்திசாலி கித்திசாலின்னு பேசினு ஜனங்க சும்மா இருக்கமாட்டா! ஆமாம். ஜாக்கிரதை! சொல்லிட்டேன்.

சங்கரன் : நேக்கென்னடா பைத்தியமா புடிச் சுண்டிருக்கு இனிமே அந்தப் பயலைப் புகழ்ந்து பேச. என்னமோ நம்மவாளுக்கு உத்தியோகம், பட்டம் பதவின்னு கொடுத்தானேன்னு ஏதோ நல்லவன்னு சொன்னேன்! இனிமே அப்படியெல் லாம் பிசகு பண்ண மாட்டேன்டா.

வாஞ்சி : ஆமாம்! ஜாக்ரதை! தவறியும் சட்டைக்காரனை நல்லவன்னு சொல்லிடாதேயும்! பேசாமே ஆபீசுக்கு லீவு போட்டுட்டு கிராமத்துக் காரியங்களைப் பாரும்.

சங்கரன் : திடீருன்னு ஆபீசுக்கு லீவு போட்டா ராஜத் துரோகம்னு சொல்லி, கேஸிலே மாட்டிடுவான்டா!

வாஞ்சு : அதெல்லாம் பயப்படாதேயும். உம்ம உடம்புக்கு நல்லா இல்லேன்னு டாக்டர் சர்ட்டிபி கேட் வாங்கித் தர்றேன்.

சங்கரன் : நீ வாங்கித் தந்துடுவே. ஆனு எங்க ஆத்து மாமி இருக்காளே, மகா புண்ணியவதி! அவளே ஊர் முழுக்கப் போய் பிரச்சாரம் பண்ணிடுவா.

வாஞ்சி : என்னுன்னு?

சங்கரன் : அதாவது எங்காத்துக்காரர் உடம்புக்கு ஒண்ணுமில்லே. அவர் உடம்பு, கல்லாட்டமா, நல்லாத்தான் இருக்கு எமன்கூட எங்காத்துக் காரரைக் கண்டு பயப்படுவான்! கேவலம் இந்த டாக்டர் என்ன முடியும்னு சொல்லி, டாக்டர் சர்ட்டிபிகேட்டுக்கே எபக்ட் இல்லாமே பண்ணிடு வாள். பாவம் ரொம்ப நல்லவ. அவள் லட்சியம் என்ன தெரியுமோ? உண்மையான ஒரு பதிவிரதை யினுடைய புருஷன் டாக்டர் கிட்டே போய்ச் சாகக் கூடாது, நேரா ஆண்டவன் கிட்டேதான் போகணும்னு நினைக்கறவ. அந்த லட்சியதிலே அசையாத நம்பிக்கையுள்ளவள். பாவம்...ரொம்ப நல்லவள். வெள்ளை மனசு.

வாஞ்சி : மாமா...இருந்தாலும் நீங்க ரொம்ப மோசம். உங்களை ஒரு பெரிய வீரருன்னு நெனச்சேன். இன்னும் மாமிக்குப் பயப்படற மாமாவாத்தான் இருக்கேள்.

சங்கரன் : வாஞ்சி! நோக்கென்னடா தெரியும். நீ புதுசா கல்யாணமானவன். உனக்கும் ஒரு டஜன் குழந்தை பொறந்தா அப்புறம் தெரியும், நீயும் உன் பெண்டாட்டி பொன்னம்மா கிட்ட பெட்டிப் பாம்பாத்தான் அடங்கிக் கிடப்பே. பாக்கத்தானே போறேன்.

வாஞ்சி: நான் ஒண்ணும் பெட்டிப் பாம்பாகவும் ஆகமாட்டேன். பொண்டாட்டி தாசனாகவும் ஆகமாட்டேன். பாரததேசத்தின் சுதந்திர வேள் விக்கு என்னை நான் அர்ப்பணம் பண்ணிட்டேன்.

சங்கரன் . அர்ப்பணம் பண்ணீட்டிகளா அர்ப்பணம்! அர்ப்பணமாவது, தர்ப்பணமாவதுடா! நாடாவது

காடாவதுடா! வீட்டுக்கு மிஞ்சிதான் நாடு. டே, வாஞ்சி! சாரிட்டி பிகின்ஸ் அட் ஹோம்டா! ஏதோ சில பசங்க, மேடை ஏறி ஆவேசமாப் பேசுவானுக உன்னைப்போல வாலிபப் பசங்களை வசப்படுத்தி ஜெயிலுக்கு அனுப்பிச்சிட்டு, அவனவன் பெரிய மனுஷனாயிடுவான். பட்டம் பதவியை தட்டிண்டு போயிடுவான். காதும் காதும் வச்சதுபோல் கை நிறைய லஞ்சம் வாங்கிடுவான். பாவம், ஏழை–பாமர ஜனங்கள் எவன் எது பேசினாலும் கை தட்டுதுகள் கவர்ச்சியா பேசினா போதும். கை ஒடியறவரையும் கை தட்டுவான். நிறுத்தவே முடியாது. பார்த்தியோ இல்லே போ! இந்த மனுஷன் சிதம்பரம் பிள்ளையும், சிவாவும், அந்த மனுஷன் பாரதியும் நம்ம நாட்டையே சேரக் கலக்கிட்டாங்க. படிச்சவன் பாட்டைக் கெடுத்தான்–பிரசங்கி நாட்டைக் கெடுத்தான்-வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்சதோன்னு மேடையேறிப் பேசிப்புட்டுப் போயிட்றானுக. பாவம் கட்சிச் சண்டையிலே மக்கள் மண்டைகள் உருளுது இப்போ எங்கே பார்த்தாலும் கலகம், கொலை, கொள்ளை. இரத்தக் களறி! என்னமோப்பா. இந்த வம்பெல்லாம் நமக்கு எதுக்கு? பேசாம வெள்ளைக் காரனே இருந்து தொலைஞ்சுட்டுப் போகட்டுமேன்னு தோன்றது.

வாஞ்சி : மாமா பார்த்தேளா. மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறுது. வெள்ளைக்காரன்தான் மனுஷனா. நாம் எல்லாம் மனுஷனில்லையா?

சங்கரன் : நாம எல்லாம் மனுஷங்கதாண்டா- ஆனா மனுஷப் புத்தி இல்லே. அவ்வளவும் காக்கா புத்தி ஆயிரம் காக்கா கத்தும். ஒரு கல்லு விழுந்ததோ இல்லேயோ அவ்வளவும் திக்காலிக்கு ஒன்னா பறந்து

போயிடும். போன ஜன்மத்துக் காக்காக் கூட்டம், இந்த ஜன்மத்திலே இந்திய நாட்டு ஜனக்கூட்டமா பொறந்துட்டு அலையுதுகள். ஒத்துமையில்லாத சுத்த வெத்துவேட்டுகள்.

*வாஞ்சி :* மாமா! ஞாபகமிருக்கட்டும்! நாம் பலர், அவர் சிலர்!

*சங்கரன் :* பலர்! சிலர்! வாஞ்சி, இந்தக் கலர் பேச்செல் லாம் இனிமே எடுபடாதுடா! கோடி கோடியா ஈசல் புறப்படும். ஒரு சிறு மழை பேஞ்சா போதும், அவ்வளவும் இருக்கிற இடம் தெரியாம அழிஞ்சி போயிடும். ஆங்கிலேயர் சிலர்தாண்டா. ஆனால் அவங்ககிட்டே நிறைய ஆயுதபலம் இருக்கு. அதை விட அவனுக்கு இருக்கிற மனோபலம் நம்மவாளுக்கு ஏதுடா?

*வாஞ்சி :* என்ன சொன்னாலும் உங்க மரமண்டையை மாத்த முடியாது.

*சங்கரன் :* டேய்! உம் மாமிகூட என்னைப் பார்த்து இப்படிச் சொன்னது கிடையாதுடா. சரி! போ. சுதந்திர வீரன். சொல்லிட்டே நானும் பொறுத் துண்டேன். மரமண்டையா, இரும்பு மண்டைன்னு சொல்லுடா. சமயம் வந்தா, நானும் உன்னைவிட வீரனா மாறிடுவேண்டா. சரி, என்னை மாத்தறது அப்புறம் இருக்கட்டும். ஒரு வாரமா நீ வீட்டுப் பக்கமே போகலியாமேடா. இப்படி புது மாப்பிள்ளை வீட்டைக் கவனிக்காமே, ஊரையே சுத்திண்டு இருக்கிறது நல்லதில்லே. போ போ. இந்த நாடு கீடு, சுதந்திரம் கிதந்திரம் எல்லாத்தையும் மூட்டை கட்டி, போட்டுட்டு, பொன்னம்மாவோடு சௌக் கியமா இரு. ஏதோ உங்கப்பா கவர்ன்மென்டிலே

நல்ல பேர் எடுத்தார். உனக்கு பாரெஸ்ட் டிபார்ட்மெண்டிலே உத்தியோகம் ஸ்திரமாயிடும். புத்தியை ஸ்திரமா வச்சுக்கோ. அலையாதே. மனசு கலையாதே, அரசியலில் நுழையாதே. அது ஒரு சேறு அது கொடுக்காது சோறு. உன் வேலையைப் பாரு!

[வந்தேமாதரம் என ஒரு கூட்டத்தின் ஒலி உள்ளிருந்து கேட்கிறது. இருமுறையும் ஒலிக்கலாம்]

சங்கரன்: பாத்தியோன்னு, இதேதான்! கிளம்பிட்டானுங்க. மொதல்ல கோவிந்தா வெங்கடேசான்னு உண்டி ஏந்துவான்கள் இப்போ வந்தே மாதரம்னு உண்டி ஏந்தருன். இந்த நாடே ஒரு பிச்சைக்கார நாடுடா அப்பா.

வாஞ்சி: அதுக்குக் காரணம் வெள்ளைக்காரன்தான்.

சங்கரன்: ஆமா, நீங்க வந்தா உடனே பிச்சைக்காரரில்லாத நாடாக்கிப் போட்டுடுவீங்க. கூட்டத்தில் கூடி நின்று கரடியா கத்துவாங்க, சரிவாறேன், ஜோப்பிலே ஒரு காலணு இல்லே, வாறேன் வாஞ்சி வீட்டிலே பொன்னம்மா தனியா இருப்பள் போடா, அறியாப் பொண்ணு, ஆசாபாசத்திலே ஆயிரம் கனவு காணற வயசுடா. நான் அனுபவசாலி சொல்றேன். டே வாஞ்சி, இங்கே வா. சேரிட்டி பிகின்ஸ் அட் ஹோம்டா. வேனிடி பிகின்ஸ் அட் ப்ளாட்பாம்டா. நோக்கு எது வேணும்? சுகமான ஹோம் லைஃப்பா? சிரமமான பிளாட்பாம் லைஃப்பா?

வாஞ்சி: மாமா! ஹோமும் இல்லே ப்ளாட்பாமும் இல்லே ஐ வாண்ட் எ ஃபாம் ஆப் ஹியூமன் லைப்! குட் பை வர்றேன்.

[வாஞ்சி போக, சங்கரன் நிற்கிருர். வாஞ்சியும் சங்கரனும் பேசிக்கொண்டிருந்தபோது கடை

சிக் கட்டத்தில் சி. ஐ. டி. ஒருவர் அவர்கள் பேசு வதை மறைவிலிருந்து டைரியில் எழுதிக் கொண்டிருக்கிருர். வாஞ்சி சங்கர மாமாவுடன் பேசிவிட்டுப் போய்விடுகிருன். சங்கரன் மாத்திரம் மேடையில் நின்று அவன் போகும் திசையில் பார்த்துக் கொண்டிருக்கிருர். சி. ஐ. டி 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' என்று பாடிக்கொண்டே சங்கரனிடம் அருகில் வந்து நிற்கிருன். சங்கர மாமா பதறிப்போய் புறப்பட நினைக்கிருர்]

சி. ஐ. டி. : மாமா நில்லுங்கோ. மாமா எங்கே போறேள்? என்னைத் தெரியறதா?

மாமா : அடடே! நம்ம கான்ஸ்டேபிள் கிட்டுவா?

கிட்டு : வாய மூடுங்கோ! அதெல்லா அப்போ. இப்போ இவாள் யார் தெரியுமோ? ஸ்ரீமான் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர். கில்லாடி கிட்டுவாக்கும்.

சங்கரன் : ஓ! சி. ஐ. டி. ஆயிட்டியா? ஆமா நோக்கு என்னம்டே என்னடா ஜோலி! அடே! நான் இப்ப யார் தெரியுமோ? திருநெல்வேலி கலெக்டர் துரைவாளின் P. A. வுக்கு P. A. வுக்கு, பி. ஏ. வாக்கும்!

கிட்டு : P. A. வுக்கு, P. A. வுக்கு P. A. வா? P.A.வுக்கு P. A. வுக்கு P. A. வா! இதுக்காகவா பி. ஏ. படிச்சீர்! சரி; மாமா உம்மை தனியா மீட் பண்ண வேண்டியிருக்கு வர்றேன்! நேக்கு நீர் நிறைய வேலை வச்சுட்டேள்! வர்றேன்! வந்து கவனிக்கிறேன்! என்ன? புரியலையா? வந்து புரிய வைக்கிறேன்! உம்மைக் கண்டா என் கை தினவு எடுக்கிறது!

## காட்சி முடிவு

## காட்சி-5

**காலம் :** இரவு.

**இடம் :** செங்கோட்டையில் வாஞ்சி வீட்டின் மாடிப் பகுதி.

**நிகழ்ச்சி :** வாஞ்சி தன் மனைவியிடமிருந்து விடைபெறுதல்.

**பாத்திரங்கள் :** வாஞ்சிநாதன், பொன்னம்மாள்.

[வாஞ்சிநாதன் ஏதோ ஒரு முக்கியமான புத்தகத்தைத் தேடி விட்டு, புத்தகம் இல்லாதிப்பது கண்டு,]

வாஞ்சி : பொன்னம்மா! பொன்னம்மா பொன்னம்மா செவிட்டுப் பொன்னம்மா.

பொன்னம்மா : என்னவாம்?

[உள்ளியிருந்து பொன்னம்மாள் வருகிறாள்]

வாஞ்சி : ஆமா. பிரெஞ்சுப் புரட்சியைப் பத்தி எழுதின ஒரு புத்தகம் வச்சிருந்தேனே, அது எங்கே?

பொன்னம்மா : ஓ! அந்தப் பழைய புத்தகமா

வாஞ்சி : ஆமா. அதுதான்! பிரெஞ்சுப் புரட்சி.

பொன்னம்மா : அது ரொம்பப் பழசா போச்சேன்னு அடுப்புலே வச்சு எரிச்சுட்டேன்.

வாஞ்சி : எரிச்சுட்டியா! அட அசடே. அது இப்ப கிடைக்காத புத்தகமாச்சே! என்ன காரியம் செய்திட்டே பொன்னு. உனக்குக் கொஞ்சங்கூட புத்தியேயில்லே பொன்னு!

பொன்னம்மா : ஏதோ தெரியாமே செய்துட்டேன். இந்த பாருங்க. இந்தமாத்ரி பயங்கரமான புஸ்தகத்தை எல்லாம் படிச்சா மனசு கெடடுப் போய் விடும்னு மாமா சொன்னு. நீங்க வரவர ரொம்பக் கெட்டுப் போயிட்டேள். வேதம் படிக்கிற வாயாலே வந்தேமாதரம்னு கூச்சல் போட்றேள். பகவத் கீதை படிக்காமல்—புரட்சி புஸ்தகத்தைப் படிக்கிறேள்— திருக்குறள் படிக்காமல் தேச பக்தின்னு சுத்திகிட்டிருககேள். பாகவதம் படியுங்கள்!

வாஞ்சி : சுதந்திரம் இல்லாத நாட்டிலே வேதம்—கீதம்—சாஸ்திரம் சம்பிரதாயம் எல்லாம் உயிரில்லாத உடம்புக்குச் செய்யற அலங்காரந்தான் பொன்னு.

பொன்னு : ஆமா, வரவர நான் சொல்றபடி ஒன்னுமே கேக்கறதில்லேன்னு முடிவு பண்ணிட்டேளா?

வாஞ்சி : ஆமாம் பெரிய மாமி. இவாள் சொல்றபடி நான் கேக்கணும்?

பொன்னு : அப்போ, மாமி சொல்றபடிதான் கேப்பேள். நான் சொன்னு கேக்க மாட்டே!

வாஞ்சி : நீ என்ன சொன்னே, நான் கேக்கலே அதைச் சொல்லு.

பொன்னம்மா : நீங்க எதைக் கேட்டேள் நான் சொல்ல? சொல்லிப் பிரயோசனம்? என்னமோ—எல்லாம் என் தலைவிதி! நேக்கு யாா இருக்கா?

வாஞ்சி : இதோ பார் பொன்னு. ஏன் இப்படி விதியை நொந்துக்கறே? என்னைக் கண்டா உனக்கு ஒரே கோபமா இருக்கு! இல்லை?

பொன்னம்மா : ஆமாம் இந்த வீட்டிலே நான் கோவிச்சுண்டு என்ன பிரயோசனம்? என் கோபத்தைக் கண்டு ஒரு எறும்புகூட பயப்படப் போறதில்லே. ஒரு துரும்புகூட தூரப் போகப் போறதில்லே. இதிலே கோபம் என்ன வேண்டிக் கிடக்கு கோபம்? நான் கோபிசசுக்கறத்துக்கு யார் இருக்கா இந்த வீட்டிலே.

வாஞ்சி : அதென்ன அப்படிச் சொல்லிட்டே பொன்னு. நானிருக்கேன் மலைமாதிரி. என்மேலே நிறைய கோவிச்சுக்கோ. எதையும் தாங்கும் இந்த ஜன்மம்!

பொன்னம்மா : ஆமாம். ரொம்ப அழகாத்தானிருக்கு. ஒரு பொம்மனுட்டி, ஆம்படையான் மேலேதான் கோபிப்பாளாக்கும். சாதாரணமாயிருக்கும்போதே சிங்கம் மாதிரி கர்ஜிக்கிறேள்! புலிமாதிரி பாயறேள். இன்னும் கோபிச்சா என்ன ஆகுமோ? அப்படியே கோவிச்சுண்டாதான் என்ன பிரயோசனம்? நீங்க எதுக்கும் அசையப் போறதில்லே. அதான் நீங்களே சொல்லிட்டேளே! நீங்கள் ஒரு அசையாத மலை-ன்னு. அப்புறம் நேக்கு கோபம் என்ன வேண்டிக கிடக்கு கோபம்.

வாஞ்சி : அப்ப கோபிக்காம பேசாமே சாதுவாட்டமா இரு. ஆமாம் பொன்னம்மா! ஏன் இப்படிப்பரிதாபமா இளைச்சிருக்கே. பாவம்!

பொன்னம்மா : மழைகாலத்திலே எறும்பு ஏன் இளச்சிருக்கின்னு யாராவது கேப்பாளோ?

வாஞ்சி : மழைகாலத்திலே எறும்புக்கு இரை கிடைக்காது. இளைச்சிருக்கும்! உனக்கென்ன இங்கே குறைச்சல். நல்லா மூணு வேளைக்கு ஆறு வேளையா வயிறுரச் சாப்பிடறதுக்கென்ன? அதுதான் கொட்டி வச்சிருக்கே.

பொன்னம்மா : புத்தியுள்ள பொம்மனுட்டி புருஷாள் சாப்பிடாமே இலை போட்டுச் சாப்பிடமாட்டா.

வாஞ்சி : இலை போட்டு சாப்பிடாட்டா பிளேட்லே சாப்பிடு. பெரிய இடத்துப் பெண் மாதிரி.

பொன்னம்மா : நாளும் கிழமையுமா இப்படியெல்லாம் பேசாதேள்.

வாஞ்சி : பின்னே எப்படியெல்லாம் பேசுவாள்?

பொன்னம்மா : உங்களுக்கு ஒன்னும் புரியாது! புத்தியுள்ள பொம்மனுட்டி புருஷனுக்குப் பரிமாறிட்டுத்தான் அப்புறம் மீதியிருந்தா சாப்பிடணும்.

வாஞ்சி : ஓகோ, அப்படியா! வேளா வேளைக்கு நான் வீட்டுக்கு வர்ரது இல்லேன்னு மறைமுகமாச் சொல்லிக் காட்டுறியா? சரி, நான் ஊர்லே இருந்து வீட்டுக்கு வராமே இருந்தாதானே நீ சாப்பிடமாட்டே! நான் போயிட்டேன்னு வச்சுக்கோ, அபபோ?

பொன்னம்மா : என்ன என்ன! என்ன சொன்னேள்! தேவி பராசக்தி! (அழுகிருள்)

வாஞ்சி : அடாடா! இல்லே பொன்னு, ஏதோ ஒரு பேச்சுக்கு சொன்னேன். போயிட்டேன்னு,எங்காவது ஒரு மாசம் வெளியூருக்குப் போயிட்டேன்னு வச்சுக்கோ. அப்போகூட சாப்பிடாமல் உபவாசந் தான் இருப்பியான்னு கேட்டேன்' அதை நீ வேறு விதமா அர்த்தம் பண்ணிண்டு அழறே. அழாதே, சுத்த அசடு. சமத்தா இரு.

[பொன்னம்மா நெஞ்சில் கைவைத்துக் கொண்டு இரண்டு மூன்று தரம் பெருமூச்சு விடுகிருள் வாஞ்சிக்குப். பொரையேறுகிறது. இருமுகிருன்.]

பொன்னம்மா : கொஞ்சம் இருங்கோ, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வர்றேன். உங்களுக்குப் பொரை ஏறுது. (தண்ணீர் கொண்டு வந்து) தண்ணீர் குடியுங்கள்.

வாஞ்சி : நண்பர்கள் என்னை நெனைச்சுக்கருப் போல இருக்கு.

பொன்னம்மா : ஆமாம் நண்பர்கள் நினைச்சாத்தான் புரையேறும் உங்களுக்கு! நான் நெனைச்சா புரை யேருதாக்கும்,

வாஞ்சி : ஆமாம், பொன்னு இப்படித்தான் அர்த்தத்தை அனர்த்தம் பண்ணிண்டு அழறுதா?

பொன்னம்மா : இனிமே இப்படி யெல்லாம் பேசாதீங்க. நாங்கள் மஞ்சள் குங்குமம் மாங்கல்யத்தோட முன்னுலே போற வம்சத்தை சேர்ந்தவர்களாக்கும்.

வாஞ்சி : கவலைப்படாதே பொன்னம்மா! இனிமே தவறிக்கூட பேச மாட்டேன்; அது போகட்டும். நானும் போயிட்டு வந்துடறேன்.

பொன்னம்மா : எங்கே இப்போ வந்ததும் வராததுமா புறப்படறேள்?

வாஞ்சி : அதான் நிறைய சாப்பிட்டாச்சே; இன்னிக்கு நீ செஞ்ச மோர்க் குழம்பு, வத்த குழம்பு, வத்தல், வடாம், பப்படம் எல்லாம் கனஜோர்! அடாடா என்ன பதம்! சரி பொன்னம்மா, நண்பர்கள் காத்திருப் பாங்க. அரை மணி நேரத்திலே வந்துடறேன்.

பொன்னம்மா : நண்பர்கள் இருக்கட்டும். நான் ஒண்ணு கேட்கிறேன். இனிமே இந்த உபயோகமில்லாத அரசியல் வேலை எல்லாம் வேண்டாம்.

வாஞ்சி : பொன்னம்மா! பெற்ற தாயும்–பிறந்த பொன் னாடும் நற்றவ வானினும் நனி சிறந்ததுன்னு பாரதி யார் சொல்லி இருக்கார்!

பொன்னம்மா :—பாரதியாருக்கு என்ன! ஏதோ அவசரத் திலே எழுதிப்புடருரு; அவர் எழுதினு அப்படியே எல்லோரும் நடக்கணுமா என்ன?

வாஞ்சி : “வீர சுதந்திரம் வேண்டி நின்ருர். பின்னர் வேருென்றும் கொள்வாரோஎன்றும் சொல்ருரு பொன்னு!

பொன்னம்மா : ஆமாம், சொல்லியிருக்கிருர். இன்னும் தேசத் துரோகிகள் நிறைஞ்ச நாடுன்னும் அவர்

தான் எழுதிவச்சிருக்கார். எல்லாம் பேசுவான்கள். நாளைக்கு ஏதாவது வந்தா ஒரு பயலும் உதவிக்கு வரமாட்டான். வீரன் கீரன்னு—தலைவர்கிலைவர்ன்னு ஆயிரம் மாலையைப் போட்டு, சிதம்பரம் பிள்ளையை யும் சிவாவையும் ஜெயிலுக்கு அனுப்பிய இந்தக் கூட்டம், நாளது வரைக்கும் அவர்களோட விடுதலைக்கு என்ன வழி செஞ்சது? அவனவன் ஆறு வேளை சாப்பிட்டு நிம்மதியா இருக்கான். அது மட்டுமில்லே, அவர் நடத்தின கப்பல் கம்பெனியை வித்துப்புட்டதும், அவர் குடும்பம் நடுத்தெருவிலே நிற்கிறதும் தான் மிச்சம்; அந்தக் குடும்பத்து மேலே கேஸ் வேறே போட்டிருக்காங்களாம்; இந்த நன்றி கெட்ட ஜனங்களுக்குச் சுதந்திரம் ஒரு கேடு இவங் களுக்குத் தியாகம் ஒரு கேடு. தியாகிகளைக் கேலி பண்ற, துரோகிகள் நிறைஞ்ச பாவிகள் வாழற நாடுன்னு இது! காட்டிக் கொடுக்கிற காட்டு மிராண்டிகள் நிறைந்த நாட்டுக்கு 'இந்தியா' என்று பெயர். இந்த உண்மையை வெள்ளைக்காரன் ரொம்ப நன்னு தெரிஞ்சு வச்சிருக்கான். அதனாலேதான் எல்லாம் அரையும் குறையுமா இருக்கு! அவன் துரையா இருக்கான், நாடு சிறையா இருக்கு, அவன் ஆண்டானு இருக்கான். நாம் அடிமைகளா இருக்கோம்.

வாஞ்சி : சபாஷ்! பொன்னு! உன்னை ஒன்னுமே தெரி யாத அசடுன்னு நினைச்சேன்: வெறும் அடுப்பங் கரை விறகுன்னு நினைச்சேன்! பொங்கிவர்ர எரிமலை மாதிரின்னு பொழிஞ்சுதள்றே? அருமையான அரசியல் புயலை அப்படி அனாயசமா அள்ளி வீசறியே? என்னைவிட வேகமாப் பேசறே பொன்னு

பேடிக்கும் ரோசம் வர்ற மாதிரிப் பேசறே! அரசியல் ஆவேசத்தை அப்படி அள்ளித் தெளிச்சூட்டே?

பொன்னம்மா : அரசியலும் இல்லே, மண்ணாங்கட்டியும் இல்லே. ஏதோ நான் கேள்விப்பட்டதைச் சொன்னேன். அது கெடக்கட்டும்.

வாஞ்சி : உண்மையிலேயே ரொம்ப வீரமா பேசறே' பொன்னு!

பொன்னம்மா : நான் யாரு?

வாஞ்சி : யாரு?

பொன்னம்மா : மாவீரரின் மனைவி. உங்க ஆத்துக்காரி இல்லியோ! சரி. கொஞ்சம் நிம்மதியா தூங்குங்க. கீழே அத்தைக்கு ஒரே காய்ச்சல். மருந்து கொடுக்கணும். என்ன? கண்ணெல்லாம் கோவைப்பழம மாதிரி செவந்திருக்கு. அடேயப்பா நேரம் போனதே தெரியல்லே. எவ்வளவு நாழியாச்சு! உம், தூங்குங்க

வாஞ்சி : தூக்கமா? முயற்சி பண்ணிப் பாக்கறேன்.

[பொன்னம்மா கீழே போகிறாள். வாஞ்சி ஏதோ தனது குறிப்பேட்டில் எழுதிப் படிக்கிறான் நள்ளிரவு வந்து விடுகிறது. பின்னணியில் நீலாம்புரி இசை கேட்க இமை மூடுகிறான் உட்கார்ந்த படியே. சற்று நேரம் கழித்து]

'தண்ணீர்விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்–கருகத்திருவுளமோ'
'மேலோர்கள் வெஞ்சிறையில் வாடித் தவிப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ?'

[என்ற பாட்டு வாஞ்சியின் வீரவுள்ளத்தி எதிரொலி செய்கிறது. என்னவோ கனவுகள் கண்டு எழுந்து உட்காருகிறான். விடியும் நேரம். வேகமான தாளகதியில் 'பூபாளம்' இராகம் இசைக்கட்டும்]

வாஞ்சி : ஆ! கனவு! கடமையை மறந்து தூங்கி விட்டேன்.

[ஒரு பெட்டியைத் திறந்து ரிவால்வரை எடுக்கிறான். பொன்னம்மா குளித்து முடித்தபடியே அவ னருகில் வருகிறாள். அவளுக்குத் தெரியாமல் ரிவால்வரை மறைக்கிறான்]

பொன்னம்மா : ஏன்னா, உங்களைத்தானே. கொஞ்சங் கூடத் தூங்கவே இல்லையா? கண் என்ன இப்படி நெருப்புத் துண்டாட்டமா இருக்கு?

வாஞ்சி : வெற்றி காண முடிவு செய்தபின் வீண் தூக்கத்துக்கு வேலையில்லை பொன்னு. விடிந்து விட்டது. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன், பொன்னு.

பொன்னம்மா : என்ன முடிவு?

வாஞ்சி : ஓ...அதுவா...வந்து...

பொன்னம்மா : இனிமே என்னை விட்டுட்டு எங்குமே போறதில்லேன்னுதானே முடிவு பண்ணியிருக் கேள்? ஆமான்னுதான் ஒரு தடவை சொல்லுங் களேன்.

வாஞ்சி : ஆமா...ஆமா, ஆனா ஒரு முக்கியமான வேலை. அது முடிஞ்சா, அப்புறம் நான் உன்கூடவே இருப் பேன், பிரியவே மாட்டேன் பொன்னு!

பொன்னம்மா : அடேயப்பா! இதுபோதும் அத்தான்! ஆமா, நீங்க எங்கே போறேள்? எதுக்காக சித்தப்பா உங்களை அடிக்கடி கோபிக்கிறு? அந்த விஷயத்தை எனக்கும் கொஞ்சம் சொல்லப் படாதோ?

வாஞ்சி : அதெல்லாம் உனக்குப் புரியாது பொன்னு.

பொன்னம்மா : ஆமா, நமக்கு எதுக்கு இந்தப் புரியாத வீண் வேலை எல்லாம்! நாட்டைப் பற்றி மறந்துடுங்க வீட்டைப் பத்தி இனியாவது அக்கறை எடுத்துக் கொள்ளுங்க அத்தான். நாட்டைக் காப்பாத்த உங்களைப்போல ஆயிரமாயிரம் வீரர்கள் முன் வருவாங்க. ஆனு என்னைக் காப்பாத்த உங்க ஒருவரால் தானே முடியும். (அழுதல்)

வாஞ்சி : கவலைப்படாதே பொன்னு. நீ ஒரு வீரனின் மனைவி. அழுதால் எனக்குக் கோபம் வரும்.

பொன்னம்மா : இல்லை. அழலை. இதோ பாருங்க இப்படி. நான் இப்படிக் கவலைப்படற நேரத்திலே பக்கத்திலே இருந்து நீங்க ஆறுதல் சொல்லும்போது அழுகையெல்லாம் ஆனந்தமா மாறிடறது. என் துன்பமெல்லாம் எங்கோ போயிடறது! அன்போடு நீங்க ஆறுதல் சொல்றதைக் கேட்டா அதுக்காகவே இனியொரு தடவை அழலாம்போல இருக்கு!

வாஞ்சி : சபாஷ்! ஆச்சரியம்! பேசத் தெரியாத நீயா இப்படி பேசுறே? பலே! பொன்னு.பலே!

பொன்னம்மா : என்னமோ ஒரு சக்தி, என்னைப் பேச வைக்குது. அத்தான், நீங்கள் இல்லாவிட்டால் நம்ம வீடு ஏதோ பயங்கரமான காடுமாதிரி இருக்கு.

வாஞ்சி : சுதந்திர வீரர்கள் பிறக்காத நாடும் அதைப் போலத்தான் பொன்னு.

பொன்னம்மா : நீங்கள் வராவிட்டால் பக்கத்து வீட்டு மாமிகளெல்லாம் என்னை அசடு அசடுன்னு கேலி செய்யரு.

வாஞ்சி : (சிரித்து) சுதந்திரம் பெறுத நம் நாட்டைப் பார்த்து, பிற நாட்டார் அப்படித்தான் பொன்னு கேலி செய்கிறுர்கள். விடுதலை தேட முடியாத பேடிகள் நிறைந்த நாடு என்று பேசுகிறுர்கள் பொன்னு.

பொன்னம்மா : நான் வீட்டைப் பற்றியே பேசறேன்.

வாஞ்சி : நான் நாட்டைப்பற்றியே பேசறேன்! இல்லையா பொன்னம்மா! நாடு சரியா இருந்தாத்தான் வீடு சரியா இருக்கும். நமக்காக மட்டும் நாம் பிறக்கவில்லை பொன்னு. கோடானு கோடி பாரத மக்களுக்காக ஒரு சில வீரர்களாவது தியாகத் திருவிளக்கு ஏந்தத் தான் வேண்டும்! இது தெய்வ கட்டளை பொன்னு தெய்வ கட்டளை!

வாஞ்சி : ஊஹூம். அந்த ஒரு சில வீரர்களில், உங்களை மாத்திரம் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் என் தெய்வத்திடம் வேண்டிக் கொண்டிருக் கிறேன்.

வாஞ்சி : ஒவ்வொரு பெண்ணும் இப்படியே நினைத்து விட்டால், பிறகு வீரம் வீட்டுககுள்ளேயே சிறைப் பட்டுவிடுமே பொன்னு!

பெபன்னம்மா : அப்பா. உங்களோடு பேசி ஜெயிக்க முடியுமா என்ன?

வாஞ்சி : முடியாதுதான் பொன்னு, முடியாதுதான்! நான் பேசறதைவிட நீ பேசினு கோழைகூட வீர ஞயிடுவான் பொன்னு! ஏன் நீயும் வந்து மேடை யிலே பேசேன்.

பொன்னம்மா : ஆமா, அது ஒன்னுதான் பாக்கி. இந்த நாட்டிலே இனிமே பெண்கள் பேசித்தான் ஆண் பிள்ளைகளுக்குச் சுதந்திர ஆவேசம் வரணும்! நாங்கள்ளாம் பேச ஆரம்பிச்சா வீட்டுக் காரியத்தை யார் செய்யறதாம்?

வாஞ்சி : பொன்னு, நான் போயிட்டு சீக்கிரம் வந்துட றேன்.

பொன்னம்மா : நீங்க சீக்கிரம்னு சொன்ஞ அதுக்கு ஒரு வாரம்னு அர்த்தம்!

வாஞ்சி : இல்லே. உடனே வந்துடறேன்.

பொன்னம்மா : உடனேன்ஞ உங்க பாஷையிலே ஒரு மாதம்னு அர்த்தம்!

வாஞ்சி : இந்தத் தடவை வெகு சீக்கிரம்...

பொன்னம்மா : வெகு சீக்கிரம்ஞ ஒரு வருஷம்னு அர்த் தம்! எல்லாம் நேக்குத் தெரியும்.

வாஞ்சி : அடாடா! இதென்ன பழைய பஞ்சாங்கம் மாதிரி பேசிகிட்டிருக்கே! சரின்னு சொல்லு. நான் அவசரமா போகணும்.

பொன்னம்மா : என்ன இது? எப்போ பார்த்தாலும் போகணும், போகணும்னு அசட்டுத்தனமா சொல்லிண்டு. சமத்தா போயிட்டு வர்றேன்னு சொல்லுங்களேன்.

வாஞ்சி : சரி சமத்தா போயிட்டு வர்றேன்!

பொன்னம்மா : போயிட்டு வாங்கோ!

வாஞ்சி : சீக்கிரமா சமத்தா சந்தோஷமா சொல்லு!

பொன்னம்மா : (முகமலர்ச்சியுடன்) போய்ட்டு வாங்கன்னு!

வாஞ்சி : பொன்னு நீ யார்!...வீரவாஞ்சியின்—

பொன்னம்மா : ஊம்! நான் மாவீரனின் மனைவி!

(வாஞ்சி புறப்படுகிறான்)

**காட்சி முடிவு**

# காட்சி : 6

**காலம் :** *பகல்*

**இடம் :** *சாலை ஓரம்*

**நிகழ்ச்சி:** *சங்கர அய்யரை சி. ஐ. டி. வி சாரணை செய்தல்*

**பாத்திரங்கள் :** *சங்கரய்யர், சி. ஐ. டி. கிட்டு, சுதேசி வீரர்கள்.*

[நான்கு பேர்கள் 'வந்தேமாதரம்—வாழ்க வாஞ்சிநாதன் சுதேச வீரர்கள் வாழ்க' என்று சொல்லிக் கொண்டே போகிறார்கள். அதைப்பார்த்தவண்ணம் கலெக்டர் குமாஸ்தா, சிரித்தபடி போகிறார்.]

*சி. ஐ. டி. ;* அய்யர்வாள்! கொஞ்சம் நில்லுங்கோ. எங்கே போறேள். உம்மதாங்காணும். கலெக்டர் துரை வாளின் P. A. வுக்கு P. A வுக்கு P. A. வாள்! உம்மைத்தாங்காணும் கூப்பிட்றேன். சுதந்திர வீரரே! சுயராஜ்ய சூரரே! சுதேசித் தலைவரே! கொஞ்சம் உம்மோட நேக்கு பேசவேண்டிய ஜோலி இருக்காக்கும்! ஆமாம்.

*சங்கரன் :* என்னடா இது? ஜோலி இருக்குங்கறே! டே கிட்டு, போயும் போயும் என்னைப் பார்த்தா சுதந்திர வீரன்னுசொல்றே? கிட்டு, ஏண்டா நீ இன்னும் இடியட் ஆட்டமா பேசறே! இது கொஞ்சங்கூட நன்னா இல்லே...

*சி. ஐ. டி. :* ஓய்! யாரைப் பார்த்துங்காணும் இடியட்டுன்னு சொல்றீர்?

சங்கரன்: பின்னே என்னடா? என்னைப் பாத்து சுதந்திர வீரரேன்னு என்னடா அர்த்தம். சிவனேன்னு நான் உண்டு—என் வேலை உண்டுன்னு இருக்கும்போதே என்னைப் பார்த்து இப்படிக் கேக்கறேயேடா. டே கிட்டு! நான் ஏழை. குழந்தைக் குட்டிக்காரன். இந்த வெட்டி வேலை எல்லாம் நேக்கு எதுக்குடா?

சி ஐ. டி.: ஓய்! நான் துப்பறியும் சிங்கமாக்கும். பழைய கான்ஸ்டேபிள் கிட்டு இல்லை. உண்மையை மறைக்காதீர். வாஞ்சியோட நீர் சுதந்திரம் கிதந்திரம்னு பேசிண்டிருந்தேளா இல்லையா? உண்மையைச் சொல்லிவிடும்; நீரும் சுதந்திர வீரர் ஆகப் போறீரா?

சங்கரன்: சுதந்திரமா! நானு? என்னடா விளையாட்றே? டே கிட்டு! என் சுதந்திரம் பறிபோய் ரொம்ப நாளாச்சுடா! இந்தியாவுக்கே சுதந்திரம் வந்தாலும் நேக்கு இந்த ஜன்மத்தில் சுதந்திரம் வராதுடா, வராது!

சி. ஐ டி: ஏன் மாமா?

சங்கரன்: உனக்குத்தான் என் ஆத்துக்காரியைத் தெரியுமோல்லியோடா? விக்டோரியா ராணியை விட வீரமுள்ளவடா! அவளுக்கு நான் ஆயுள் அடிமையாக்கும்! ஆமாம்; அக்னி சாட்சியா அடிமைன்னு சத்தியம் பண்ணிப்புட்டேன்!

சி. ஐ. டி: ஓய்! தமாஷ் பேசி என்னை ஏமாத்தாதீர். உமக்கும் சுதந்திர இயக்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டுன்னு சொல்றேன்.

சங்கரன்: என்னடாது? தத்துப் பித்துன்னு உளறிக் கொட்டிண்டு; இங்கே நேக்கு சோத்துப்பாட்டுக்கே

திண்டாட்டமா இருந்துண்டிருக்கு. ராமா கிருஷ்ணுன்னு காலத்தைக் கழிச்சுண்டு இருக்கேன். ஒவ்வொரு நாளையும் எப்படித் தள்ளுறதுன்னே தெரியாமே முழிச்சுண்டிருக்கேன். சுதந்திரப் போராட்டமாம், சுதேசி வீரமாம்! வரவர பய உளர்றேடா. ஏண்டாப்பா கிட்டு! ஏதோ எப்படியோ சி. ஐ. டி. ஆயிட்டியே. இப்போதாவது கொஞ்சப் புத்திசாலித் தனமாப் பேசப்படாதோ. உளர்றியே.

சி. ஐ. டி : நான் உளர்லே ஐயர்வாள், உளர்லே. நேர்லே பார்த்துண்டு, காதாலே கேட்டுண்டு, எழுதிண்டே இருக்கேனே அய்யர்வாள் என்னை ஏமாத்தப் பார்க்கறேளே. கலெக்டர் P. A. வின், P. A. வின் P. A. இல்லியோ! அதான்.

சங்கரன் : அதான்னு? எதான்? விஷயத்தை விளக்கமாச் சொல்லுடா!

சி. ஐ. டி. : சரி, விளக்கமாவே சொல்றேன். கேளுங்க நீர் வாஞ்சியோட பேசிண்டிருந்தேள். சுதந்திரம் இங்கிற வார்த்தையை அடிக்கடி சொல்லிண்டிருந்தேள் சுதேசிபோல சூடாகப் பேசிண்டிருந்தேள்.

சங்கரன் : தேளாவது வாளாவதுடா! டே! நான் குழந்தைக் குட்டிக்காரனுக்கும். எனனோடே தலையிலே கையை வைக்காதே. பிரம்மஹத்தி மாதிரி பேசாதே. அவனோடே என்னடா பேசிண்டிருந்தேன். என்னத்தைடா எழுதித் தொலைச்சே அவனவன் கவிதை எழுதருன; காவியம் எழுதருன்; இந்தத் தற்குறிப் பய இல்லாததையும் பொல்லாததையும் எழுதி உயிரை வாங்கருன். நீ என்னத்தைடா எழுதித் தொலைச்சே.

சி ஐ. டி. : நீர் வாஞ்சியோட பேசினீரா இல்லையா? அதைச் சொல்லும் முன்னாலே.

சங்கரன்: 'நன்னா பேசினேன். தம்பி இப்படியெல்லாம் போராட்டம்னு பேசாதேடா-பொழைக்கிற வழியைப் பாருடா! ஏழைகளுக்கு பாலிடிக்ஸ் என்னத்துக்கடா ன்னு' புத்தி சொல்லிண்டிருந்தேன். ஏண்டாப்பா சி. ஐ. டி! இந்த ஊரிலே நாலு பேரண்டை நல்லது கெட்டதுகூடபேசப்படாதா? இல்லே பேசப்படாதேங் கறேன். அப்படின்னா நான் பேசலேடாப்பா பேசலே.

சி. ஐ. டி: அய்யர்வாள் ரொம்ப கோபப்படறேள் 'நானும் உங்க கவர்ன்மெண்ட் இனந்தான். ரொம்பத் தெரிஞ் சவராச்சேன்னு உத்தியோகத் தோரணையிலே பேச விரும்பலே. கொஞ்சம் குரலைத் தாழ்த்திப்பேசறேன். நயமாப் பேசறேன். நான் கேக்கறக்கு நேரடியாகப் பதில் சொல்லும். நீர் அவனோட பேசிண்டிருந்ததை நான் என் கண்ணாலே பார்த்தேன். காதாலே கேட் டேன், கையாலே எழுதினேன்.

சங்கரன் உன் பார்வை சரியாயில்லை 'ஆமா, கலெக்டர் பி.ஏ ங்கிற நினைப்போட என்னைப் பார்க்கணும்டா

சி. ஐ. டி. : இதோ டைரியிலே நீங்க பேசிண்டிருந்ததை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை விடாமெ எழுதி வைச்சுண்டுட்டேன். எழுத்துக்கு எழுத்து எழுதி யிருக்கேன் அய்யர்வாள்.

சங்கரன்: நீ எழுதிட்டா அதென்ன தலையெழுத்தாடா? என்னமோ மிரட்டறியே.

சி. ஐ. டி: ஆமாம் தலையெழுத்தைவிட பெரிசுங்காணும் இது. இந்த டைரியிலே உங்களைப் பத்தி நான் எழுதிட்டேன். அதனாலே ரொம்ப ரொம்பப் பாதிக்கப்படப்போறேள். நன்னு ஞாபகம் வச்சிக்கும்! பி ஏ. வின் பி. ஏ. வாள்!

சங்கரன்: என்னடா ஒரேயடியா பயமுறுத்தறே. அதென்ன பிரம்மா எழுதின எழுத்தாங்கறேன். இந்தக் காலத்தில் பிரம்மா எழுத்தையே மாத்திடறானுங்க. ஒரேயடியா பேசிண்டே போறியே!

சி. ஐ டி.: கலெக்டர் பி. ஏ. வாள். இது எமனோட டைரியாக்கும். நான் சித்ரபுத்ரன் கோத்ரமாக்கும்!

சங்கரன்: தம்பி, கொஞ்சம் நிதானமா பேசுடா.

சி. ஐ. டி: அய்யர்வாள்! நான் பழைய கான்ஸ்டபிள் கிட்டுன்னே நினைச்சுண்டு பேசறேள். கொஞ்சம் மரியாதையாப் பேசும். எஸ்! ஐ கமாண்ட் ரெஸ்பெக்ட்! டிமாண்ட் ரெஸ்பெக்ட்.

சங்கரன்: (சற்று பயந்த நிலையில்) என்ன பண்றது. கமாண்ட் பண்ணி ரெஸ்பெக்டை வாங்கறே! சரிங்க சார், இன்ஸ்பெக்டர் சார்! நான் ஒண்ணும் பண்ணலே சார்.

சி. ஐ டி.: ஒண்ணும் பண்ணலியா? எங்கே! என்னைப் பார்த்துச சொல்லும், ஒண்ணும் பண்ணலியா?

சங்கரன்: நேக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே சார்! நோக்கு போய் பதவி வந்தது பார்!

சி. ஐ. டி. : எல்லாம் நேக்குத் தெரியும். நான் உங்க ஷேடோமாதிரி அய்யர்வாள்.

சங்கரன் : என்ன, ஷேடோவா? அப்படின்னு?

சி. ஐ. டி. : உமக்கு உடம்பு இருக்கோ இல்லியோ?

சங்கரன் : தெரியலியே! சந்தேகத்தைக் கிளப்பிட்டேளே? நேக்கு உடம்பு இருக்கா?

சி. ஐ. டி. : நான் கேட்டதுக்குப் பதில் சொல்லும் உமக்கு உடம்பு இருக்கா இல்லையா?

சங்கரன் : இருக்கிறுப் போலத்தான் இருக்கு.

சி. ஐ. டி. : அந்த உடம்புக்கு நிழல் இருக்கா இல்லையா?

சங்கரன் : இருக்கு இருக்கு இருக்கு.

சி. ஐ. டி. : உடம்புக்கு நிழல் எப்படி இருக்கோ அதே போல உங்களைச் சுத்தி பின்தொடர்ந்தே இந்த சி. ஐ டி. கிட்டு வட்டம் போட்டுண்டே இருப்பான். நீங்க எதையும் மறைக்க முடியாது. சொல்லட்டுமா? உதாரணத்துக்கு ஒண்ணே ஒண்ணு சொல்லட்டுமா? உம். நேத்து ராத்திரி உம்ம வீட்டிலே என்ன நடந்தது?

சங்கரன் : நேத்தா? ராத்திரியா? எங்கே? எப்போ?

சி. ஐ. டி. : நீங்க எதையும் மறைக்க முடியாது. சொல்லட்டுமா? உதாரணததுக்கு ஒண்ணேஒண்ணு சொல்லட்டுமா] உம். நேத்து ராததிரி உம்ம வீட்டிலே என்ன நடந்தது? உம் முழிக்கிறீர் பார்த்தீரா?

சங்கரன் : நேத்தா? ராத்திரியா?

சி. ஐ டி. : ஆமாம். நேத்து ராத்திரி உம்ம வீட்டிலே என்ன நடந்தது! மழுப்பாதீர்! மயங்காதீர்!

சங்கரன் : என்ன நடந்ததா? என் வீட்டிலா?

சி. ஐ. டி : ஆமாம். உம் வீட்டிலேதான்! ஒளிக்காம—உளராம—மறைக்காம—மலைக்காம சொல்லுங்க. ராத்திரியிலே என்ன நடந்தது?

சங்கரன் : போடா அசடு. அவா அவா வீட்டிலே் ஆயிரம் நடக்கும் உனக்கென்னடா?

சி. ஐ. டி. : இங்கேதான் இருக்கு விஷயம். நேத்து ராத்திரி என்ன நடந்தது? சொல்லிடும்.

சங்கரன் : சும்மா மாமியோட பேசிண்டிருந்தேள்.

சி ஐ. டி. : என்ன பேசிண்டிருந்தேள்? உம்! கம் ஆன்!

சங்கரன் : என்னடா இது, சில்லி கொஸ்டின்! அசட்டுக் கேள்வி! அது அந்தரங்கம்னு. ஒண்ணு ரெண்டா ஓராயிரம் பேசிண்டிருந்தோம்.

சி. ஐ. டி. : எதுவரையிலும் பேசிக் கொண்டிருந்தேள்.

சங்கரன் : விடியும் வரையிலே பேசிண்டிருந்தோம். அதெல்லாம் நோக்குச் சொல்லித்தான் ஆகணுமா? நல்லா இருக்குடா, இன்ஸ்பெக்டர் விசாரித்த லட்சணம். இது ரொம்ப ரொம்ப டெலிகேட் கொஸ்டின்! சே, கிட்டு! நீயோ இன்ஸ்பெக்டர் ஆயிட்டே!

இனிமேலாவது இப்படி அசடாட்டம் இல்லாம புத்தியா நடந்துக்கோடா!

சி. ஐ. டி. : ஓய் மறைக்காதேயும். நேத்து ராத்திரி உம்ம வீட்டிலே ராஜத் துரோகம் நடந்திருக்குங்கிறேன்!

சங்கரன் : என்னடா சொல்றே?

சி. ஐ. டி. : ராத்திரி உம்ம வீட்டிலே ராஜத்துரோகம் நடந்திருக்குன்னு சொல்றேன்! Sedition! ஆமாம்!

சங்கரன் : அப்படின்னு, ராத்திரியிலே அவா அவா வீட்டிலே நடக்கிற விஷயமெல்லாம் ராஜத் துரோகம்னு சொல்றியா? அப்பா கிட்டு! உன்னைப் போல் நாலு சி.ஐ.டி. இருந்தா போதும்டா. வெள்ளைக் காரன் பத்தே நாள்ளே கப்பல் ஏறிடுவான்!

சி. ஐ டி. : சரி, சொல்லமாட்டீர்; ரெக்கார்டு பண்ணி யிருக்கேன். நீர் ஒரு கவர்ன்மெண்டு செர்வன்ட்.

சங்கரன் : (கோபமாக) நான் கலெக்டர் P. A, வின் P.A, வின் P. A., பி கேர்புல்.

சி. ஐ. டி. : நான் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டரின் இன்ஸ் பெக்டரின் இன்ஸ்பெக்டர். பிகேர்புல் (Be carful) நேக்கு அடிக்கடி மூக்கு அரிக்கிறது.

சங்கரன் : சுத்த கழுகுப் பயடா நீ! உனக்கு மூக்கு மாத்திரம் அரிக்கலேடா; உன் கையும் அரிக்கிறது. itching palm டேய் புரிஞ்சுண்டேன். புரிஞ் சுண்டேன். உனக்கு ஏதாவது ஒரு வழி பண்ணி யாகணும். இல்லாட்டா என்னைவிடமாட்டே. நேக்கு தெரியும்; தீபாளி வருதுன்னு உன் மாமிக்குப் பட்டுப் புடவை வாங்க ஏதோ சேர்த்து வச்சேன். அது உனக்குப் பிடிக்கல்லே. பாக்கெட்லே பத்து

ரூபா நோட்டுகள் இருக்குடா; அதையே உத்துப் பாத்திண்டிருக்கே. உம்; தொலைச்சுக்கோ. இனிமே பேய் மாதிரி என்னை ஷேடோ பண்ணாதே!

சி. ஐ. டி. : மாமா, உங்களண்டைகூட கை நீட்டும்படி ஆயிட்டுது என் பிழைப்பு! என்ன பண்றது? நீர் யாரண்டையோ கை நீட்டியிருப்பேள்! நான் உம் மண்டை கை நீட்டறேன். இந்த உலகமே ஒரு கை நீட்டு உலகம். கைஊட்டு உலகம். எனக்காக நான் லஞ்சம் வாங்கலே. அந்த கலெக்டர் ஆஷ் துரைக்கு சால்ட்வாட்டர் மீன் சாப்பிட்டு சலிச்சுபோச்சாம்— ஸ்வீட் வாட்டர் மீன் வேணுமாம். அத்தோட விருந்துக்கும் ஒரு பசுமாடும் பன்றியும் வேணுமாம் அதுக்காக நிதி சேர்க்கறேன். சரியா சேரல்லே.

சங்கரன் : என்ன நிதி. ஏண்டா இப்படி இம்சை பண்றே. மீன் பன்னி, பசுமாடு இதுகளைத்தான் அடிக்கடி புடிச்சு நோக்கு நல்ல பழக்கமுண்டே, சின்ன வயசிலேயே நீ பன்னியை நன்னு புடிப்பியே! ஏதாவது ஒரு பன்னியைப் புடிச்சுத் தர்றதுதானே, அந்தத் துரைக்கு, சரி, டேயப்பா; எங்கேட்டே உள்ளன மாதிரி மத்தவாகிட்டே உளராதே! லஞ்சம்னு கெஞ்சாதே! மாமிச உதவி நிதின்னு கேட்டு வாங்கு. மாட்டை அடிச்சி அந்தத் மக்கு துரைக்கு விருந்துவை. இந்தா வச்சுக்கோ. குட்பை, வர்ரேன் ஏண்டாப்பா, பத்து ரூபாய்க்கு ஆயிரம் ரூபா சிரமத்தைக் கொடுத்துட்டேடா. இந்த வெட் வேலையை விட்டுட்டு சுதந்திர வீரர்களைப் புடிக்கிற வேலையைப் பார்டா. காகா புடிக்காதே! கலகத்தை கௌப்பாதே!

## காட்சி முடிவு

## காட்சி : 7

காலம் : மாலை.

இடம் : பொதிய மலைச்சாரலில் ஒரு சிறிய குகை-சிறு காளிகோயில்.

நிகழ்ச்சி : தேச வீரர்கள் சபதமிடுதல், ஆஷ் துரையைக் கொல்ல வாஞ்சிநாதன் தேர்ந்தெடுக்கப்படுதல்.

பாத்திரங்கள் : வாஞ்சிநாதன், மாடசாமி, சங்கரன், நீல கண்ட பிரமச்சாரி, மற்றும் பலர்.

எல்லோரும் : ஜெய் மகாகாளி.

மாடசாமி : இதைப் பார்த்தீங்களா? நம் தலைவர் சிதம்பரம் அய்யாவுக்குப் போட்ட ஜென்ம தண்டனையை பெரிய கோர்ட்டும் ஊர்ஜிதமாக் கிட்டுது; தலைவர் சிவத்தைச் சித்ரவதை பண்ணுறுங்க! நாலு நாள் பிரசங்கம் பண்ணினதுக்கு நாற்பது வருடம் கடுங்காவல தண்டனை! வெறி நாயை விரட்டுவதுபோல் என்னை போலீஸ் துரத்துது; என்னைப் பார்த்த இடத்தில் சுட்டுப் பொசுக்கும்படி உத்தரவு போட்டிருக்கு!

வாஞ்சி : இனியும் காலத்தை வீணாக்குவது முட்டாள் தனம்; நமது மக்களை வேட்டையாடத் துணிந்த இந்த வெள்ளை வெறி நாய்களைக் கண்ட இடத்தில் அடித்துக்கொல்வதே நமது வேலை. தாயே பராசக்தி நாங்கள் உன்னை வேறொன்றும் கேட்கவில்லை; செல்வத்தைக் கேட்கவில்லை: சுகபோகங்களைக்

கேட்கவில்லை; நீண்ட ஆயுளைக் கொடு என்று கோரவில்லை; இன்பத்தைக் கோரவில்லை; இப் புண்ணிய பாரத நாட்டை வாட்டி வதைக்கும் அன்னிய ஆட்சியை வெல்லும் வல்லமையை மட்டும் கொடு தாயே! அதற்கு வேண்டிய மனோ திடத்தை—வீர வைராக்கியத்தை எங்களுக்குக் கொடு தாயே! தாய் நாட்டின் விடுதலைக்காக எத் தகைய பயங்கரத் துன்பத்தையும் புன்னகையோடு ஏற்றுக்கொள்ளும் துணிச்சலை எங்களுக்குக் கொடு தாயே கொடு.

நீலகண்ட பிரம்மச்சாரி : (வந்து) நண்பர்களே.

சங்கரன் : யாரது?

வாஞ்சி : அண்ணா நீலகண்ட பிரம்மச்சாரி.

நீலகண்ட : (சிரிப்பு) ஏன் இவ்வளவு பதட்டம்?

மாடசாமி : பதறாமல் இருப்பது எப்படி அய்யா? நம் தலைவர்கள் சிறையில்; என் தாய் இறந்து விட்டாள். கவலைப்படாமல் எப்படி அய்யா இருப்பது?

நீலகண்ட : (சிரித்து) சிறையும் சுடுகாடும் வீரர்களின் விளையாட்டு மேடைகள் தம்பி. சுதந்திரதேவி தியாகிகளுக்குக் கட்டி வைத்த திருக்கோயில்கள் அவை.

மாடசாமி : இன்னும் எங்கள் கையைக் கட்டி வைக்கா தீங்க; இனிமேல் அமைதியா இருக்கிறதிலே அர்த்தமில்லை.

நீலகண்ட : ஆம், சாந்தி மலர் சக்திதேவிக்குப் பிடிக்க வில்லை; அன்னை மாகாளி சோதிக்கிருள். இருந் தாலும் காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும். வெறும் கையால் முழம் போடுவதால் வேட்டி கிடைத்துவிடாது தம்பி: வெடியை வெடியால்தான் வெல்ல முடியும்.

வாஞ்சி : வரவர நீங்கள் வேதாந்த பாடங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறீர்கள்!

நீலகண்ட : வாஞ்சி, அரக்கபலம் படைத்த வெள்ளை ஆட்சியை எதிர்க்க ஆயுதபலம் தேவை இப்போது. நம்மிடம் இருக்கும் சில துப்பாக்கிகள் போதாது; சீக்கிரமே நாம் எதிர்பார்க்கும் ஆயுதங்கள் வரும் ஜெர்மனியிலிருந்து டாக்டர் சண்பகராமன் பிள்ளை ஒரு கப்பல் நிறையக் கனரக ஆயுதங்களை அனுப்ப ஏற்பாடுகளைச் செய்துள்ளார். அதை எதிர்பார்த்துப் பாண்டிச் சேரியிலே வீரர் வ. வே. சு காத்துக் கொண்டிருக்கிருர். வரட்டும்; வந்ததும், ஆதிக்க வெறியர்களுக்கு தீபாவளிப் பண்டிகை கொண்டாடு வோம். (உணர்ச்சியும் எழிச்சியுமிக்க உரத்த குரலில்) உம்; அன்னைமுன் ஆணையிடுங்கள். உற்ற துணைவியிடமும் பெற்ற தாயிடமும் நமது ரகசியத் தைச் சொல்ல மாட்டோம். உடல், பொருள், ஆவி அனைத்தையும் சுதந்திரத்துக்காகப் பலி கொடுப் போம். இதோ...இதோ...உறுதி மொழிப் பத்திரம், நம் உயிரின் ஊற்முன இரத்தத்தால் கையொப்ப மிடுங்கள்.

[முதலில் அவர் காளி அன்னையின் சூலத்தில் தனது பெரு விரலை அரிந்து, அதிலிருந்து பீறிட்ட ரத்தத்தால் கையெழுத்திடுகிருர்.]

வாஞ்சி : ஆண்டவன் மீதாணை; பெற்றெடுத்த அன்னையின் மீது ஆணை; பிறப்பளித்த தேசத்தின் மீதாணை. பாச மிக்க தந்தை மீது ஆணை! நமது தேச பக்திப் புரட்சி இயக்கத்தின் ரகசிய முடிவுகளை வேற்றூர் எவருக்கும் மறந்தும் வெளியிடமாட்டோம். நாம் செய்யும் முடிவுகளும் வார்த்தைகளும் இந்தக் குகையை விட்டு எக்காரணம் கொண்டும் வெளியே செல்ல விட மாட்டோம்.

[வாஞ்சியுடன் மாடசாமியும் சேர்ந்து சொல்கிறான்]

வாஞ்சி : இங்கு நாம் போடும் திட்டங்களைச் செயலாக்குவதே நமது கடமை. இந்தப் புனிதமான கடமையில் எமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்போம். இது சத்தியம்.

அனைவரும் : இது சத்தியம்; சத்தியம்.

நீலகண்ட : தாயே பராசக்தி; உனது திருவடி முன்னால் உனது மைந்தர்கள் செய்துள்ள இச்சபதம் நிறைவேற அருள் செய் தாயே, அருள்செய்!

அனைவரும் : ஜெய் மகாகாளி; ஜெய்மகாகாளி; ஓம் சக்தி.

மாடசாமி : மற்றொரு முக்கியமான விஷயம்.

வாஞ்சி : என்ன அது?

மாடசாமி : கலெக்டர் ஆஷ்...

வாஞ்சி : என்ன அவனுக்கு?

மாடசாமி : தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் மணியாச்சி ஜங்ஷன் வழியாக கொடைக்கானலுக்குப் போகிறானும்,

வாஞ்சி : கொடுமையின் சூடு தீரக் குளிர்மலைக்குப் போகிருனு கொலைகாரன்?

மாடசாமி : ஆம்; எமன் அங்கிருந்து அவனை அழைக்கிருன்; சுதந்திரத்தின் சின்னமான நம் சுதேசிக் கப்பல்—கம்பெனியை நாசமாக்கிய நயவஞ்சகன்! நமது இயக்கத்திற்கு முதல் பலியாக வேண்டியவன் அந்தக் கலெக்டர் ஆஷ்.

வாஞ்சி : ஆம். இம்முறை எப்படியும் பழி தீர்த்தே ஆக வேண்டும். இந்த வேலையை நானே முடிக்கிறேன். தலைவர் வ. உ. சி. செக்கிழுக்கவும், வீரர் சிவம் சித்ரவதை அனுபவிக்கவும், சுதேசிக் கப்பல் அழியவும், ஆயிரமாயிரம் தேசபக்தர்கள் பரதேசிகள் போல் அலைந்து வாடிச் சாகவும், காரணமான அந்த அரக்கனைக்காலனிடம் அனுப்பும் பொறுப்பை என்னிடம் ஒப்படையுங்கள்.

ஒரு வீரர் . இல்லை; நான்தான் போக வேண்டும்.

சங்கரன் : வேண்டாம். அவனை என்னிடம் விட்டு விடுங்கள்.

மாடசாமி : எல்லோரும் இந்த மாடசாமியை மறந்தே பேசுகிறீர்கள். உத்திரவு கொடுங்கள் அய்யா!

நீலகண்ட : தம்பி, இது மரணத்தோடு விளையாடும் பயங்கர விளையாட்டு. அன்னை, யாருக்கு உத்தர விடுகிருளோ அவனே இந்தப் பெரும் பணியைச் செய்யத் தகுதி வாய்ந்தவன். உம், சீட்டெழுதுங்கள். அன்னையிடம் கேட்போம்.

எல்லோரும் ; ஆம், அதுதான் சரி.

வாஞ்சி ; சரி.

சங்கரன் : இதோ காகிதம்! எழுதுங்கள்.

நீலகண்ட : ஜெய் மகாகாளி.

எல்லோரும் : ஜெய் மகாகாளி:

சங்கரன் : வாஞ்சி! எங்களில் நீதான் இளைஞன். அன்னையை நன்ருகப் பிரார்த்தனை செய்துகொண்டு சீட்டை எடு தம்பி.

வாஞ்சி : ஓம் மகா காளி.

[வாஞ்சி சீட்டை எடுக்கிருன். மாடசாமி அதை வாங்கி ஆவலோடு பிரித்துப் பார்க்கிருன். ஆனல் வாஞ்சியின் பெயர் வந்துள்ளது.]

மாடசாமி : ஆ வாஞ்சி!

வாஞ்சி : ஆகா! தாயே உனக்கு ஆயிரம் கோடி வந்தனம்: என் பிரார்த்தனையை நிறைவேற்றி விட்டாய்.

மாடசாமி ; வாஞ்சி, நீயா?

[இந்த சமயத்தில் எல்லோரும் மேடையின் முன் பகுதிக்குப் பேசிக் கொண்டே வரவேண்டும்; பின்னணியில் ஒரு காட்டுப் படுதா விடுதல் வேண்டும்.]

நீலகண்ட : முடியாது. வாஞ்சிக்குப் பதில் நான் போகிறேன். பருவச் சோலையின் முதல் மலரைக்கூட நுகர்ந்தறியாதவன் வாஞ்சி.

வாஞ்சி : அன்னை அளித்த ஆணை இது. இதை மாற்றவோ மறுக்கவோ யாருக்கும் உரிமையில்லை.

நீலகண்ட : (சிரிப்புடன்) வாஞ்சி, அன்னையின் ஆணையை யாரும் மீறவில்லை. ஆனால் தன் தம்பிக்காக, ஒரு அண்ணன் பலியாவதை அன்னை ஒரு போதும் தடுக்கமாட்டாள். கொஞ்சம் பொறுமையாக யோசித்தால் என் வார்த்தை உங்களுக்குப் புரியும்.

மாடசாமி : ஆம் தம்பி. அவர் சொல்றபடியே செய்வோம். உனக்குப் பதில் நான் போகிறேன்.

[எல்லோரும் கலங்குகிறார்கள்]

வாஞ்சி : ஏனய்யா இப்படிக் கலங்குகிறீர்கள்? வீரமாகப் பேசுவதெல்லாம் வெறும் வாயளவில்தானா? செயல் என்று வரும்போது ஏன் இப்படி அஞ்சி நடுங்குகிறீர்கள்? நான் போனால் என்ன முழுகிவிட்டது. பாரதப் போரில் பலியான அரவானும், அபிமன்யுவும் இளைஞர்கள்தானே? உலகம் தோன்றிய நாள் முதல் தர்ம யுத்தத்தின் வேள்விக்கு முதல் பலியானவர்கள் வாலிபர்கள்தான். ஆனால் நான் அவர்களைப்போல் மடிய மாட்டேன். எதிரியின் உயிரை முடித்து வெற்றியுடன் திரும்பி வருவேன். இது சத்தியம். விடை கொடுங்கள்! உம்.

நீலகண்ட : வாஞ்சி! நில், நீ போக வேண்டாம்.

வாஞ்சி : தடுக்காதீர்கள் வார்த்தை ஒன்றுதான் என்பது மனிதனுக்கு மட்டுந்தானா? பராசக்திக்கு இல்லையா?

நீலகண்ட : மூத்த சகோதரன் என்ற முறையில் கேட்கிறேன். எனக்காக மற்றொருமுறை சீட்டைப் போட்டுப் பார்க்கலாம். இம்முறை யார் பெயர் வருகிறதோ அவர் போகலாம்.

வாஞ்சி : அது சாத்தியமில்லை அய்யா நான் வருகிறேன் வணக்கம் வந்தேமாதரம்! ஜெய் மகாகாளி!

[வேகமாகப் போகிறான்]

**காட்சி முடிவு**

## காட்சி : 8

காலம் : பகல்

இடம் : மணியாச்சி ஜங்ஷன்.

நிகழ்ச்சி : கலெக்டர் ஆஷை வீரன் வாஞ்சி சுட்டுக் கொல்லுதல்.

பாத்திரங்கள் : ஆஷ், வாஞ்சி, சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் கிட்டு, இரு போலீஸ்கள்.

[ஆஷ் துரை பிளாட்பாரத்தில் தன் வண்டியின் சன்னல் அருகே நின்று பேப்பர் படிக்கிறான். போலீஸ் சி. ஐ. டி. இருக்கிறான்]

ஆஷ் : (பேப்பர் படித்தல்) வங்காளத்தில் பயங்கர இயக்கம். ஜில்லா கலெக்டர் சுட்டுக் கொல்லப்பட்டார். சுதந்திர வீரர்களுக்குத் தூக்குத் தண்டனை பயங்கர இயக்கம்! இங்கு நடக்காது. நடக்க விடமாட்டேன். திஸ் ஆஷ் வில் ஸ்மேஷ் தி ரிவொல்யூஷன். இன்ஸ்பெக்டர், ட்ரெயின் புறப்படயம் ஆகும். யூ கெட் மி சம் காபி.

போலீஸ் : எஸ் சார்.

[இன்ஸ்பெக்டர் போகிறான். பிறகு வாஞ்சி அருகே வருகிறான்.]

வாஞ்சி : என்ன திருநெல்வேலி கலெக்டர் மாண்புமிகு மிஸ்டர் ஆஷ் துரை அவர்களே! குட்மார்னிங், என்ன. சௌக்கியமா? எப்படி இருக்குது உம்ம துப்பாக்கித் துரைத்தனம்?

ஆஷ் : (திகைத்து) ஹூ ஆர் யூ?

வாஞ்சி : நானா? பாரதப் பொன்னாட்டின் சுதந்திரப் போர் வீரன்.

ஆஷ் : ஓ! யூ பிளாக் டாக் ப்ளடி இண்டியன். கெட் அவுட்.

வாஞ்சி : உஸ். சத்தம் போடாதே. சத்தம் வந்தால் அடுத்த விநாடி செத்த பிணமாவாய். இங்கு எங்கும் எங்கள் ஆட்கள். போலீஸால் உன்னைக் காப்பாற்ற முடியாது உம்.

ஆஷ் : ஐயாம் ஸாரி. ப்ளீஸ் ப்ளீஸ். எக்ஸ்கியூஸ் மி. கமான். டேக்யுவர் சீட். உள்ளே வா! (என்று கம்பார்ட்மெண்டுக்கு கை காட்டுகிறான்)

வாஞ்சி : நிலைமை மிஞ்சிவிட்டதால் கெஞ்சுகிறாயோ?

ஆஷ் : உனக்கு என்ன மிஸ்டர் வேணும்?

வாஞ்சி : உன் உயிர்தான் வேண்டும் எனக்கு. ஐ வாண்ட் யுவர் லைஃப்!

ஆஷ் : ஓ...மை லைஃப். மை காட், வேண்டாம் மிஸ்டர்

வாஞ்சி : உஸ்-சைலன்ஸ்.

ஆஷ் : நான் குழந்தைகுட்டிக்காரன். பேமிலிமேன், வேணாம், வேணாம் மிஸ்டர்.

வாஞ்சி : அன்று நீ கொன்று குவித்தாயே. அவர் களுக்கு மட்டும் குழந்தை குட்டி இல்லையா? அவர்

களுக்கு மட்டும் உயிர்ப் பாசம் இல்லையா? அலறித் துடித்த அந்த அபலைகள், வாழ உரிமையற்ற அடிமைகள் என்றுதானே வெறிகொண்டு வேட்டையாடினாய்?

ஆஷ் : நடந்ததையெல்லாம் மறந்துடு. இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னிச்சிடு. ப்ளீஸ். ப்ளீஸ்

வாஞ்சி : மறப்பதும் மன்னிப்பதும் தலைவர்கள் வேலை. நான் தொண்டன். என் வேலையைச் செய்வதே என் கடமை.

ஆஷ் : ஒரு தடவை ஆண்டவனுக்கு ப்ரேயர் பண்ண டைம் கொடு மிஸ்டர். ப்ளீஸ்.

[என்று அவன் கோட்டுப் பைக்குள் கையைவிட ரிவல்வரால் ஆளை சுட்டு விடுகிறான்.

சி. ஐ. டி. : (காபியுடன்) சார் காபி ரெடி.

[சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் கிட்டு வந்தது தெரிந்தவுடனே வாஞ்சி, ஆஷ் துரையை மூன்றுமுறை சுட்டு வேட்டை யாடிவிட்டு மறைகிறான். உள்ளே போனவுடன் போலீஸ் துரத்த மீண்டும் மேடைக்கு வருகிறான். அங்கே ஆண்கள் என்ற போர்டுக்கு அருகில் உள்ளே ஓடி தன் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக் கொள்ளுகிறான்—தன் தாய்நாட்டை அவமானப் படுத்திய வெள்ளையனைக் கொன்றது யாரென்று அடையாளம் கண்டு ஆபத்து வரும்—அந்த ஆபத்து அவர்களுக்கு நேரக்கூடாது என்ற எண்ணத்தில் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டு அமரனாகிறான் அந்த மாவீரன்.]

**காட்சி முடிவு**

## காட்சி : 9

இடம் : பாண்டிச்சேரியில் ஒரு சோலை.

பாத்திரங்கள் : பாரதியார், பாரதிதாசன், அரவிந்தர்' சி. ஐ. டி. கிட்டு.

வைகறைவேளை! குயிலோசையில் மனதைப்பறி கொடுத்து நிற்கிறார் பாரதி. அதை ரசித்த வண்ணம் பாரதி பேசுகிறார்.)

பாரதி : ஆ! மனிதனை அமரனாக்கும் குயிலிசையே நீ வாழ்க!

காட்டு நெடுவானம் கடல் எல்லாம்
விந்தையெனில்,
பாட்டினைப் போல் ஆச்சரியம்
பாரின் மிசை இல்லையடா!
காட்டில் விலங்கறியும்
கைக் குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப்
பாம்பறியும் என்றுரைப்பார்!

(பிச்சைக்கார மாறுவேடத்தில் வந்த துப்பறியும் போலீஸ் கிட்டு.)

சி. ஐ. டி. ஐயா! பசிக்குதய்யா! பிச்சை போடுங்கய்யா!

பாரதி : யாரடா அவன்? காலையில் பிச்சை கேட்கிறான்?

[மாறுவேடத்தில் இருக்கும் துப்பறியும் போலீஸை கொஞ்சம் உற்றுக் கவனித்து]

அடே! நீ இந்த நாட்டு மன்னனடா! மன்னன் பிச்சை எடுக்கக் கூடாது! கண்ணியமா வாழ ணும்! கையேந்தக் கூடாது! அதோ பார் வானில் குயில் பாடுகிறது. அதைக் கேளடா அழியும் மனிதனே! அமரகீதத்தைக் கேள்! அறிவிலே தெளிவு வரும்! ஆனந்தம் கிடைக்கும்.

சி. ஐ. டி. : உம் கிடைக்கும்! கிடைக்கும்! வயித்துப் பசி காதை அடைக்குது! பாட்டு எப்படிங்க கேக்கும்? பாவம்! குயிலும் பசி தாங்காமல்தான் கத்துது போலிருக்கு. அதை நீங்க கீதம்நாதனும்னு கவிபாட றிங்க. காசு, கீசு இருந்தா கொடுங்க.

பாரதி : என்ன துணிச்சலடா உனக்கு! என்னைப் பார்த்து காசு கேட்கிறாய்! தமிழ்க் கவிஞன்தானே இவனிடம் காசு எப்படி இருக்கும் என்று சோதிக் கிறாயா? அடே இந்தப் பாரதி கொடுக்கும் கவிஞனடா, எதையும் எடுக்கும் கவிஞன் அல்ல...

[சட்டைப்பையில் இருந்த சில்லரையை எடுத்து அவனுக்குக் கொடுத்து இந்தா சில்லரை ·எடுத் துக் கொள் 'போய்விடு]

சி. ஐ. டி. : ஐயா! கொஞ்சம் இந்த பாண்டிச்சேரி எல்லை யைத் தாண்டி வாங்கய்யா!

பாரதி : எல்லா எல்லைகளையும் தாண்டிய கவிஞனடா நான்! எங்கே அழைக்கிறாய்?

சி. ஐ. டி. : அதோ! அங்கே இருக்கிற குப்பத்துக்குப் பக்கத்துலே என் குடிசை இருக்குது! அங்கே என் குழந்தை குட்டி எல்லாம் பட்டினிக் கிடக்குது!

நீங்களே நேரில் வந்து பாருங்கய்யா வாங்கய்யா— வாங்கய்யா

[என்று பாரதியார் கையைப் பிடித்து இழுக்க]

பாரதி : நில்! நில்!! யாரடா நீ?

[இந்தச் சமயத்தில் பாரதிதாசன் விரைந்து வந்து]

பாரதிதாசன்: ஐயா! இவன் யாரென்று உங்களுக்குத் தெரியவில்லையா?

பாரதி : தெரிந்து கொண்டேன்! தம்பி! இந்த ஆள் யார், எதற்காக வந்தான், என்று நன்ருகத் தெரிந்து கொண்டேன். இவன் போட்ட வேடத்துக்கு மதிப்பு கொடுத்து வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந் தேன். (C. I. D.) அடே தம்பி நில்! முன்ஞெரு தடவை வேறு ஒரு வேடத்தில் வந்தாய்! இப்போது பிச்சைக்காரனுய் வந்திருக்கிருய். தம்பி! கனக சுப்பு ரத்தினம்! இவனது திருட்டுப் பார்வையே இவனைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இவன் எல்லாம் ஒரு துப்பறியும் போலீஸ். துப்புக் கெட்ட பயல்' போயும், போயும் நம்மையே துப்பறிய வந்திருக்கிருன்.

பாரதிதாசன் : டேய் தம்பி! உன்னைக் கடைசி தடவை யாக எச்சரிக்கிறேன். ஐயாவை இனித் தொந்தரவு செய்தால் உன்னைக் கட்டிக் கடலில் போட்டு விடு வேன்! ஜாக்கிரதை!

[அடிக்கப் போகிருர்]

பாரதி : தம்பி! விட்டுவிடு! பாவம் வாங்கிய கூலிக்கு ஏதோ வேலை செய்கிருன். டே தம்பி! விளையாட்டுக்

குககூட பிச்சைக்காரனுகமாருதே! அடே! உலகில் 84 லட்சம் ஜீவராசிகள் இருக்கின்றன என்று சொல்லு கிருர்கள். இதில் பகுத்தறிவுள்ள மனிதன் மட்டுந் தானடா பிச்சை எடுக்கிருன். வேறெந்த ஜீவராசி யும் பிச்சை எடுப்பதில்லை. பிச்சை எடுப்பதை விட கொள்ளையடிப்பது எவ்வளவோ மேலடா! அடே அதற்காகக் கொள்ளைகாரனுக மாறி விடாதே! யாராவது கேட்டால், பாரதிதான் கொள்ளையடிக்கச் சொன்னுன் என்று சொல்லாதே! போ, போய்விடு)

[போய்விடுகிருன்]

பாரதிதாசன் : ஐயா கொஞ்ச நேரம் நான் வராமலிருந் தால் கட்டாயம் உங்களை அவன், எல்லைக்குஅப்பால் அழைத்துக் கொண்டு போயிருப்பான். எல்லையைத் தாண்டியதும் கைது செய்திருப்பான்!

பாரதி : போகட்டும் தம்பி! நான் எதற்கும் தயார்

பாரதிதாசன் : நீங்கள் தயாராக இருக்கலாம். ஆனுல் உங்களைப் பிரிய நாங்கள் தயாராக இல்லை. ஆமாம்! யாரிடமும் சொல்லாமல் எங்கே அதிகாலையில் புறப் பட்டு விட்டீர்கள்.

பாரதி : தம்பி! எனக்கு! ரகசியத் தகவல் வந்துள்ளது. மணியாச்சி ஜங்ஷனில் வீரவாஞ்சிநாதன் கலெக்டர் ஆஷைக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டு விட்டான் அல்லவா? இதன் காரணமாக தேசபக்தர்கள் அனைவரையும் கைது செய்து விட்டனர். ஏற்கனவே சிறையிலுள்ள சிதம்பரம் பிள்ளையையும், சிவாவையும் மேலும் சித்திரவதை

செய்கிறார்களாம்- நான் நேரில் சென்று அவர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டும்.

*பாரதிதாசன் :* முடியாது! ஐயா நீங்கள் நினைக்கும் காரியம் நடக்காது! நண்பர்களை உங்களால் பார்க்க முடியாது.

*பாரதி :* ஏன் தம்பி முடியாது?

*பாரதிதாசன் :* நீங்கள் பாண்டிசேரி எல்லையைத் தாண்டியதுமே உங்களை கைது செய்து விடுவார்கள், சுதந்திர வானம்பாடியான உங்களை அடிமைச் சிறையில் தள்ளி, சில நாட்களில் உயிரையே வாங்கி விடுவார்கள். அதனால்தான் உங்களைப் பத்திரமாக வைத்திருக்கிறோம்,

*பாரதி :* ஏன் தம்பி! இப்படிச் செய்தான் என்ன?

*பாரதிதாசன் :* எப்படி ஐய்யா?

*பாரதி :* நாம் இருவரும் மாறுவேடத்தில் சென்றால் என்ன?

*பாரதிதாசன் :* குழந்தை உள்ளமய்யா உங்களுக்கு! ஒரு கணங்கூட உங்கள் உணர்ச்சிகளை நீங்கள் மறைத்து வைக்க முடியாதே! அதோ அரவிந்தர் வருகிறார்!

*பாரதி :* மஹான் அரவிந்தரா! வாருமய்யா! புதுயுக மனிதரே!! வாரும். வாரும்.

*அர :* என்ன மகாகவி பாரதியார் மனம் கொதித்து நிற்கிறார். ஐயா! இந்த மண்ணைக் கொஞ்சம் மறந்து

விண்ணைப் பாடுங்களய்யா! மன ஆறுதலாவது கிடைக்கும்.

பாரதி : இந்த மண்ணை மறப்பதா? எப்படியய்யா முடியும்? அது என்னுல் முடியவில்லையே! அரவிந்தரே! ஓய்நீர் பாக்யசாலி அய்யா! நினைத்ததும் யோகவிமானதில் ஏறி, பிரபஞ்சமெல்லால் சஞ்சாரம் செய்கிறீர்! என்னுல் அது இயலவில்லையே அய்யா! வானத் தந்தை அங்கே அழைக்கிருன்! பூமித் தாய் தன்னைப் பாடுமாறு இங்கே கட்டளையிடுகிருள்! ஒன்று பக்தி மற்ருென்று பாசம். இரு பெரும் சக்திகளுக்கிடையே அகப்பட்டுத் தவிக்கின்ருன் இந்தப் பாரதி! என் செய்வேன்? சொர்க்கம்கூட எனக்குப் பெரிதில்லை என் நாடுதான் அய்யா எனக்குப் பெரியது. தாயே! உனக்காகவே வாழத் துடிக்கும் இந்த மைந்தனைக் காப்பாற்று.

நல்லதோர் வீணை! செய்தே-அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி—நீயும் எனைச்
சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ–இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே!!

அர : ஆஹா! பாரதி! சக்தியை மேலும் பாடுங்கள்

பாரதி : சக்தியைப் பாடுகிறேன். பாடுகிறேனய்யா.

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம்—அவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ

வஞ்சனையின்றிப் பகையின்றி சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்ச மென்றே யுரைப்பீர் அவள் பேர் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்.

அர : ஆஹா! பராசக்தியே தன் சக்திக் குரலால் பாடும் வீரமணி நாதம்! ஆத்மாவின் அமர கவிதை!

பாரதிதாசன் : அய்யா. நாட்டைப் பாடும்போது பாயும் வேங்கையாகிவிடுகிறீர்கள். வீட்டைப் பாடும்போது மீட்டும் வீணையாகி விடுகிறீர்கள்! நீங்கள் வீணை யாகவே இருங்கள் அய்யா!

பாரதி : நாமெல்லாம் வீணையாகிவிட்டால் விடுதலைப் பணிகளை ஆற்றுவது எப்படி அப்பனே? அரவிந்தரே! நம் தம்பி கனகசுப்புரத்தினம் ஒரு சிறந்த கவி! காந்த மழைபொழியும் கவிதா மேகம்! தம்பி சுப்பு ரத்தினம், பாடு தம்பி பாடு; உன் அழகுத் தமிழை ஆங்கிலத்துப் பெருங் கவிஞர் அரவிந்தர் கேட்டு மகிழட்டும்.

பாரதிதாசன் : நானு! உங்கள் முன்பா! எதைப் பற்றி அய்யா பாடுவது?

பாரதி : அன்று ஒரு நாள் பாடிய அந்த சக்திப் பாடலை பாடு. எங்கும் நிறைந்த மகா சக்தியைத் தங்கத் தமிழில் பாடு. தம்பி பாடு. இந்த் வங்கச் சிங்கம் கேட் கட்டும். அன்று பாடிய அதே வேகத்தில்... உம் பாடு...

பாரதிதாசன் :

எங்கெங்கும் காணினும் சக்தியடா-தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ஜனை செய்வது கண்டதுண்டோ—எனில்
மங்கை நகைத்த ஒலி யெனலாம்—அவள்
மந்த நகை யங்கு மின்னுதடா!
காளை ஒருவன் கவிச் சுவையைக்—கரை
காண நினைக்கும் முழு நினைப்பில்—அன்னை
தோளசைத்தங்கு நடம் புரிவாள்—அவன்
தொல்லறிவாளர்த் திறம் பெறுவான்

பாரதி : ஆஹா! கேட்டீர்களா? அரவிந்தரே!
காளை ஒருவன் கவிச் சுவையைக் கரை
காண நினைக்கும் முழு நினைப்பில்—அன்னை
தோள சைத்தங்கு நடம் புரிவாளாம் தொல்லறி
வாளர் திறம் பெறுவானும்

பலே பாண்டியா பலே! வருங்கால உலகம் உன்னைப் பாவேந்தன், புரட்சிப் புலவன் என்றெல்லாம் போற்றிப் புகழும்.

பாரதிதாசன் : உலகம் என்னை எப்படி அழைத்தால் என்னய்யா? மகா கவி பாரதியின் தாசன் என்ற பெருமையே எனக்குப் போதும்! தமிழகத்தின் புதிய வாழ்வைத் தங்கள் உயிரில் காணுகிறேன்.

பாரதி : இல்லை தம்பி! நீ தொல்லாண்மைத் திறம் பெற்று விட்டாய்! ஆம்! இனி இந்த மண்ணிற் புரளும். புல்லறிவாளரைப் பாடாதே நல்லறிவாளரை யேபாடு! வரப் போகும் சுதந்திரத்தைப் பற்றி விரி

வாகப் பாடு தம்பி. வயலிலே வேலை செய்யும் உழவர் பெருமக்கள் முதல் வெள்ளைக்காரனுக்கு வால் பிடிக்கும் கூலிச்சிறுபயல்கள் வரை நாட்டுணர்வு கொண்டு வீறு கொண்டு ஏறுநடை போடும்படி உன் சாரத்தமிழில் பாடு தம்பி பாடு!

அர : மஹா கவியே! நமது நாட்டு மக்கள் அவ்வளவு விரைவில் உணர்வு பெற்று விடுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் நினைப்பதுபோல் இந்த நாட்டுக்கு அவ்வளவு விரைவில் சுதந்திரம் வரும் என்று கருதுகிறீர்களா? எனக்கு என்னவோ இன்னும் நம்பிக்கை வரவில்லை.

பாரதி : என்ன!! வீர அரவிந்தரே! தங்களுக்கா இந்த சந்தேகம். பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை நடுநடுங்க வைத்த தாங்களா இப்படிப் பேசுவது? தாகம் தீருமா என்று கங்கா நதி சந்தேகப் படலாமா அய்யா? ஜோதி வருமா என்று சூரியன் சந்தேகப்படுவதுண்டா அய்யா? என்னைப் பொறுத்தவரை ஐயமே இல்லை அய்யா! நான் தங்களைப் பார்ப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம் இந்த நாடு சுதந்திரம் பெறப் போவது! உறுதி! சத்தியம்! இல்லையேல் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் தூக்கில் மாண்ட தியாகிகளும், செய்த தியாகம் எல்லாம் அர்த்தமற்ற செயலாகிவிடும். இந்தியாவிற்கு சுதந்திரம் வந்தால் உலகில் தர்மம் மீண்டும் எழுந்து விட்டது என்று அர்த்தம். நீதி பிழைத்து விட்டது என்று பொருள்! உறங்கிக் கிடந்த பாரதம் விழித்தெழுந்து விட்டது. இனி இதை எந்த சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது! ஓராயிரம் வருடம் உறங்கிக் கிடந்த பாரத சக்தி உற்சாகம் கொண்டு வீறு நடை போடத்

துவங்கி விட்டது! உங்களையும், தம்பி கனகசுப்பு ரத்தினத்தையும் பார்ப்பதுபோல பாரத நாட்டின் சுதந்திரத்தை என் கண் முன்னே இன்றே, இப் போதே இக்கணமே காண்கிறேன்.

பாரதி : பாரத சுதந்திரத்திற்காக நமது பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய், இந்தத் தள்ளாத வயதில் நாடு கடத்தப்பட்டு அமெரிக்காவில் தனிமையில் வாடு கிறார். நாடிழந்து மக்களையும் நல்லுறவைத் தானிழந்து வீடிழந்து உயிரிழந்த வீரர்கள் எத்தனை பேர்? சுதந்திரதேவி! சீக்கிரம் வந்துவிடு-இல்லையேல் எனக்கே உன்மேல் சந்தேகம் வந்து விடும்!

பாரதிதாசன் : அய்யா தாங்கள் இரண்டு நாளாக சாப்பிடவில்லை. உடம்பும் சரியில்லை.

பாரதி : உள்ளம் சரியில்லை. பசி தெரியவில்லை. சரி நான் வருகிறேன்.

பாரதிதாசன் : அய்யா! உங்களுக்குத் தெரியாதா?

பாரதி : என்ன?

பாரதிதாசன் : உங்கள் குவளைக் கண்ணனுக்கு ஏகப் பட்ட காய்ச்சல். ஆபத்தான நிலையில் படுத்திருக் கிறான்.

பாரதி : ஆ! குவளைக் கண்ணன்! என் குழந்தை! காய்ச்சலா?

பாரதிதாசன் : ஆம்.

பாரதி : சரி, அவனைப் பார்த்தபின் கோவை போகலாம்.

பாரதிதாசன் : ஆமாம். அப்படியே செய்வோம். இப்போது வீட்டுக்குப் போவோம். வாருங்கள்.

**காட்சி முடிவு**

## காட்சி : 10

காலம் : 1915—16

இடம் : *அமெரிக்காவில்—நியூயார்க் நகரில் ஓரிடம்*

நிகழ்ச்சி : *லாலா லஜபதிராய், எம். என். ராய் சந்திப்பு*

பாத்திரங்கள் : *லாலா லஜபதிராய், (வயது சுமார் 60) எம். என். ராய்.*

*[லாலாஜி ஓரிடத்தில் அமர்ந்து எழுதிக் கொண்டே பாடுவது போலக் காட்டலாம். அதன் பின் நிம்மதி இல்லாமல் எழுந்து உலாவிய வண்ணம் தமது உள்ளக் குமுறலைப் பின் வரும் பாட்டால் வெளியிடுகிறார். 'நீலவானத் திரையிலே அன்னை நாட்டின் அழகு வதனத்தைக் காணுகிறார். அல்லது பாடல்களின் வரிகளில் உள்ள பாத்திரங்களைக் காட்டலாம்]*

"எத்தனை ஜென்மங்கள் இருட்சிறையில் இட்டாலும் என்
தத்துபுனல் பாஞ்சாலந்தனில் வைத்தால் வாடுகிலேன்
தொண்டுபட்டு வாடுமென்றன் தூய திருநாட்டில்
கொண்டுவிட்டு என்னையுடன் கொன்றாலும்
இன்புறுவேன்"

*லாலா ;* அன்னையே! உன்னை என்று காண்பேன். பாவம் என்ன மக்கள் பாடுபடுகிறார்களோ! நான் எனக்காக வருந்தவில்லையம்மா. அடிமைப் பிணியிலே அவதிப் படும் உன்னரும் மக்கள் வாழ்வின் உதயத்தைக் காணும் நாள் என்று வரும் தாயே! இந்த உலகில் நீதியும் தர்மமும் நிரந்தரமாகவே அஸ்தமனமாகி விட்டதா அம்மா.

[இருபது வயது மதிக்கத்தக்க இளைஞர் மெக்சிகன் கௌபாய் உடையில் வந்து]

ராய் : பாவம் பரிதாபம். அமெரிக்க மண்ணிலே ஒரு அனாதை இந்தியர். சுதந்திர பூமியிலே ஒரு அடிமையின் அவலக் குரல்! விதியின் கோரக் கைகளில் அகப்பட்டுத் தவிக்கிறது. ஒரு வயதான உயிர் (லஜபதியை அணுகி) பாரதவீரர்கள் போற்றும் பாஞ்சால சிங்கமே! பஞ்சைக் குழந்தைபோல் தவிப்பது ஏனய்யா? ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் இந்தியச் சிங்கமே ஏனிந்தக் கண்ணீர்?

லாலா : யாரப்பா நீ?

ராய் : நான்...நான் ஒரு மெக்ஸிகோ நாட்டு வாலிபன். அமெரிக்க இடது சாரிகளில் ஒருவன். தங்களைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது; தங்கள் தண்டனைக்குக் காரணம் என்ன? (லஜபதியின் சந்தேகப் பார்வையைக் கண்டு) அஞ்ச வேண்டாம். நான் ஆங்கில ஒற்றன் அல்ல. என்னை நீர் நம்பலாம்.

லாலா : உம், என் மக்களின் துயர் தீர்க்கப்பாடு பட்டேன்.

ராய் : ...துயரக் கடலில் நீரே விழுந்து விட்டீர். வேண்டுமய்யா உமக்கு, நன்றாக வேண்டும். தேவப்பிறவியான வெள்ளையனை எதிர்த்தது குற்றந்தான். நீர் இந்தத் தண்டனையை அனுபவிப்பது நியாயந்தான்.

லாலா : தம்பி நீ, என்ன சொல்கிறாய்?

ராய் : அடிமையான பாரத மக்களுக்கு சுதந்திரம் ஒரு கேடா என்று கேட்கிறேன்?

லாலா : வேண்டாம். என் மக்களை இழிவாகப் பேசாதே!

ராய் : ஆமாம். மக்கள்! உணர்ச்சியற்ற மண்ணாங் கட்டிகள். துணிச்சலற்ற துயரப் பதுமைகள். கண்ணற்ற களிமண் பொம்மைகள்! நடுங்கி வணங்கும் நாணல் புதர்கள். பகுத்தறிவையிழந்து பழமையும் மறந்து, புதுமையும் துறந்து, நிலை கெட்ட விலங்குகளுக்குத்தான் பாரத மக்கள் என்று பெயர்.

லாலா : தம்பி (அதட்டி)

ராய் : ஏன் உண்மை கசப்பாக இருக்கிறதா?

லாலா : அறியாத சிறு பிள்ளை நீ. தெரியாத விஷயத்தைப்பற்றிப் பேசாதே.

ராய் : எல்லாம் தெரிந்துதான் பேசுகிறேன், இந்தியரின் சோம்பலை உணர்ந்துதான் பேசுகிறேன்.

லாலா : என்ன துணிச்சல்? என்னெதிரில் நின்று என் நாட்டு மக்களை இழிவாகப் பேசுகிருய்?

ராய் : ஏனய்யா சும்மா மக்கள் மக்கள் என்று கதறு கிறீர்? நன்றியற்ற மக்களுக்காக நாடு கடத்தப்பட்டு இந்த வயதில் ஏனிப்படி நடுத்தெருவில் நிற்கிறீர்? அவர்களுக்குச் சிறிதேனும் நன்றியுணர்ச்சி இருந் தால், இப்படி இந்த நிலையில் தங்கள் தலைவனை விட்டு வைத்திருப்பார்களா?

லாலா : என் மக்கள் நன்றி கெட்டவர்களல்ல. என் பாரத மக்கள் நாகரிகத்தின் சின்னங்கள்; நல்லவர் கள்; படிப்பு இல்லாவிட்டாலும் பண்புள்ள மக்கள்.

ராய் : இல்லே; பாரத மக்கள் பலமற்ற ஒரு ஜனத்தொகை; வீரமற்ற ஒரு சமுதாயம்; பேசிக்கொண்டே இருக்கும் ஒரு பொதுக்கூட்டம்; ஒன்றுபடத் தெரியாத ஒரு உதிரிக் கும்பல்; பாறை மேல் உதறிவிட்ட நெல்லிக் காய் மூட்டைகள்; சிதறிய அறிவினர்; செயல் மறந்தவர்; கடவுள் கடவுள் என்று கதறிக் காலங் கடத்துபவர்.

லாலா : பேசாதே!

ராய் : உரக்கப் பேசுவேன். இது பேச்சு சுதந்திரமுள்ள அமெரிக்க நாடு. வாய்ப்பூட்டு விற்கும் அடிமை இந்தியா அல்ல. உங்களுக்கு உணர்ச்சி வரும் வரை பேசுவேன்; மனிதன் கொடுமை செய்தால், மாட்டு மந்தைகூட எதிர்த்துப் பாயும். கிழட்டு ஆடுகூட சாகும்வரை தலை நிமிர்ந்து நிற்கும்; எருமைகூட எதிரிகளை எதிர்க்க வரும்; ஆனால் உங்கள் அருமை பாரத மக்கள்...

லாலா : வேண்டாம். இது தவருன கருத்து.

ராய் : வெள்ளைக்கார ஆசிரியர்கள் உங்களைப்பற்றி இப்படித்தானே வரலாற்றில் எழுதி வைத்துள்ளார் கள்.

லாலா : அப்படி எழுதியவர்கள் அறிவற்றவர்கள். சந்தன வனத்தில்கூட சாக்கடை ஆராய்ச்சி செய்யும் பேதைகள்; பொய் எழுதிப் பிழைப்பவர்கள்; அதைப் படித்துவிட்டு இப்படிப் பேசாதே! நீ ஒரு முறை பாரதநாட்டை நேரில் பார்த்தால் இப்படிப் பேச மாட்டாய்.

ராய் : ஒரு முறை என்னய்யா, பாரத நாட்டை பல முறை பார்த்திருக்கிறேன்.

லாலா : என்ன? பார்த்திருக்கிருயா?

ராய் : பார்த்தது மட்டுமல்லய்யா; அந்த அடிமை மண்ணிலேயே பிறந்த கோடானு கோடி அபாக்கிய சாலிகளில் அடியேனும் ஒருவன்.

லாலா : என்ன! என் புண்ணிய பாரத மண்ணில் பிறந்த புதல்வனு நீ?

ராய் : ஆம்; பாரதப் புதல்வன்தான் நான். அந்த அடிமை மண்ணில் வாழ்வதைவிட, வெளியே வந்து இந்திய மண்ணில் சுதந்திர விதையைத் தூவ வேண்டுமென்ற விரதத்துடன் வெளியேறினேன். தங்களைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நாடு கடத்தியது. என்னை நானே நாடு கடத்திக் கொண் டேன்.

லாலா : நீ எந்த ஊர் தம்பி!

ராய் : ஒரு காலத்தில் வீரத்தின் விளைநிலம் என்று நீங்களும் மற்றவர்களும் போற்றுவீர்களே—அந்த தங்கமய வங்கத்தில்தான் பிறந்தேன்.

லாலா : பெயர்?

ராய் : நான்தான் எம். என். ராய்.

லாலா : ஆ. நீயா! நீதானு அந்த வீரவாலிபன்? வாழ்க வீரனே! வாழ்க! (அணைத்து) சுகமாக இருக்கிருயா

தம்பி? உன்னைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். நீ எழுதிய பொருளாதார நுட்ப நூல்களை, படித்துப் பரவசமடைந்திருக்கிறேன். உன் போன்ற படித்த வாலிபர்கள் நமது புனித நாட்டை இப்படிப் பேசலாமா? பெற்ற தாயை மைந்தர்களே மறந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?

ராய்: மற்றவர்கள் பேசினால் மரண அடி கொடுப்பேன். வேற்றான் நம்மை அவமதித்தால் வெறிகொண்டு தாக்குவேன். நமது பலவீனத்தைப் பற்றி நாமே பேசிக்கொள்வதில் தவறில்லை. மேலும் வாடி நிற்கும் உங்களைப் பார்த்து—கொஞ்சம் பேசி வீர சிங்கமான உங்கள் திருமுகத்தைக் காண எண்ணினேன். விளையாட்டாக ஒருமுறை பேசிப் பார்த்தேன்.

லா: பெரிய சோதனையப்பா, இது பெரிய சோதனை! அது சரி; நீ எப்போது வந்தாய்? எப்படி வந்தாய்? என்ன செய்கிறாய்?

ராய்: இந்தியாவின் வயதான தலைவர்களான உங்கள் மிதவாதப் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. தீவிரமாக ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்க எண்ணினோம். அதற்கு ஆயுத பலம் வேண்டுமல்லவா? அதைத் தேடி அயலான் உதவி நாடிப் புறப்பட்டேன். பாதிரி வேடத்தில் பாண்டிச்சேரியில் கப்பலேறினேன். பல மாதங்கள் பசிபிக் மகா சமுத்திரத்திலே பயணம் செய்து, பயங்கரமான துப்பறியும் போலீஸ்காரர்களுக்கும் அகப்படாமல் இங்கு வந்து சேர்ந்தேன். இது என் வாழ்வின் சிறு கதை. விரைவில் இது பெருங்கதையாக மாறும்.

லாலா : நீ எதிர்பார்த்த ஆயுத உதவி கிடைத்ததா?

ராய் : கிடைக்கலாம். இந்த யுத்தத்தில் அமெரிக்கா ஈடு படாமலிருந்தால் இடதுசாரி நண்பர்களின் உதவி யினால் இங்கு ஆயுதம் கிடைக்கும்.

லாலா : நீ எதிர்பார்ப்பது நடக்காது தம்பி. கட்டாயம் அமெக்கா இந்த யுத்தத்தில் ஈடுபட்டே தீரும். மேலும் நம் சுதேச பலத்தைக் கொண்டு வாங்கும் சுதந்திரம்தான் உண்மையான விடுதலையாக இருக்க முடியும். அயலார் உதவி பெற்றால் அவர்கள் போடும் நிபந்தனைக்கு நாம் கட்டுப்பட நேரிடும். மீண்டும் அடிமையாக நேரிடும். ஆகவேதான் ஆயுதமற்ற போராட்டத்தை நடத்த நாங்கள் முடிவு செய்தோம்.

ராய் : ஆமாம்! பாயும் புலிக்கு பகவத் கீதை படித்துக் காட்டுகிறீர்கள். பசித்த பிரிட்டிஷ் வேங்கைபாய்ந்து பழிவாங்குகிறது. நீங்கள் பாகவதம் படித்துக் காட்டுகிறீர்கள். உங்கள்மேல் குற்றமில்லை; வயதின் குற்றம். உங்களுக்கு வாளேந்தக் கைநடுங்கும் வாக்குரைக்க நா நடுங்கும்; வக் கணைகள் பல பேசும். வாதாடும் வக்கீல்கள்—தாத் தாக்கள் பெருங்கூட்டம்—தாராளத் தீர்மானம்— தர்மத்தின் உபதேசம்! தவறாமல் செய்திடுவீர்! இடையிடையே போராட்டம். அதன்முடிவு தடியடி—கொடுஞ் சிறை—துப்பாக்கிப் பிரயோகம்— நாடுகடத்தல்—இதுதானே உங்கள் அரசியல்? கடைசியாக நீரே இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டீர். பாவம்! பாஞ்சால சிங்கமே! உம்...உங்களுக்காவது

இங்கு ஒரு சில நண்பர்கள் இருக்கிறார்கள்! எனக்கு யாருமில்லை! எதுவுமில்லை. அமெரிக்க போலீஸ் என்னை எங்கு பார்த்தாலும் கைது செய்யலாம். வீடு வாசல், உற்றார் உறவினர்களைத் துறந்து, நாட்டை விட்டு ஓடிவந்த நான் என்ன பாடுபடுகிறேன் என்பது உங்களுக்கு ஓரளவு தெரியும் என்று எண்ணுகிறேன். உம்...எது வரினும் சரி, விடுதலை! இல்லையேல் வீரமரணம்!

லாலா : மரணம் அல்ல தம்பி! வீர சொர்க்கம் என்று சொல். உன்னைப் போன்ற வீரர்கள் ஒருநாளும் அழிவதில்லை. சுதந்திரம் என்ற மகாசக்திக்கு தியாகம் என்ற வேள்வி தேவைப்படுகிறது. அந்த வீர வேள்விக்கு முதல் பலியாகும் துணிச்சலைப் பெற்றுவிட்ட உன்னைப் போன்ற வீரர்களைப் பார்ப்பதே பெரும் பாக்கியமாகும். •துயரம் நிறைந்த என் வாழ்வில் உன் சந்திப்பு ஒரு மறக்கமுடியாத சம்பவமாகும் தம்பி. உன் முடிவு எதுவாயினும் சரி. மாசற்ற உன் தேசபக்திக்கு என் சிரந்தாழ்ந்த வணக்கங்கள்.

ராய் : அய்யனே! தாங்கள் என்னை வணங்க வேண்டாம். என்றுமே என் வணக்கத்திற்குரிய தாங்கள் என் முயற்சி வெற்றிபெற எனக்கு ஆசி கூறுங்கள்.

*[தலைகுனிந்து வணங்குகிறார். 'கலங்காதே—மகனே கலங்காதே' என்று அணைத்துக் கொள்கிறார்.]*

லாலா : (கண்ணீருடன் தேம்புகிறார்) தம்பி! இனி என்னுயிர் நிம்மதியாகப் பிரியும். இந்த அமெரிக்க மண்ணிலேயே நான் இறந்தாலும் இனி கவலை

யில்லை. எந்நாட்டு இளஞ்சிங்கங்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர். பதினாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும்—அதோ பாரத புண்ணிய பூமியின் புனிதச் சிகரங்களிலே—பட்டொளி வீசிப் பறக்கும் நமது விடுதலைக் கொடியை இங்கிருந்தே—இன்றே, இப்போதே காணுகிறேன் தம்பி. அதோ பார்!

(பின்னணி பாட்டு)

வந்தே மாதரம் வந்தே மாதரம்
ஜெய ஜெய பாரத ஜெய ஜெய பாரத
ஜெய ஜெய பாரத ஜெய ஜெய ஜெய ஜெய
வந்தே மாதரம்! ஜெய வந்தே மாதரம்

காட்சி முடிவு

## காட்சி : 11

காலம் : 1919

இடம் : பஞ்சாப் மாநிலம்—ஜாலியன் வாலாபாக் தோட்டம்

நிகழ்ச்சி : பொதுக் கூட்டத்தில் பிரார்த்தனை செய்கிறார்கள் மக்கள். சுட்டுக் கொல்லுகிறது வெள்ளையர் ஆட்சி. General Dyerன் இராணுவம்

பாத்திரங்கள் : ஜெனரல்டயர், இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்கள், தலைவர், மக்கள்.

[எல்லா மக்களும் மண்டியிட்டு அமர்ந்து கீழ்க்காணும் கீதத்தை ஒரே குரலில் அமைதியாக, இனிமையாக ஆயிரம் தம்புராக்களின் சுத்தமான சுருதியிசைப் பதைப் போல் லயித்துப் பாடுகிறார்கள்.]

குரல்கள் : (பாட்டு)

வந்தே மாதரம் ஜெய வந்தே மாதரம்
வந்தே மாதரம் வந்தே மாதரம்!
ஒன்றாய் நின்றினி வென்றாயினும் உயிர்
சென்றாயினும் வலி குன்றாது ஓதுவம் (வ)

[தெய்வீக அமைதியின் மத்தியில் மக்கள் பிரார்த்தனை செய்யும் அந்தத் தூய்மையான தெய்வநிலையைக் கெடுத்து, குறுக்கிடுகின்றன பயங்கரக் காலடி ஓசைகள். மக்கள் அதே வந்தேமாதரம் பாடலை தொடர்ந்து பாடுகின்றனர். பட்டாளம் சூழ்கிறது!

தலைவர் : அமைதியாயிருங்கள். ஆண்டவனைப் பிரார்த்தனை செய்தபின் நாம் அமைதியாகக் கலைய

வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு நம் உறுதியை சிதறவிடக்கூடாது. அமைதியோடு கடமைகளை ஆற்றவேண்டும். பாரதத் தாயே! உன்னையன்றி வேறு துணை எமக்கில்லை. சிறையிடப்பட்டுள்ள எமது தலைவர்களைக் காப்பாற்றி மீண்டும் எமக்கு அருளவேண்டும். இதுவே நாங்கள் செய்யும் பிரார்த்தனை.

சார்ஜண்ட் : ஏ, முட்டாள்களே! உயிர் வேணும்னு உடனே எழுந்து ஓடிடுங்க. ஜெனரல் டயர்துரை வந்து கொண்டிருக்கிறார்.

தலைவர் : பொறுங்கள். பிரார்த்தனை முடிந்ததும் போய் விடுவோம்.

சார்ஜண்ட் : எதுக்குப் பிரார்த்தனை? சாகறத்துக்கா? போங்க மேன். ஓடிப் பொளைச்சுக்கோ. கூட்டம் போடக்கூடாது. அது சட்ட விரோதம். பேசினு சுட்டுத் தள்ளிபுடுவோம. இது இராணுவச்சட்டம்.

தலைவர் : பொறுங்கள்.

[ஜெனரல் டயர் வருகிறார்.]

டயர் : வாட் மேன்? வாட் இஸ் தி மேட்டர்? டோன்ட் டாக் டு திஸ் பிளாக் டாக்ஸ். Black dogs ஏய், லுக் ஹியர். ஐ ஆம் இன்சார்ஜ் ஆப் தி சிட்டி! கர்ப்யூ ஆர்டர்! யூ பிளடி சேப்ஸ் கெட் அவே, குயிக்.

தலைவர் : ஜெனரல் என்ன இது? நாங்கள் மனிதர்கள். இது புரட்சிக்கூட்டம் அல்ல, பிரார்த்தனைக்கூட்டம்.

டயர் : வாட் பிரேயர்? யூ மீன் காட்...காட். உங்களுக் கில்லை. அது எங்கப் பக்கம் மேன். உங்க கடவுள் சட்டத்தை மீறச் சொல்லுதா? சட்டத்தை மீறினு

எங்க கடவுள் துப்பாக்கியாலே சுடும். கர்ப்யூ ஆர்டர். கேர்ஃபுல்

தலைவர் : ஆண்டவனைப் பிரார்த்தனை செய்யக்கூட தடையுத்தரவா?

டயா : ஐ ஸே! அந்த ஆண்டவனே வந்தாக்கூட அதுதான். அடிமைக்கு சாமி இல்லே! கூலிக்கு கடவுள் இல்லே

தலைவர் : ஆண்டவன்மீது ஆணை. இந்த ஜனங்கள் குற்றமற்றவர்கள் நிரபராதிகள்.

டயர் : பேசாதே. எனக்குப்பேச்சுப் புடிக்காது. கவர்னர் மைகேல் ஓடயர் ஆர்டர். ஷூட் டு கில். தட்ஸ் ஆல். டு மினிட்டுதான். கையிலே கவர்னர் ஆர்டர் இருக்கு. காம்பவுண்டு சுத்தி மிலிடெரி இருக்கு. ஒரு நிமிஷத்திலே ஓடலே; அப்புறம் உங்க உயிர் உடம்பை விட்டு ஓடிடும். ஐ வில் ஓபன் பயர்.

தலைவர் : பொறுங்கள். பிரார்த்தனை முடிந்ததும் போய் விடுகிறோம்.

[வந்தே மாதரம். வந்தே மாதரம் எனஎல்லோரும் கூற ஜெனரல், பயந்து ஒரு நிமிடம் ஆகிவிட்ட, தால் டயர் எண்ணுகிறான். தடைபோட்டிருக்கு படை வந்திருக்கு! சுடவந்திருக்கு.]

டயர் : பத்து எண்ணுவேன் ஓடல்லெ; பஸ்பம்பண்ணிடுவேன், உம், ஒன், டு, த்ரி, போர், ஃபை, சிக்ஸ், செவன், எய்ட், நயன், டென், ஷூட்.

[சுற்றியிருந்த சுவர்களின் மீதிருந்த சிப்பாய்கள் சுட்டுப் பொசுக்குகிறார்கள். மணம் வீசும் மலர்த்தோட்டம் பிணம் நாறும் மரணத் தோட்டமாகிறது. ஒரு நிமிஷத்திற்கு முன்

பிரார்த்தனைக் கூடமாக இருந்த இடம், பிணக் காடாக மாறுகிறது. பத்தே நிமிஷத்தில் நானூறு உயிர்கள் போகின்றன. சுமார் இரண்டாயிரம் பேருக்கு கால் கைகள், தலைகளில் குண்டுக்காயம் ஏற்படுகிறது. ராணுவ ஜெனரல் சிரிக்கிறான். பின்னணியில் வெடியைவிடப் பெரியதாகச் சிரிக்கிறான்—இரத்தக்காட்டேரியான ஜெனரல் டயர்!

டயர் : ஆ...கா...கா.... சுட்டேன் இந்தியக் கருப்பு நாய்களை; வெடி மருந்து இருந்தவரை சுட்டுப் பொசுக்கினேன். இருந்திருந்தால் இன்னும் சுட்டிருப்பேன்.

[இந்தக் கோரக் காட்சியைத் தொடர்ந்து மற்றொரு மோசமான நிழற்காட்சியில் மனிதர்கள் நடுத் தெருவில் நான்கு கால் மிருகங்கள் போல் ஊர்ந்து செல்லும்படிச் செய்யப்படுகிறார்கள்]

டயர் (நிழலில்) : இந்திய நாய்கள்: நாலு கால்லேதான் நடக்கணும். தலை தூக்கினீங்க: சுட்டுபுடுவேன்!

[ஒருவன் எழுந்திருக்கிறான். உடனே சுடுகிறான்]

பின்னணி : 1919-ல் பஞ்சாப் மாநிலத்தில்-குஜரன்வாலா பாக்கில் நடந்த அவலச் சம்பவம் இது. நாயினும் கேவலமாக நம் மக்களை நடத்தினது அந்நியனின் ஆதிக்க வெறி! அடக்குமுறை. இந்தப் பாதகன் டயர் செய்த இந்தப் படுகொலைக்கு, இந்திய அரசாங்கம் வைரம் பதித்த வாள் ஒன்றைப் பரிசாகத் தருகிறது. அதுவும் பொது மக்கள் தந்ததாகப் பொய் கூறிப் பரிசளிக்கிறது!]

காட்சி முடிவு

## காட்சி : 12

**காலம் :** 1928.

**தேதி :** லாகூர் சாலை.

**நிகழ்ச்சி :** போலீஸ் ஆலோசனை.

**பாத்திரங்கள் :** ஆங்கில போலீஸ் அதிகாரி டிப்டி சூப்ரிண் டண்ட் சாண்டர்ஸும் அவனது நண்பர்களும்.

ஸாண்டர்ஸ் : எச்சரிக்கை. 1919-ல் ஜெனரல் டயர் இருந்தார். இது 1928. இப்போது ஒரு டயர் உருவத்தில் இந்த ஸாண்டர்ஸ் இருப்பதாகச் சொல். எல்லாம் ஒழுங்காக நடக்கட்டும்.

ஒருவன் : துரை, தடையை மீறப் போறுங்களாம்!

ஸாண்டர்ஸ் : தடையை மீறும் அந்த இரும்பு மனிதன் யார்?

ஒருவன் : பாஞ்சால சிங்கம்,

ஸாண்டர்ஸ் : சிங்கமாவது சிங்கம்: சுத்த அசிங்கம். கிழட்டுப் பூனை; பைத்தியக்காரன், இந்த லஜபதி ராயை இந்தியாவுக்குள் வரவிட்டதே தவறு. போலீசுக்கு இந்த ஆள் ஒரு பெரிய தலைவலி.

மற்றவன் : ஆமாங்க துரை. லாலாஜி என்று சொன்னு கடவுள் மாதிரி கும்பிடுறுங்க இந்த ஜனங்க.

ஸாண்டர்ஸ் : ஜனங்கள்! சுண்டைக்காய்கள்! சாணிப் புழுக்கள், மிதித்திடுவோம் நசுக்குவோம் ஜாக்கிரதை. எல்லாம் ஒழுங்காக நடக்கட்டும். பயங்கர இயக்கம் வேறு பதுங்கி வேலை செய்கிறது. உம், அந்தச் சின்னப்பயல்கள், அவர்கள் தலைவன் யார்?

மற்றவன் : பகத்சிங்!

ஸாண்டர்ஸ் : ஆம்! பகத்சிங். மரணத்தோடு விளையாடு கிறான்! ஒரு நாளைக்கு இந்தத் துப்பாக்கிக்கு இரை யாகப் போகிறான்.

மற்றவன் : உண்மையிலேயே அந்தப் பயல் மகா வீரனுங்க. அடேயப்பா! பகத்சிங்! என்ன வீரம்?

ஸாண்டர்ஸ் : என்னடா வீரம்? பார்த்து விடுகிறேன், அவன் வீரத்தை!

காட்சி முடிவு

## காட்சி : 13

காலம் : மாலை.

இடம் : பஞ்சாப் மாநிலத்தில் ஒரு பாழடைந்த இருட்டுக் குகை.

நிகழ்ச்சி : தேச வீரர்கள் புரட்சிக்குத் திட்டமிடுதல்.

பாத்திரங்கள் : பகத்சிங், சுகதேவ், ராஜகுரு, சந்திர சேகர ஆசாத் மற்றவர்கள்.

பகத்சிங் : பார்த்து விடுவோம். இந்த அநாகரீக அடக்கு முறையின் ஆணவத்தைப் பார்த்துவிடுவோம். வீர சுதந்திரத்தைப் பெற விரும்பி வந்திருக்கும் வெற்றியின் தோழர்களே! வீட்டைத் துறந்து நாட்டைக் காக்க வந்திருக்கும் நல் இளஞ்சிங்கங்களே! பயிர்கள் தோன்றி மறைவது கண்டோம். வீர மக்களாய்ப் பிறந்தோம்; என்றோ ஒருநாள் மடிவது திண்ணம். பசிக்கு உணவு வேண்டுமானால் அடுப்பு நன்றாக எரிய வேண்டும். அதற்கேற்ற எரிபொருளாக நாம் தயாராக இருக்கவேண்டும். இன்பமான விடுதலை வேண்டுமென்றால், துன்பமான தியாகத்தை செய்தே ஆகவேண்டும். பிற்போக்குத்தனமும் பெரும் பேச்சு வித்தையும் பாரத நாட்டை மீட்டுவிட முடியாது. எதிரிக்குப் புரிந்த பாஷையில் பேசினால்தான் அவனுக்குப்புரியும். வயதான நம் தலைவர்களை வாய்ச்சாதுரியத்தால் ஏமாற்றிவிடுகிறான் வெள்ளையன். இவர்களும் ஏமாந்தபின் ஆண்டவனே என்று அழுகிறார்கள். இப்படிப் பல தலைமுறைகளைப்

பாழ்படுத்தி விட்டார்கள். ஒரு முடிவற்ற குழப்ப மான, அர்த்தமற்ற, செயலாக இருக்கிறது நம் சுதந் திரப் போராட்டத்தின் நிலை. விடுதலை வேண்டு மானல் வழிகளைப் பற்றி எண்ணக் கூடாது. எந்த வழியிலாவது சென்று, விரைவில் நம் இலட்சியத்தை அடைய வேண்டும். இந்த முடிவுக்கு வந்தால்தான் சுதந்திரம் வரும். இல்லையேல் நாம் மீளா அடிமைகளாக இப்படியே அழியவேண்டியது தான். புரட்சி வாழ்க ! வந்தேமாதரம் :

சுகதேவ் : (வந்து) பகத்சிங்! முடிவு செய்துவிட்டது அரசாங்கம் சைமன் கமிஷனை எதிர்ப்பவர்களைப் பழிவாங்கத் திட்டமிட்டு விட்டது.

பகத்சிங் : ஆம்! இந்த சாத்வீக புத்தர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

சுகதேவ் : தடையை மீறப் போகிறார்களாம்!

பகத்சிங் : தடியை வைத்துக்கொண்டு சும்மாவா இருப் பான் எதிரி.

சுகதேவ் : பல கப்பல்களில் புதிய புதிய துப்பாக்கிகளை இறக்குமதி செய்து வைத்திருக்கிறது அரசாங்கம்.

பகத்சிங் : கொள்ளையடிக்கும் வெள்ளையன் கொலை செய்வதிலும் கெட்டிக்காரனாகி விட்டான் எதற்கும் ஒரு சட்டத்தைச் செய்துகொள்வான். சட்டப் படியே எல்லாம் நடந்தோம், போட்ட திட்டப்படியே நடந்தோம் என்று உலகத்தை ஏமாற்றுவதில் கெட்டிக்காரன் அவன்.

சுகதேவ் : வெகு சீக்கிரம் மற்ெறாரு பஞ்சாப் படுகொலை தான் நடந்தே தீரும்.

பகத்சிங் : பஞ்சாப் படுகொலை! மற்றொரு பஞ்சாப் படு கொலை. நடக்காது; நடக்காது...சுகதேவ்! நடக்க விடக் கூடாது! அப்படி நடந்தால்?

சுகதேவ் : நடந்தால் என்ன செய்துவிட முடியும்? 1919-ல் அன்று நடந்ததே! ஆயிரமாயிரம் மக்களைச் சுட்டெரித்த போது சிட்டுக் குருவிகள்போல் சுருண்டு விழுந்தார்களே! அப்போது என்ன செய்து விட்டோம்? மக்களை மிருகங்கள் ஆக்கினான், பெண் களை மானபங்கப்படுத்தினான், அன்று என்ன செய்து விட்டது இந்த நாடு?

பகத்சிங் : அன்று நடந்திருக்கலாம்! அப்போது இந்த பகத்சிங் இல்லை. சுகதேவ் இல்லை; ராஜகுரு இல்லை நமது நவஜவான் இயக்கமும் இல்லை, இந்திய சோஷலிஸ்ட் புரட்சி ஸ்தாபனம் இல்லை. அன்று நாம் பச்சிளம் பாலகர்கள்! இன்று நாம் அரும்பு மீசை யுள்ள ஆண்பிள்ளைகள். பழி வாங்கத் துடிக் கும் பயங்கர மனிதர்கள். விடுதலைப் போரின் வேங் கைப் படைகள்! அன்று நாமில்லை—சுட்டு விட்டான்! இன்று நாம் இருக்கிறோம். இராணுவ ஆட்சி அடங்கியிருக்கிறது. துப்பாக்கிக் குண்டுக்குப் பயந்து—போலீஸ் முடங்கிக் கிடக்கிறது.

சுகதேவ் : பகத்சிங். நம்மைப் பார்த்துத்தான் சில பெரிய மனிதர்கள் சொல்லுகிறார்கள் பயங்கர வாதிகள் என்று.

பகத்சிங் : யார் பயங்கரவாதிகள்? பயிரைக் காக்கும் வேலியில் முள் இருக்கத்தானே செய்யும். அதற்காக வேலியை இகழ்வதில்லை. நம்மைப் பயங்கரவாதிகள் என்று சொல்லும் அந்தப் பரிதாப மனிதர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. நமது இந்திய சோஷலிஸ்ட் ரிபப்ளிக் சங்கத்தின் பயங்கரப் படை இல்லாமல் இருந்தால், இதுவரை இந்திய உயிர்களைப் புழுப் பூச்சிகளைவிடக் கேவலமாக நசுக்கியிருக்கும் இந்த ஏகாதிபத்தியம். இந்த உண்மையைச் சரித்திரம் இவர்களுக்குச் சொல்லும். அதிருக்கட்டும் ராஜகுரு! தோட்டாக்கள் எவ்வளவு இருக்கும்? எத்தனை ரவுண்டுக்கு வரும்?

ராஜகுரு : அறுபது ரவுண்டுக்கு வரும்; ஐநூறு வெடி குண்டுகள் தயார்.

[விசில் சத்தம் கேட்கிறது. எல்லோரும் திகைத்து நிற்க, சந்திரசேகர ஆசாத் வருகிறார்,]

பகத்சிங் : வாழ்க எம் தலைவன்! புரட்சி வாழ்க! உடனே புறப்படுவோம்.

சுகதேவ் : கொஞ்சம் பொறுங்கள்! இரண்டு நாட்களாகக் குடலை காய்கிறது. கொஞ்சம் உணவு கொண்டு வருகிறேன். அதன் பின் போகலாம்.

பகத்சிங் : நீ நினைவுபடுத்தியவுடன்தான், பசியின் வேதனை ஞாபகத்திற்கு வருகிறது. எப்படி? இப்படியே போகப் போகிறாயா?

சுகதேவ் : இல்லை; மாறுவேடத்தில்.

பகத்சிங் : அதைச் செய்.

**காட்சி முடிவு**

## காட்சி : 14

காலம் : பின் மாலை

இடம் : காட்டு வழியில் ஓரிடம்.

நிகழ்ச்சி : விடுதலை வீரர்களுக்கு வீராங்கனை வசந்தி மாறு வேடத்தில் உணவு கொடுத்து உதவுதல்.

பாத்திரங்கள் : சுகதேவ், வசந்தி.

[பதினெட்டு வயதுள்ள வசந்தி என்ற புரட்சிப் பெண் உடை உடுத்தி, கூடை நிறைய ஏதோ உணவுப் பொருளை எடுத்துக்கொண்டு அங்கே வந்து நின்று பாடுகிருள். அவ்வழியாக மாறுவேடத்துடன் வந்த சுகதேவ் தன் சுயக்குரலை மாற்றிப் பேசுகிருன்]

சுகதேவ் ; (மாறுவேடத்தில்) யார் நீ? வயசுப் பொண்ணு, வாளை மீன் கண்ணு; வரக்கூடாத இடம். வசமான நேரம்.

வசந்தி : ஏய்! யாரைப் பார்த்து பொண்ணுங்கறே?

சுகதேவ் : பின்னே என்னுன்னு கூப்பிடறது? வாய் நிறையச் சிரிப்பு. வாலிபச் செழிப்பு. வரவேற்கிற பார்வை. வசந்த காலம். பாரமுள்ள கூடை. பாட்டுப் பாடற பார்வை. யாரை எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறே?

வசந்தி : வீரபுரிக்கு வழி தெரியலே. யாராவது வழி தெரிஞ்சவங்க வந்தா, கேக்கலாமுன்னு நின்னேன். நீங்க வந்துட்டிங்க. வழி தெரிஞ்சா சொல்லுங்க.

சுகதேவ் : என்ன? உன் விழிக்கா வழி தெரியலே. நீ முழிக்கிற முழியைப் பார்த்தா புது உலகத்துக்கே வழிகாட்டுவே போல இருக்கு.

வசந்தி : ஓய். என்னய்யா இது? வீரபுரிக்கு வழி தெரியுமான்னு கேட்டா, ஏதோ பிரசங்கம் பண்றே.

சுகதேவ் : வீரபுரிக்கு வழியா? தெரியலையே!

வசந்தி : என்னய்யா ஆம்பிளை நீர். வீரபுரிக்கு வழி தெரியாத சுத்த கோழை மனுஷனு இருக்கே!

சுகதேவ் : அதுவா ரொம்ப தூரம் இருக்கும். இருட்டிப் போச்சே. நல்லா விசாரிச்சுகிட்டு நாளைக்குப் போகலாமே.

வசந்தி : அதெல்லாம் சோம்பேறிங்க வேலை. நாங்கள்ளெல்லாம் இன்னிக்குச் செய்ய வேணடியதை இன்னிக்கேதான் செய்வோம்.

[அவள் போகிருள். அவன் அவளைப் பின்தொடர்கிருன். அவள் நின்று முறைத்துப் பார்க்கிருள்]

சுகதேவ் : இதோ பார். நீ என்னை மீறி இனிப் போக முடியாது.

வசந்தி : (மறுபடியும் முறைத்துப் பார்த்து) அடடே- அது யாரு?

[சுகதேவ் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்த மறுகணமே வசந்தி தான் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை எடுத்து]

டேய். ஹேண்ட்ஸ் அப்.

சுகதேவ் : அடேடே. வசந்தி! (தான் வைத்திருந்த பொய்த் தாடியை எடுத்து) வசந்தி. என்னைத் தெரியலே? நான்தான் சுகதேவ்.

வசந்தி : யார்! நீங்களா? அடடேடே! கொஞ்சம் கூட அடையாளம் தெரியலையே குரல் கூடமாறிடிச்சு!

சுகதேவ் : பேஷ்! உன்னாலேயே என் வேஷத்தைக் கண்டுபிடிக்க முடியல்லேன்னு க ட் ட ா ய ம் அந்த போலீஸாலே கண்டுபிடிக்கவே முடியாது

வசந்தி : ஆமாம். எத்தனை தடவை கூச்சல் போடுறது காது கேக்கல்லே.

சுகதேவ் : பலநாளா பட்டினி. காது அடைச்சுப் போச்சு அதுக்காகத்தான் உன்னை நிறைய ஆ க ா ர ம் கொண்டுவரச் சொன்னேன்.

வசந்தி : சரி சரி. சாப்பிடுங்க.

சுகதேவ் : நான் மட்டும சாப்பிட்டா போதுமா? பாவம் பகத்சிங்! நண்பர்கள்! பலநாள் பட்டினி!

வசந்தி : சரி, எடுத்துக்கிட்டு போங்க! நாளையிலே இருந்து வீட்டுக்கே வந்து எடுத்துட்டு வாங்க. நான் இனி இங்கே வர்றது ரொம்ப ஆபத்து. போலீசுக்குத் தெரிஞ்சுப் போச்சு. அப்படி வந்தாக்கூட மாறு வேஷத்தில்தான் வருவேன்.

சுகதேவ் : சபாஷ். கவலைப்படாதே வசந்தி. நாங்க நாளைக்கே வங்காளத்துக்குப் புறப்படப் போறோம்,

ஒரு மாசமாகும். அதுவரை உனக்கு ரெஸ்ட், அதுக்குள்ளே இங்கே நமது ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசு இயக்கத்துக்குப் பெண்களின் ஆதரவை அதிகப்படுத்த வேண்டியது உன் பொறுப்பு.

வசந்தி : ஓ, இப்போதே ஒரு பெண்கள் படை தயார். தீபாவளி சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு துப்பாக்கி சுடும் பயிற்சியிலும் பத்து பேர் தேர்ந்துள்ளோம்.

சுகதேவ் : ஆமாம், வசந்தி! இந்தக் காட்டு வழியிலே உண்மையான ஒரு வில்லன் வந்துட்டா என்ன பண்ணுவே?

வசந்தி : உண்மையான வில்லன் வந்தா என்ன? இந்தத் துப்பாக்கியும் உண்மையானதுதான் என்பதை நிரூபிச்சுக் காட்டுவேன்.

சுகதேவ் : சபாஷ்! வசந்தி, எங்களுக்காக நீ எவ்வளவு கஷ்டப்படறே?

வசந்தி : உங்களுக்காக இல்லே! நான் பிறந்த இந்த நாட்டுக்காக நான செய்ய வேண்டிய கடமை. அன்னை பாரத தேவியின் சுதந்திரத்திற்காக எததனை சிரமமும் படத் தயார்.

சுகதேவ் : வாழ்க புதுவுலகம்! வாழ்க புரட்சி இயக்கம்! வந்தே மாதரம்.

**காட்சி முடிவு**

## காட்சி : 15

**காலம் :** *இரவு*

**இடம் :** *லாகூரில் பகத்சிங் வீடு.*

**நிகழ்ச்சி :** *பகத்சிங். தனது தாய் வித்யாவதி தேவியைச் சந்தித்தல்.*

**பாத்திரங்கள் :** *பகத்சிங், வித்யாதேவி, தந்தை கிஷண் சிங், சுகதேவ் முதலியோர்.*

*[சர்தார் கிஷண்சிங் துயரத்தோடு உலவுகிருர். அவரது மனைவி வித்யாவதி தேவி அவருக்குச் சமாதானம் சொல்லுகிருள்]*

*வித்யா :* என்னங்க சாப்பிடாமே, இப்படி யோசனை பண்ணிக் கிட்டே இருநதா எப்படிங்க?

*கிஷண் :* என்ன பண்ணச் சொல்றே? உன் மகன் என்னை சாப்பிடற நிலைமையிலே வைக்கலே. இப்படியே அவனை நினைச்சி நினைச்சி நெஞ்சுருகி மடிய வேண்டியதுதான்.

*வித்யா :* எல்லாத்துக்கும் நீங்கதான் காரணம். சின்ன வயசிலே வீரம் வீரம்னு பேசினீங்க! தேசம் தேசம்னு உபதேசம் பண்ணினீங்க. உங்க சகோதரரும் அப்படிப் பேசித்தான் நாடு கடத்தப்பட்டார். உங்க மகன் இப்படி அலையருன். உங்க தேசபக்தி அவனையும் ஆட்டி வைக்குது.

கிஷண் : தேசபக்தி வேண்டாம்னு யார் சொன்னு? துப்பாக்கியில்லே தூக்கிட்டு அலையறுன். மொதல்லே ஒரு தடவை அகப்பட்டுவிட்டான். நாற்பதாயிரம் ரூபாய் ஜாமீன் கொடுத்து மீட்டு வந்தேன். இப்போ அவன் போற போக்கைப் பார்த்தா-இனி ஜாமீன் எல்லாம் இல்லே; உயிரைத்தான் ஜாமீன் கேட்பாங்க. சே, இப்படி ஒரு வீரமகன் பிறக்கவும் வேண்டாம், நான் இப்படி வேதனைப்படவும் வேண்டாம். ஒவ்வொரு நிமிஷமும் இவனைப் பத்தி என் மனம் படறபாடு யாருக்குத் தெரியும்?

வித்யா : என்ன செய்யறது? தாய் தந்தையைவிட அவனுக்குத் தேசம் பெரிசாப் போயிட்டது. பார்ப்போம்; தெய்வந்தான் அவனுக்கு நல்வழி காட்டணும்.

கிஷண் : சரி, நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்.

வித்யா : இந்த அகாலத்திலே எங்கே போறீங்க? வேண்டாம். இருங்க. அவனு வருவான்.

கிஷண் : இல்லே. என் மனசு என்னமோ இன்னிக்கி ரொம்ப வேதனைப்படுது. போயிட்டு வந்துடறேன். (போகிறுர்).

வித்யா : தாயே! கண் கொடுத்தே. அந்தக் கண்ணுலே உலகத்தைப் பார்க்கணும்னு நெனைக்கிறேன். என் கண்ணைக் காப்பாற்று தாயே! உன் சேவைக்கு எத்தனையோ வீரப்புதல்வர்கள் பிறந்

திருக்கிருங்க. தயவு செய்து என் மகனை மட்டும் விடுதலை செய் தாயே!

[அப்போது மழைக் கோட்டும் தொப்பியும் அணிந்த வண்ணம் பகத்சிங் வருகிருன்]

பகத்சிங் : இந்த நாட்டின் ஒவ்வொரு தாயும் இப்படித் தானம்மா பிரார்த்தனை செய்கிருர்கள். நீங்கள் உங்கள் மகனை பாரதத்தாயின் பணிக்குக் கொடுக்க விரும்பவில்லை. இதேபோல்தான் எல்லோரும். இப்படி இந்த நாட்டின் அன்னையரெல்லாம் புத்திரபாசத் தால் துடித்தால் பாரத தேவியின் வேதனையை யாரம்மா தீர்ப்பது?

வித்யா : பகத்சிங்?

பகத்சிங் : ஏம்மா அழறீங்க. நான் வரும்போதெல்லாம் இப்படித் தான் வருத்தப்படுறீங்க.

வித்யா : ஆமாம், மகனைக் கண்டதும் ஆனந்தப்பட வேண்டிய தாய் அவதிப்படறேம்பா! அவ்வளவு பெரிய ஆபத்துக்கள் உன்னைத் துரத்துது மகனே!

பகத்சிங் : அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா. இப்படி யெல்லாம் உங்களைப் பயமுறுத்துவது துரோகி களின் வேலை. எனக்கு ஒருவித ஆபத்தும் இல்லை; இனிமேலும் வராது. ஏம்மா. உங்கள், மகன்மீது நம்பிக்கையே இல்லையா? இந்த அசட்டுப் போலீஸ் வலையில் மாட்டிக்கொள்ள நான் என்ன அவ்வளவு அறிவற்றவனு அம்மா! சரி ஆபத்தெல்லாம் இருக்கட்டும். பசிக்குதம்மா.

வித்யா : இதோ வர்ரேண்டா கண்ணே!

[ஓடிப் போய் ரொட்டி, பால், பழம் எல்லாம் கொண்டு வருகிருள். அவற்றை ஆவலோடு வாங்கி, பகத்சிங் ஆனந்தமாகச் சாப்பிடுகிருன். மேலும் கொண்டு வந்து வைக்கிருள். அதையும் சாப்பிடுகிருன்]

பகத்சிங் : இன்னும் ஏதாவது இருக்காம்மா? (தாய் கண்ணீர் சிந்துகிருள்) ஏம்மா?

வித்யா : ஆமாம்! சாப்பிட்டு எத்தனை நாளாச்சுப்பா?

பகத்சிங் : எத்தனை நாளா? கிடைச்சா சாப்பிடறது தான் அம்மா! சில நல்லவர்கள் பேசுகிருர்களே— ஆகா நம் மக்கள் பசியாலே துடிக்கிருர்கள்—அரை வயிற்றுக்கும் இல்லாமல் அழுகிருர்கள்-சிறு குடலைப் பெருங்குடல் தின்னுது-பசிக் கொடுமை, அடிமை, 'ஆ-ஊ' என்றெல்லாம் பேசிவிட்டால் போதாது தாயே! நமது மக்களை எரிக்கும் பசி நெருப்பு எவ்வளவு வேகமுள்ளது என்பதை அனு பவத்தில் தெரிந்து கொள்ளவேண்டும் தாயே! அடேயப்பா! பத்து நாளாச்சு படுத்துத் தூங்கி! அம்மா, நீங்க இதெல்லாம் கேட்டுப் பயந்துடாதீங்க. இது வைரம் பாஞ்ச கட்டை. இந்த உடம்பை ஒட்ட கம்மாதிரி பழக்கி வச்சிட்டேன். கிடைச்சதை விடுற தில்லே. பத்து நாளைக்குச் சேர்த்துச் சாப்பிடறது. இல்லே அதைப்பற்றியும் கவலைப்படறதில்லை!

வித்யா : பகத்சிங்! ஒரு வார்த்தை சொல்றேன், கேட் பியா?

பகத்சிங் : என்னம்மா சொல்லப் போறீங்க? பொது வேலையை விட்டுடு, உத்தியோகத்துக்குப் போ! உடம்பைப் பார்த்துக்கோ. கல்யாணம் செய்துக்கோ கைகட்டி நில்லு! இது தானே?

வித்யா : இல்லேப்பா! தேச மாதாவுக்கு நீ செய்ய வேண்டிய கடமைகளைத் தாராளமாகச் செய்யலாம்! ஆனால் அந்தக் கடமையை நீ நீண்டகாலம் நீடித்துச் செய்ய வேண்டாமா மகனே.

பகத்சிங் : நீண்ட காலமா? எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்த நாட்டுக்கு ஒரு விமோசனம் வர வேண்டும் அம்மா!

வித்யா : அது முடியாத காரியம் தம்பி! இவ்வளவு பேசும் பகத்சிங், ஒரே நாளில் உயர்ந்துவிடவில்லை மகனே! ஒரே வருஷத்தில் நீ இப்படி வளர்ந்திருக்க முடியுமா? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கவனமாக வளர்த்ததால்தான் என் குழந்தை பெரியவனாக வளர்ந்து விட்டான். வீரம் பேசுகிறான். உன்னை நான் வளர்க்க எவ்வளவு பாடுபட்டிருப்பேன்! அதே போலத்தான் தம்பி, இந்த நாட்டின் சுதந்திர இயக்கம் மெதுவாக வளர வேண்டும்! ஆயுதங்களின் துணையால் ஆவேசம் வளருமே தவிர, இலட்சியம் வளராது தம்பி.

பகத்சிங் : அம்மா தாயே! நீங்கள் பேசவில்லையம்மா' நீங்கள் பேசவில்லை. அன்பின் தெய்வம் பேசுகிறது. ஆயிரமாயிரம் வருஷங்களாக இந்த மண்ணில் ஊறி வளர்ந்து உறுதியாகப் பண்பட்ட பாரதத்தின் நாக

ரீகம் பேசுகிறது. தாய் இதயம் பேசுகிறது. புரட்சிக் குழந்தையைத் தாய்போல் பரிவோடு நிதானமாக வளர்த்தால் போதும் என்கிறீர்கள். ஒப்புக் கொள்ளுகிறேன் அம்மா! ஆனால் ஒரு சந்தேகம். உங்கள் குழந்தை பகத்சிங்குக்கு இரண்டு வயது. இராப் பகலாகக் கண் மூடாமல் பாதுகாத்து வந்தீர்கள்! பல நாட்களாகத் தூங்கவில்லை. ஒருநாள் குழந்தை அமைதியாகத் தூங்கியது. அன்னைக்கு, பாவம் கொஞ்சம் உறக்கம் வந்துவிட்டது. பத்து நிமிஷம் தூங்கிவிட்டீர்கள். அங்கே ஒரு நாகப் பாம்பு வந்து குழந்தையின் காலைச் சுற்றுகிறது. குழந்தை வீறிட்டு அலறுகிறது. தாய் பதறி எழுந்து பார்த்தீர்கள்! சீறுகிறது பாம்பு! அந்த நிலையில் என்னம்மா செய்வீர்கள்? (வித்யாவதி தேவி அழுகிறாள்) கையில் கிடைத்ததைக் கொண்டு பாம்பை அடித்து என்னைக் காப்பாற்றுவீர்கள்—இல்லையா அம்மா! ஒரு வேளை பாம்பு கடிக்க வந்தால் அதற்காகப் பயந்து என்னை விட்டு ஓடிப் போய் இருப்பீர்களா தாயே? அந்த நிலையில்தானம்மா இன்றைய சுதந்திர இயக்கம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. அடக்குமுறை என்ற பாம்பு சீறி வருகிறது! அதை அடித்து, புரட்சிக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும். அதற்குக் கூடுமானவரை பாதுகாப்போடுதான் செய்கிறோம். மீறிப்போனால் பார்த்துக் கொள்வோம்! அப்பா எங்கே அம்மா?

வித்யா : நீ நாட்டுக்காக அலைகிறாய். அவர் உனக்காக அலைகிறார். (ஓர் ஆள் ஓடிவந்து)

ஆள் : அம்மா! போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருக்கார்.

வித்யா : சரி! நீ போ! (அவன் போன பின்) பகத்சிங்! உள்ளே போ.

பகத்சிங் : சரி; நான் போயிட்டு வர்றேம்மா! நண்பன் வந்து விட்டான்.

வித்யா . என்ன? போலீஸ் கையிலே அகப்பட்டுக் கொள்ளப் போறியா? உன்மேல் வாரண்ட் இருப்பதாகச் சொன்னார்கள் தம்பி!

பகத்சிங் : இப்போ வந்திருப்பவன் என் நண்பனம்மா, நண்பன். எங்கள் நாடகத்தில் இன்று அவனுக்கு போலீஸ் வேஷம்.

வித்யா : போதுமடா போதும்! நீங்கள் நடிக்கும் இந்த நாடகம் போலீஸ்காரர்களுக்கும் தெரிந்துவிட்டால்...

பகத்சிங் : அவ்வளவுதான்! நாடகம் முடிவு! கடைசிக் காட்சி, ஆட்டம குளோஸ்! மங்களம் பாட வேண்டியதுதான்.

[சுகதேவ் இன்ஸ்பெக்டர் வேடத்தில் வந்து]

சுகதேவ் : அம்மா! இந்தப் பயலை அரெஸ்ட் செய்திருக்கிறேன்.

பகத்சிங் : அம்மா! இந்தப் பட்டினிப் போலீசுக்குக் கொஞ்சம் சாப்பாட்டு உபதேசம் செய்து—வெளியே போகச் சொல்லுங்கள் தாயே!

[சுகதேவ் பகத்சிங் இருவரும் சிரிக்கிறார்கள். தந்தை கிஷண்சிங் வருகிறார். மகனைப் பார்த்து,]

கிஷண் : பகத்சிங்.

[கட்டிப் பிடித்துக் கொள்கிறார்! இன்ஸ்பெக்டரைப் பார்த்து]

சார், என்ன இது? என் மகனை ஏன் இப்படி இம்சை செய்கிறீர்கள்! அவனை வாழவிடாமல் வேட்டையாடு கிறீர்கள்!

பகத்சிங் : என்னடா மடையா? அப்பா கேக்கிறார்! ஏண்டா இம்சை செய்யறே? சொல்லேண்டா?

கிஷண் : பகத்சிங்! ஷட் அப், என்ன இருந்தாலும் ஒரு போலீஸ் ஆபீசர்.

பகத்சிங் : உம்! இது சுத்த சோத்துப்பட்டாளம் அப்பா!

சுகதேவ் : வணக்கம் அப்பா (சுகதேவ் சுயமுகத்தை காட்டுகிறான்)

கிஷண் : அடே! நம் சுகதேவா!

பகத்சிங் : ஆமாப்பா! இவன் ஒருத்தன் தான் நம்ம கூட்டத்திலேயே சுகமா இருக்கிறவன். சுகவாசி! பாவம்! பசி தாங்கமாட்டான்.

கிஷண் : சரி உங்க தமாஷ் எல்லாம் போதும்! நிஜமாகவே போலீஸ் இங்கே வத்து கொண்டிருக்குன்னு தகவல் வந்திருக்கு. உம்! உள்ளே இருங்க.

பகத்சிங் : ஓ! சைமன் கமிஷனை நமது லஜபதிராய் அவர்கள் எதிர்க்க முடிவு செய்து விட்டாரல்லவா, அதன் எதிரொலி நம்ம வீட்டிலேயும் கேட்குது.

கிஷன் ஆண்டவா! என் மக்களைக் காப்பாற்று.

[போகிறார்கள்]

(சற்றுநேரம் கழித்து உண்மையான போலீஸ் வந்து கிஷன் சிங்கைக் கைது செய்கிறார்)

இன்ஸ் : மிஸ்டர் கிஷன்சிங்! இதோ வாரண்ட். உங்கள் மீது ஒரு பயங்கரமான கேஸ்.

கிஷன் : என்ன சார்... இப்போதுதானே வேறொரு கேஸுக்காக அரஸ்ட் செய்தீர்கள்... ஜாமீனில் வந்தேன்...

வித்யா : உம். இந்த அரசாங்கத்திலே கேக்ஸுகுத்தானா பஞ்சம்? இனிமே ஒவ்வொரு வீட்டிலேயும் சமைக்கறது கூட. சட்டவிரோதம்னு கேஸ் போட்டாலும் போடுவார்கள்...

கிஷன் : பயப்படாதே வித்யா... நான் போகிறேன் வக்கீலுக்கு சொல்லி அனுப்பு.

வித்யா : ம்... போயிட்டு வாங்க... நான் உடனே வக்கீலோட கோர்ட்டுக்கு வர்றேன்...

**காட்சி முடிவு**



# காட்சி : 16

காலம் : 1928

இடம் : *லாகூரில் ஒரு சாலை.*

நிகழ்ச்சி : *சைமன் கமிஷனை எதிர்த்துத் தேசபக்தர்கள் போராட்டம்.*

பாத்திரங்கள் : *லாலா லஜபதிராய், சாண்டர்ஸ், மற்றும் போலீஸ்கள், தொண்டர்கள் முதலியோர்.*

*[தொண்டர்கள் வந்தேமாதரம் என்று முழக்கமிடுகின்றனர்]*

ஜபதிராய் : நண்பர்களே! நமது விடுதலைப் போராட்டத்தில் மற்றொரு முக்கியமான கட்டம் ஆசை வார்த்தைகளைப் பேசியே ஆங்கிலேயர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். சுதந்திர ஆர்வத்தைத் தள்ளிப் போட சைமன் கமிஷன் என்பதொரு கமிட்டியை அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் குழுவை நமது தேசிய மகா சபை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்படியும் கட்டளையிட்டுள்ளது. அன்னை நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஆயிரம் சோதனைகள் குறுக்கிடும். அதிலே ஒன்றுதான் இன்று நம் முன்னால் நிற்கும் தடையுத்தரவு. சைமன் கமிஷனை எதிர்ப்பது சட்ட விரோதமாம்! கூட்டம் கூடுவது குற்றமாம்! பேசுவது பாவமாம்! இது அரசாங்கத்தின் அவசரச் சட்டமாம்! இதை மீறி நமது உணர்ச்சியைக் காட்டுவது நமது கடமை. இப்போதே சொல்கிறேன், பலவீனமுள்ளவர்கள், பயப்

படுபவர்கள், பெற்றோரிடம் சொல்லாமல் வந்தவர்கள் யாரேனும் இங்கு இருந்தால் தயவு செய்து போய் விடலாம். இப் போராட்டத்தில் எதுவும் நேரலாம்.

எல்லோரும் : எதற்கும் தயார். வந்தே மாதரம்.

ஒருவர் : அய்யா, இந்தத் தள்ளாத வயதில் தாங்கள் அதிக தூரம் நடந்துவர வேண்டாம் தங்களுக்கு ஒரு தனிச் சாரட்டு வண்டி ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் தாங்கள் வரலாம்.

லஜபதிராய் : (கோபித்து) தம்பி, யாரிடம் என்ன பேசுகிறாய்? ஆயிரமாயிரம் இளம்பிள்ளைகளை முன்னே நடக்க விட்டுவிட்டு, பின்னாலே நான் மட்டும் ரதத்தில் அமர்ந்து ஊர்வலம் போகப் பொம்மைத் தலைவனல்ல நான். நானே முன்னின்று உங்களை வழி நடத்துவேன். இந்தக் கிழவன் உடலில் தானப்பா பலவீனம். இது வைரம் பாய்ந்த உள்ளம்!பார் வயதான இந்தக் கிழவன் எப்படி இயக்கத்தை நடத்துகிறேன் என்று பார். கட்டுப்பாடோடு என்னைப் பின்பற்றி வாருங்கள். வந்தே மாதரம். வந்தே மாதரம்

[பல தொண்டர்கள் மாலை சூட்டி அவர் காலில் விழுந்து வணங்குகிறார்கள். லஜபதிராய் வந்தே மாதரம் என்று சொன்னதும் எல்லோரும் வந்தேமாதரம் என்று முழக்கமிடுகின்றனர் ஊர்வலம் புறப்பட்டு இரண்டு அடி நகர, ஒரு வெள்ளைப் போலீஸ் அதிகாரி, சாண்டர்ஸ் ஓர் உத்தரவை லஜபதியின் கையில் கொடுத்து]

சாண்டர்ஸ் : 144. தடை உத்தரவு மீறினால்...

லஜபதிராய் : மீறினுல்!

சாண்டர்ஸ் : மீறினுல். போலீஸ்-மிலிடெரி-ரெடி மனித வேட்டை நடைபெறும்.

லஜபதிராய் : மிஸ்டர் சாண்டர்ஸ்

சாண்டர்ஸ : ஏதாவது நடந்தால், அதுக்கு நீர்தான் ஜவாப்தாரி என்ன? கூட்டத்தைக் கலைக்கப் போகிறீரா, இல்லையா?

லஜபதிராய் : முடியாது

சாண்டர்ஸ் : உங்களை அரெஸ்ட் செய்வேன்.

ஒரு தொண்டர் : (முன்வந்து தத்து) ஜாக்ரதை, எங்கள் தலைவரை நெருங்காதே. போ. (தள்ளுகிறுர்)

சாண்டர்ஸ் : கருப்பு இந்திய நாயே. என்னையா தொடறே?

[தொண்டரைத் தடியால்அடிக்க, தொண்டர் தலையில் இரத்தம் வழிகிறது. இதைக் கண்ட லாலா லஜபதிராய் முன்வந்து]

லஜபதிராய் : சாண்டர்ஸ், ஜாக்கிரதை. ஒன்றுமறியாத ஜனங்களை அடிப்பது மிருகத்தனம், I am the leader here. Deal with me. Don't touch my people, Behave properly.

சாண்டர்ஸ் : ஆ! என்ன சொன்னே? யூ ப்ளாக் ஒல்ட் டாக்!

[பலமுறையும் ஓங்கி அந்தப் பெரியவரை அடிக்கிருன், கூட்டம் வந்தே மாதரம் என்று முழக்கமிடு கிறது. 'சார்ஜ்' என்ற பேரிரைச்சல்கள்! தடியடி பட்ட லாலா லஜபதிராய்-பாரத யுத்தத்தில் பீஷ்மர் அம்படிபட்டுச் சாய்வதுபோல்—வெட்டப்பட்ட ஆலமரம்போல் சாய்கிருர்; வந்தேமாதரம் என்று வாய் நியைற முழங்கு கிருர்.]

காட்சி முடிவு—மாற்றம்

பல காட்சிகள் சாலே நிழலில்

உத்திரப்பிரதேசம் லக்னேவில் (இலட்சுமணபுரி) பண்டித நேருவையும் பண்டிதபந்தையும் போலீஸ் தடியடியால் நொறுக்குகிறது. சென்னேயில் :-[ஹைகோர்ட்டுக்குப் பக்கத்தில்]

பிரகாசம் : குதிரை மீதிருந்த ஆங்கிலேயே ஐ. ஜி. Hamiltan இடம் Go back Simon Commision உம் என் மக்களே அடிக்காதே

ஐ. ஜி : சுடுவேன்...

பிரகாசம் : சுடுவாயா? உம் if your are dare enough shoot me first. தனது சட்டையைக் கிழித்து வீரத் திருமார்பைக் காட்டுகிருர். I. G. ரிவால்வரை பைக்குள் போட்டுக் கொண்டு அடிக்க தடியை ஓங்குகிருன்.

காட்சி முடிவு

## காட்சி: 17

காலம் : 1928.

இடம் : லாலா லஜபதிராயின் வீடு.

நிகழ்ச்சி : உயிர் பிரிந்த லாலா லஜபதிராயின் முன்னல் பகத்சிங்கும் மற்றவர்களும் மரியாதை செலுத்தி விட்டு. வீரச் சபதமிடுதல்-

பாத்திரங்கள் : லாலா லஜபதிராய், பகத்சிங், மற்றும் தேச பக்தர்கள்.

[உயிர் பிரிந்த லாலா லஜபதிராயின் உடல் தேசியக் கொடியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஒரே கதறல்! பலர் மலர்மாலை போட்டு மரியாதை செய்கிருர்கள். அச்சமயம் பகத்சிங் வருகிருன்.]

ஒருவன் : (அழுகிருன்) பகத்சிங். பகத்சிங்.

மற்றெருவன் : பகத்சிங். பாஞ்சால சிங்கம் மடிந்து விட்டது தம்பி.

வேறெருருவன் : பகத்சிங். பாரதத்தின் பீஷ்மர் போய் விட்டார்! நம்மை விட்டுப் போய்விட்டார!

ஒருவன் : தேசபக்தியின் சுடரொளி அணைந்துவிட்டது

மற்றெருவன் : ராட்சசன் சாண்டர்ஸ். தடியால் அடித்தே இவரைக் கொன்றுவிட்டான்.

ஒருவன் : பகத்சிங்.

பகத்சிங் : உஸ். யாரும் அழக்கூடாது. அழுகை அவருக்குப் பிடிக்காது பெண்களைப்போல் அழுது, அந்த மாவீரரது தியாகத்தை மாசு படுத்தாதீர்கள். இப்பேற்பட்ட வீரமரணம் யாருக்குக் கிடைக்கும்! இந்தத் தள்ளாத வயதில் தனது தாய் நாட்டின் விடுதலைக்காக, தமது திருமார்பில் அடிகளைத் தாங்கியவண்ணம் உயிர் நீத்த வீரத்தளபதி! அவர் கடைசியாக என்ன சொன்னார்? என் மார்பில் அடித்த ஒவ்வொரு அடியும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சவப் பெட்டியில் அடிக்கப்படும் ஆணிகளாகும். 'அந்த ஏகாதிபத்திய சவப்பெட்டிக்குரிய ஆணிகளை அறையும் வலிமையை நமது இளங்கரங்கள் பெற வேண்டும். அரசினைப் புதைக்கும் துணிச்சல் நமது நெஞ்சிலே பெருக வேண்டும். இதை மறந்துவிட்டு ஏனய்யா அழுகிறீர்கள்? சரி அழ வேண்டாம். நமது தலைவரைக் கொன்ற அந்த வெள்ளைப் போலீஸ் அதிகாரிக்கு உரிய பாடத்தைக் கற்பித்தே. ஆக வேண்டும். இன்று என்ன தேதி: இருபத்தாறு. சரி, அடுத்த மாதம் இருபத்தாறு வரும்போது—அந்த சாண்டர்ஸ் இந்த மண்ணில் இருக்கக் கூடாது. இருக்க முடியாது. இருக்க விடமாட்டோம். இது சத்தியம். இன்குலாப், ஜிந்தாபாத்! புரட்சி வாழ்க!

[என்று கூறி—மெதுவாக கம்பீரமாக நடந்து, தனது தொப்பியைக் கழற்றி, மண்டியிட்டு வணங்கி லஜபதியின் திருவடியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறான்]

**காட்சி முடிவு**

## காட்சி : 18

காலம் : பகல்.

இடம் : லாகூர் போலீஸ் நிலையம் அருகிலுள்ள ஓர் இடம்.

நிகழ்ச்சி : சாண்டர்ஸ் சுட்டுக் கொல்லப்படுகிறான்.

பாத்திரம் : சாண்டர்ஸ், உதவி சார்ஜெண்டு, பகத்சிங், ராஜகுரு.

[சாண்டர்ஸ் தனது மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கி, தனது உதவி சார்ஜெண்டுடன் பேசிக் கொண்டிருக்கிறான்]

சாண்டர்ஸ் : வாட் மேன். இந்தப் பக்கம்தானே வந்தான். எங்கே ஓடிப் போய்ட்டான் அந்த நாய்? போ மேன். அந்தப் பக்கம் போய் நல்லாத் தேடு. பிடிச்சுக் கொண்டுவா! இல்லே அவனைச் சுட்டுப் பொணத்தைக் கொண்டா. இந்தியன் பிளாக் டாக்ஸ்! போ மேன்.

[என்று வெறுப்புடன் சொல்கிறான் சாண்டர்ஸ். உதவி சார்ஜெண்ட் மேடையைவிட்டு மறைகிறான். அச்சமயம் எதிர்ப் பக்கமிருந்து சுகதேவ் கைத் துப்பாக்கியால் சுடுகிறான். மார்பிலே பட்ட குண்டால் மான் போல் துள்ளி, தனது ரிவால்வரை எடுக்கிறான். மறுபக்கமிருந்து பகத்சிங் தன் பிஸ்டலால் நான்கு வேட்டுகளை வெடித்துத் தீர்க்கிறான். அச்சமயம் போலீஸ் வர, அவனையும் எமலோகம் அனுப்பிவிட்டு மின்னலைப் போல் மறைந்து விடுகிறார்கள். 'புரட்சி ஓங்குக' என்ற முழக்கம் எதிரொலிக்கிறது]

காட்சி முடிவு

# இடை வேளை

## காட்சி : 18-ஏ

**இடம் :** *லாகூரில் ஒரு சாலை.*

*[பகத்சிங்கின் தாயார் வித்யாவதி தேவி தமது குடும்ப வக்கீலிடம் தன் மைந்தன் வழக்கைப் பற்றிப் பேசும் காட்சி]*

வித்யாவதி : என்னங்கய்யா. பதத்சிங் ஜெயில்லே உண்ணு விரதம் ஆரம்பிச்சு பல நாள் ஆயிட்டு தாமே. பாவம் உடம்பு எப்படி இருக்கோ. என்ன வேதனைப் படுருனே. பார்க்கக்கூட அனுமதி யில்லேன்னு சொல்லிட்டாங்கய்யா.

வக்கீல் : பயப்படாதீங்கம்மா. பகத்சிங் உயிருக்குப் பயமில்லே. ஜெயில் டாக்டர் சொன்னுர் மேலும், இந்த உண்ணுவிரதத்தை பகத்சிங் ஆரம்பிக்கலே. ஜெயிலில் அரசியல் கைதிகளை உரிய மரியாதை யுடன் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை நிறை வேற, ஜதீந்திரநாத்தாஸ் உண்ணுவிரதத்தை ஆரம் பிச்சு இன்னிக்கு 50 நாள் ஆகுதம்மா.

வித்யாவதி : ஐம்பது நாளாச்சாம்? அவன் உயிர்...

வக்கீல் : ஊசலாடும் உயிரோடு போராடிக்கொண்டே, அரசாங்கத்திடம் போராடுகிருனம்மா அந்த மாவீரன். ஜெயில் அதிகாரிகள் எவ்வளவோ பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்து விட்டார்கள்! ஆனுல் ஜதீன்தாஸ் உறுதி தளரவில்லை. மனம் மாறவில்லை. அரசாங்கக் கோரிக்கையை ஒப்புக்

கொள்ள மறுத்துவிட்டான். உடலெல்லாம் வெடித்துவிட்டது. பேச்சு குழறிவிட்டது. மூச்சு திணறுகிறது. தண்ணீரைத் தவிர வேறு எதையும் சாப்பிட மறுத்துவிட்டான்.

விததியாவதி : இதன் முடிவு?

வக்கீல் : முடிவு என்னம்மா. வீரமரணந்தான். இனி மேல் ஜதீனதாஸ் பிழைப்பான் என்று எனக்கு நம்பிக்கை இல்லை.

வித்யாவதி : நம் பகத்சிங்?

வக்கீல் : பகத்சிங்...தன் நண்பனுக்காக அனுதாப உண்ணாவிரதந்தான் இருக்கிறார். அதுவும் ஒரு வாரம் ஆகிவிட்டது. பார்ப்போம். நாளை நான் டாக்டருடன் போய் உங்கள் மகன் பகத்சிங்கை பார்த்து வருகிறேன்.

வித்யா : பகத்சிங் மாத்திரமல்லய்யா. அவனோடு அவதிப்படும் ராஜகுரு...சுகதேவ், தத், அஜய்கோஷ், எல்லோரையும் கவனித்து வாருங்கய்யா. நானும் என் மகனைப் பார்க்க ஏற்பாடு செய்யுங்கய்யா,

வக்கீல் : அது முடியாதம்மா, ஜதீன்தாஸ் உண்ணாவிரதத்தால் லாகூர் கோட்டை ஜெயிலே கலகலத்து விட்டதம்மா! எந்த நிமிஷமும் பயங்கரமான புரட்சி வரலாம் என்று, இராணுவம் காவலிருக்கிறது. கைதிகளின் சொந்தக்காரர் யாரையும் உள்ளேவிட உத்தரவில்லேன்னு கண்டிப்பாச் சொல்லிட்டது. அடேயப்பா. இந்த வீரர்களுக்குத்தான் என்ன மனத்

துணிச்சல் தாயே! அதுவும் உங்கள் குமாரன் பகத் சிங், தைரியத்தில் அபிமன்யு, வைராக்யத்தில் பீஷ் மன் போன்றவன். சத்திய விரதத்தில் காந்தி மகான் புரட்சியில் லெனின் போன்றவன்.

வித்யா : சரி. நீங்க போய் பார்த்துட்டு வாங்கய்யா! பகத்சிங்கை பார்க்கணும்னு மறுபடியும் கலெக் டருக்கு எழுதிப் போட்டிருக்கேன். உத்தரவு வர லேன்னு, நானும் உண்ணாவிரதமிருந்து சாக றேன்யா.

வக்கீல் : அம்மா...தாயே. அப்படியெல்லாம் செய்யா தீங்கம்மா.

வித்யா : ஆமாய்யா இவ்வளவு மோசமான நாட்டிலே நான் யாருக்காக உயிர் வாழணும்? மகனோ வருஷக் கணக்கா சிறையிலே. அவன் தகப்பனும் ஜாமீன் கைதியாயிருக்காரு. ஊரைவிட்டு அசையக் கூடாது. தினமும் போலீஸில் ஆஜர் ஆகணும். என் குடும்பமே சுதந்திர தேவியின் பலிபீடத்தில் பலியாகுதய்யா. நானும் கடைசி பலியாயிட்டுப் போறேன்.

வக்கீல் : எனக்கென்னவோ கொஞ்சம் நம்பிக்கையிருக் கும்மா. மகாத்மா காந்திபோன்ற தலைவர்கள், அர சாங்கத்தோட பேசி சீக்கிரம் ஏதாவது ஒரு நல்ல சமரச முடிவுக்கு வருவாங்க. அப்போ...அரசியல் கைதிகளும் விடுதலையாக வழி பிறக்கும். நான் வரேம்மா.

**காட்சி முடிவு**

## காட்சி : 18-பி

இடம் : லாகூர் சிறையின் ஒருபகுதி.

[கூண்டுக்குள் விலங்கு பூட்டப்பட்டு புலிபோல் சீறிக் குமுறி நிற்கும் பகத்சிங்கிடம்]

வார்டன் : (உண்ணாவிரதம் இருக்கும் பகத்சிங், ராஜகுரு சுகதேவிடம்) உங்க கால்லே விழுந்து கேட்டுக்கறேன்' தம்பி. நான் புள்ளைக் குட்டிக்காரன். ஏழு நாளா நீங்க படற வேதனையை பார்க்க முடியலிங்கய்யா! தம்பி. எனக்காகவாவது உங்க உண்ணாவிரதத்தை தள்ளி வைக்கக் கூடாதுங்களா? உங்களுக்கு என்னங்க தலைவிதி. இப்படி குலை பட்டினி கிடக்கணும்னு? பெரிய வீட்டுப் பிள்ளைங்க! எதுக்குங்க இப்படிப் பட்டினியிலே குடலை காயப் போடறீங்க?

பகத்சிங் : பட்டினி, தாகம், பசி, வேதனை எல்லாம் எங்களுக்காக அல்ல-அய்யா-எங்களுக்காக அல்ல. பட்டினிகிடக்கும் நம் நாட்டுக்காக, நாங்கள் பட்டினி கிடக்கிறோம். தவிக்கும் தாய் நாட்டுக்காக, நாங்கள் தாகத்தால் தவிக்கிறோம். இந்த தாகம் சுதந்திர தாகம். நாங்கள் படும் வேதனை இந்த நாட்டின் பிரதிபலிப்பு! இதோ என் நரம்பு நாடி எல்லாம் நடுங்குகிறதே இப்படித்தான், இந்திய நாட்டின் ஏழைப்பாட்டாளி நடுங்குகிறான்.

பாலுக்குப் பிள்ளை அழும்; பட்டினியால் தாய் அழுவாள். வேலையின்றி ஆள் அழுவான்; வீடுமுச்

சூடும் அழும். நாடும் அழுகிறது. நாமும் அழுகிறோம்! அழுகைக்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும்! என்ருல் பேச முடியவில்லை! பாவம்! நல்ல வார்டன்! தண்ணீர் தண்ணீர் வேணும். தாகம் தாகம் தண்ணீரைப் பார்த்து ரொண்டு நாளாச்சு... தண்ணீர்! குடிக்க தண்ணீரய்யா! ஒரு டம்ளர் தண்ணீர்.

வார்டன் : கொஞ்ச இருங்க தம்பி கொண்டு வரேன். ஜெயிலர் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கான்! உங்களுக்குத் தண்ணீர் தந்தா என் வேலை போயிடும்னு ஆர்டர் பேட்டிருக்கான். ஆனுல் இனிமே அந்த ஆர்டருக்கு நான் பயப்படப் போற தில்லே! இதனுலே என் தலையே போனுலும் சரி. தம்பி இதோ கொண்டு வர்றேன். (துணிந்த பார்வையுடன் போகிருன்)

ராஜகுரு : ஆம். வாட்டர் வாட்டர் தாகம். தாகம்.

[வார்டன் ஒரு கலயத்தில் தண்ணீர் கொண்டுவர, அதை பகத்சிங் வாங்கும் சமயம்]

பகத்சிங் : ஆ. தண்ணீர். தண்ணீர்.

[ஆவலோடு பருகப் போகும் சமயத்தில் அங்குவந்த ஒரு ஆங்கில ஜெயிலர் அந்தத் தண்ணீர் கலயத்தைத் தட்டிவிட்டு]

ஜெயிலர் : (வார்டனிடம்) ஏனடா முட்டாள் உனக்குப் புத்தி இருக்கா. (நடிக்கிருன்) யதீன் தாஸ் உண்ணு விரதம் நின்றுவிட்டது. சமாதானத்திற்கு அரசாங்கம் சம்மதித்துவிட்டது. இவர்கள் உண்ணு விரதத்தை உடனே முடித்துக்கொண்டால், உடனே விடுதலைதான். பகத்சிங் யார்? எவ்வளவு பெரிய

தலைவர்; புரட்சிவீரர் அவருக்குப் போய் வெறும் பச்சைத் தண்ணியைக் கொடுக்கறியே? இந்தா... பால்...பாதாம் பால்! பன்னீர்லே அரைச்சு. தேனும் விட்டு காய்ச்சிய பால். உம். உன் ஆசைதீரப் பருகு பகத்சிங்...உம் ராஜகுரு சுகதேவ்...உம்

[எப்படியாவது வீரர்கள் கொண்ட உண்ணு விரதத்தை உடைத்து விடவேண்டும் என்று ஆசை வர்த்தைகளையும் . நடக்காத பொய்களை யும் கூறுகிருன்.]

பாவம் ஏழுநாள், நீங்கள் எதுவும் சாப்பிடலே! நேத்திலே இருந்து ஒரு துளிதண்ணி கூட குடிக்கல்லெ! பாவம். உம். சாப்பிடு. இதைச் சாப்பிட்டதும் உங்கள் உண்ணுவிரதம் முடியும். அதன்பின் இதோ மன்னிப்பு கடிதம். இதில் கையெழுத்து போடுங்க! உடனே விடுதலை உம் பசிதீரட்டும் பாதாம் பால் பருகுங்க.

[பகத்சிங் வாங்குகிருன்]

உம். சாப்பிடு, ஆகா. என்ன வாசனை? காஷ்மீர் குங்குமப் பூ போட்டுக் காய்ச்சியபால். உம். சாப்பிடு. சுகதேவ், ராஜகுரு நீங்களும் சாப்பிடுங்கள்.

பகத்சிங் : (அஹ ஹ. ஹ) ஜெயிலர்.

ஜெயிலர் : Thank you very much Jailor! you are very kind to us. But unfortunately we are unable to respond it! எங்களையா! ஏமாற்றப் பார்க்கறே? எங்கள் உண்ணுவிரதத்தை முறிக்க நீ செய்யற கடைசி முயற்சி இது! எத்தனையோ சதிகளைப் பார்த்தவர்கள் நாங்கள், சத்துள்ள இந்த உணவு வேண்

டாம்...! தாகம் தீரத் தண்ணீர்தான் வேண்டும். தண்ணீர் கொடுக்கப் போகிருயா? இல்லையா? I want water?

[கர்ஜிக்கிருர்கள் மூவரும்]

ஜெயிலர் : இதைச் சாப்பிட்டு உண்ணுவிரதத்தை நிறுத்திஞல்தான் தண்ணீர் தருவேன்.

பகத்சிங் : தண்ணீர் கொடுக்கமாட்டாய்?

ஜெயிலர் : முடியாது.

பகத்சிங் : முடியாது...இதைச் சாப்பிட வைத்து எங்கள் உண்ணுவிரதம் முறிந்தது என்ற பெருமையை நீ அடையப் பார்க்கிருய். முடியாது. எங்கள் உயிரே போனுலும் உங்களுக்குப் பணிய மாட்டேன்.

you cannot break our pledge. Shake our Willpower!

[பால் ஜாடியை அவன்மேல் போட்டு உடைக்கிருன்]

ஆ ஹாஹா...பால்...பால். அல்ல இது எங்களுக்காக ஐம்பது நாள் பட்டினித் தவம் கிடக்கும் ஜதீன் தாஸின் இரத்தம், அரசியற்கைதிகளின் மரியாதைக்காக உயிர் துடித்துக் கொண்டிருக்கும், ஜதின் தாஸுக்கு நாங்கள் துரோகம் செய்ய மாட்டோம். துடிக்கும் அந்த ஆத்மாவுக்கு துரோகம் செய்ய மாட்டோம். உம்: கொண்டு வா தண்ணீர்.

டாக்டர் : (வந்து) ஜெயிலர்! நிலைமை மோசம். உடனே தண்ணீர் கொடுக்கலேன்ஞ. இவங்க உயிருக்கு ஆபத்து. உம் வார்டன்! போ! தண்ணீர் கொண்டு வா. ஜெயிலர்! அனுமதி கொடுங்க! உம்!

ஜெயிலர் : ஓ மை காட்! Oh my god, அவங்க இஷ்டப் படியே தண்ணீர் கொடுய்யா.

[வார்டன் தண்ணீர் செம்பு மூன்று கொண்டுவர மூவரும் விலங்குடன் தண்ணீரை தாகம் தணிய குடிக்கிறார்கள். மேலே கொட்டிக் கொள்கிறார் கள்.]

டாக்டர் : மெதுவா பகத்சிங்......புரை ஏறிடு ஆபத்து. ஆ...கடவுளே...இந்த தியாக வீரர்களை காப்பாற்று.

பகத்சிங் : Thank you Doctor.

டாக்டர் : கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்.

காட்சி முடிவு

## காட்சி : 18-சி

**இடம் :** ஒரு சாலை.

[அறுபத்து மூன்று நாள் உண்ணாவிரதத்தில் காலமாகி விட்ட ஜதின்தாஸ் தியாகத்தைப் பற்றியும், சிறையில் பகத்சிங் ராஜகுரு, சுகதேவ். அஜய்கோஷ் போன்ற மாவீரர்களது மனோ, திடத்தையும் பற்றி வியந்து பாராட்டுகிறார்கள் போலீஸ் வந்து துரத்துகிறது.

ஒரு ஆள் : ஆம்பிள்ளைன்னா அவன்தாய்யா ஆம்பிள்ளை

ஆள் 2 : அடே எங்கப்பா! அறுபத்து மூணு நாள்!

நம் 1 : ஜெயிலர்களும் டாக்டர்களும் அவனை சாப்பிட வைக்க எவ்வளவோ முயற்சி செய்தாங்க.

ஆள் : ஆனா ஒன்னும் நடக்கல்லே!

நம் 1 : ஜதீன்தாஸ்! உடம்பெல்லாம் வெள்ளரிப்பழம் போல வெடிச்சுட்டுது. இருபத்து மூணே வயசு! அடேயப்பா! என்ன திட வைராக்யம்? இந்திய சரித்திரத்திலே இதைப் போல ஒரு வீரன் இருந்த தில்லை அய்யா.

ஆள் 2: உம் போயிட்டான்... ஜதீன் உடம்பை கல்கத்தாவுக்கு கொண்டு போற வழியிலே அவன் உடம்பைப் பாக்கவந்த ஜனக்கூட்டத்திலே நூற்றுக் கணக்கானவங்க நெரிசல் தாங்காம காலமாயிருக்காங்க.

ஆள் : இனி– வெள்ளைக்காரன் ஆட்சி அவ்வளவுதான் வாழ்க சுதந்திரம் வந்தே மாதரம் புரட்சிவாழ்க!

**காட்சி முடிவு**

## காட்சி : 19

காலம் : மாலை

இடம் : லாகூர் கோட்டைச் சிறையில் ஒரு கொடிய பகுதி.

நிகழ்ச்சி : பகத்சிங்கை மீட்பதற்காக முயற்சி செய்யும் வக்கீலிடம் பகத்சிங் பேசுதல்

பாத்திரங்கள் : பகத்சிங், வக்கீல், ராஜகுரு, சுகதேவ் வார்டன்.

[பகத்சிங்கைப் பார்க்க வந்த வக்கீல்முன் கைகால்களில் பூட்டிய விலங்குடன் நிற்கிறான்.

வக்கீல் : பகத்சிங்! இதில் கையெழுத்துப் போடு. உன்னைக் காப்பாற்ற உன் தந்தை கிஷண்சிங் அப்பீல் நடத்தப் போகிறார்.

பகத்சிங் : என்னைக் காப்பாற்றுவதா? வக்கீல் சார் உங்களுக்கென்ன பைத்தியமா? தலை போனபின்பு உடலை எப்படிக் காப்பாற்றப் போகிறீர்கள்?

வக்கீல் : சாண்டர்ஸ் கொலைக் குற்றம் நடந்தபோது நீ ஊரிலில்லை...வெளியூர் போயிருந்தாய் ..

பகத்சிங் :...என்று சாட்சிகள் சொல்லப் போகிறார்கள். அப்படித்தானே? யார் அந்த சாட்சிகள்?

வக்கீல் : மிகப் பெரிய சாட்சிகள். (பகத்சிங் சிரிக்கிறான்) என்னப்பா சிரிக்கிறே?

பகத்சிங் : ஆம். சிரிப்பது—சிந்திக்க வைப்பது, செய்வது—செய்ய வைப்பது, இதுதான் எங்கள் வேலை. இதற்குரிய பரிசைப் பெறுவது எங்கள் கடமை. இதற்கெல்லாம் அழுவது உங்கள் வேலையல்ல. என் தந்தைக்கு இறுதி வணக்கங்களைக் கூறுங்கள். ஆனால் இப்படிக் கடைசி நேரத்தில் என் தந்தையார் போன்ற ஒரு மாவீரன் மனம் மாறியதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

வக்கீல் : பகத்சிங் உன் தந்தையார் ஒன்றும் மனம் மாறிவிடவில்லை. போர் முறையைத்தான் கொஞ்சம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

பகத் : புறப்படுங்கள் வக்கீல் சார். ஆயிரம் சாட்சிகள் வந்து சொன்னாலும் ஆங்கிலேயன் நம்பமாட்டான். கதாநாயகனே இறந்தபின் நாடகம் பார்க்க வந்திருக்கிறீர்கள் நீங்கள்! எங்கள் விதியை எழுதி முடித்து விட்டது அரசாங்கம். அவர்களுக்கு முந்திக் கொண்டு நாங்களே எங்கள் வாழ்வின் இறுதிப் பக்கத்தை எழுதிவிட்டோம் பாரத சிங்கம் லாலா லஜபதிராய் நமது மாபெரும் தலைவர். அவரைச் சுட்டவனுக்கு ஒரு பாடம் கற்பித்தேன். கொலை செய்வது என் குறிக்கோளல்ல. அதற்காக, மனிதன் அஹிம்சை பேசி, ஆட்டுக் குட்டிபோல் இறந்து விடக் கூடாது! கொடுவாளை ஏந்தி நிற்கும் கசாப்புக் கடைக்காரனுக்குக் கழுத்தை நீட்டிக் கொண்டிருப்பதுதான் அஹிம்சை என்றால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயிரமாயிரம் அன்னையரும் குழந்தைகளும் பெரியோர்களும் மரியாதைக்குரிய தலைவர்களும், நாயினும் கேவலமாக ஆங்கிலப் போலீசால் தாக்கப் படுவதை

வேடிக்கை பார்த்துக்கொண்டு அரசாங்கத்துக்கு அடிபணிவது வடிகட்டிய கோழைத்தனம்! அந்தப் பேடித்தனத்திற்குப் பெயர்தான் அஹிம்சை என்ருல், அந்த அஹிம்சைக்கு நாங்கள் அடிமை யாகத் தயாராக இல்லை. கொடும்புலி கோரமாக வாய் திறந்து நிற்கிறது! அதற்கு முன் போய் மடியும் மான் குட்டிகளாக நாங்கள் தயாராக இல்லை! வெறிப் புலியைச் சுட்டெறிவதே நம் கடமை. நீங்கள் எங்கள் பொருட்டு வாதாடவும் வேண்டாம், வழக் காடவும் வேண்டாம். அதை நாங்களே இப்போது செய்துகொண்டிருக்கிரும். கோர்ட்டில் நாங்கள் வாதம் செய்வது உயிருக்குப்பயந்து அல்ல, நியா யத்தை எதிர்பார்த்தும் அல்ல. எங்கள் இயக்கத் தின் விளக்கத்தை இந்த நாடு தெரிந்துகொள்ள வேண்டும்; தெளிவு பெற வேண்டும். கோர்ட்டிலே வழக்கென்ருல் அது பத்திரிகைகளில் வெளியிடப் பெறும்—அது மக்களுக்குத் தெரியும் என்பதற் காகவே வாதிடுகிரும். நாங்கள் ஒருசிலர் சாவதால் நாளைக்கே சுதந்திரத்தை வெள்ளைக்காரன் நமக்குக் கொடுத்துவிட்டுப் போய்விடுவான் என்று நம்பும் அளவுக்கு நாங்கள் ஏமாளிகள் அல்ல; பைத்தியக் காரர்களும் அல்ல. எங்கள் மரணத்தால் இந்த நாட் டில் ஒரு மறுமலர்ச்சி தோன்றும்—மனத்தெம்பு வள ரும். இமய முதல் குமரிவரையுள்ள என்னரும் வாலிப வீரர்களாவது எங்கள் நேர்மையான போரை எண்ணிப் புத்திக் கூர்மைபெறுவார்கள் என்பது நிச் சயம். எருமைபோல உணர்ச்சியற்று உறங்கும் இந்த நாட்டில் எங்களது தியாகம், ஒரு சிற்றெறும்பு கடிக் கும் அளவு ஒரு சிறு உணர்ச்சியையாவது உண் டாக்கும். என்பது நிச்சயம். அஹிம்சையால் இந்த

நாடு விடுதலைபெறும் என்ற நம்பிக்கை எமக்கில்லை— சோவியத் ரஷ்ய நாட்டில் லெனின் தலைமையில் ஜார் ஆட்சி வீழ்ந்ததுபோல், ஆயுதமேந்திய புரட்சிதான் ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்ற முடியும் என்பது எமது நம்பிக்கை. ஏகாதிபத்யம் வீழ்வது மட்டுமல்ல...வெள்ளையன் ஓடியதும், இங்குள்ள கொள்ளை வியாபாரிகளுக்கு நம் நாட்டை அடகு வைப்பதல்ல எம் லட்சியம்! பொதுவுடைமையை இந்தியாவில் அமைத்திடல் வேண்டும். இதற்கு எம் உயிர்த் தியாகம் பயன்பெறுதல் வேண்டும்!!

வக்கீல் : அப்படியானல்?

பகத்சிங் : அப்படியானல்—நாங்களெல்லாம் நாட்டில் புதுயுகம் மலர்வதற்காக அமரர்களாகப் போவதாக அர்த்தம். எங்கள் முறை அரசுக்குப் பிடிக்கவில்லை. இந்த உருவங்களை பிரிட்டிஷ் ராஜதந்திரம் என்ற பாசக்கயிற்றிலே தொங்க விட்டு அதுதான் நீதியின் தராசு என்று உலகுக்குச் சொல்லத் தீர்மானித்து விட்டது!

வக்கீல் : பகத்சிங்!

பகத்சிங் : ஏன்? கேட்கவே பயமாக இருக்கிறதா? என்ன செய்வது? எம் உருவம் அழகாய் இல்லையாம். அது அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லையாம். அதற்காக அதைச் சாம்பலாக்க முடிவு செய்துவிட்டார்கள்

வக்கீல் : பகத்சிங்!

பகத்சிங் : பயப்படாதீர்கள். இப்போது நான் ஒரு சாதாரண கைதி. என்னிடம் துப்பாக்கி இல்லை; வெடிகுண்டு இல்லை.

வக்கீல் : அடைவிடக் கொடுமையானதப்பா உன் வார்த்தைகள். ஆண்டவா!

பகத்சிங் : அழுகை அர்த்தமற்றது. தைரியமாயிருங்கள். மனிதன் என்ன அழியாத பிறவியா? ஏதேதோ காரணத்தில் சாகிறன். நோய் வந்து சாகிறன்—மன முடைந்து மடிகிறன்—பயந்து சாகிறன்—பயப் படாமலும் சாகிறன்—பெண் என்று சாகிறன்; பேய் என்று மடிகிறன். நாங்கள் அப்படியெல்லாம் சாக வில்லையே. சாவு என்ற பயத்தையே சாகடிக்கும் ஒரு மகத்தான லட்சிய மேடையில் உடற் சுமையைக் குறைத்து—உலகத்தின் உண்மைகளாக விளங்கப் போகிறேம். அந்த ஒரு மகத்தான மெய்மையை நிலைநாட்ட—பொய்யான இந்த உடலைக் காணிக்கையாகக் கேட்கிறது காலத்தின வேகம். நாங்களும் காணிக்கையைத் தரப் பலிபீடத்தில் இறங்கிவிட்டோம். அழாதீர்கள்.

வக்கீல் : கடவுளே!

சுகதேவ் : அய்யா! யாரை வேண்டுமானாலும் கூப்பிடுங்கள். பாவம்! அந்தக் கடவுளைமட்டும் அழைத்து விடாதீர்கள். அப்படி ஒன்றுஇருந்தால் அதற்காவது நிம்மதி கிடைக்கட்டும். இதெல்லாம் கடவுள் செயல் அல்ல; நாங்கள் மடிய வேண்டும். எங்கள் மரணத்தால் இந்த நாட்டின் சுதந்திர உணர்ச்சி நெருப்புப் போல் பற்றி எரிய வேண்டும். அந்த நெருப்புக்குரிய நெய்யாக வேண்டும் எங்கள் மெய்யான செயல் நாங்கள் நினைத்தால் அன்றே விடுதலை பெற்றிருக்கலாம். மன்னிப்பு எழுதிக் கொடுத்திருக்கலாம். அதற்குரிய பரிசும் பதவியும் கிடைத்திருக்கும்! சில துரோகிகள்

பலவீனத்தால் பதவி பல பெற்றிருக்கிறார்கள், அந்த துரோகிகளைப்போல ஆத்மசாந்திபெறவோ, அல்லது ஆலய விக்ரகங்களாகவோ நாங்கள் விரும்பவில்லை. சிங்காசனமேறவோ அன்றிச்சிலைகள் ஆகவோ நாங்கள் எண்ணவில்லை. பதவிக்காகவோ அல்லது பட்டத்துக்காகவோ நாங்கள் பாடுபடவில்லை. இந்த நாட்டின் உணர்ச்சி உறங்கிவிட்டது. அதை உறக்கத்திலிருந்து எழுப்ப நாங்கள் திருப்பள்ளி எழுச்சி பாடினோம். யார் காதிலும் விழவில்லை. மலர் தூவிப் பார்த்தோம்; அதன்வாசனையை நுகரும் சக்தியில்லை, வெடிகுண்டை எறிந்தோம். விழித்தது பாரதம். பார்த்தது உலகை. நாங்கள் பைத்தியக்காரர்களல்ல. பயனின்றி வீணாக மடிவதாக எண்ண வேண்டாம். இனி வெள்ளைக்காரன் இந்தியனைச் சுடுவதானால் ஒருமுறையல்ல—பலமுறை சிந்திப்பான். எடுத்தேன் துப்பாக்கியை; சுட்டேன் இந்திய நாய்களை; என்று இனியொருமுறை சொல்ல மாட்டான். என் அருமை நண்பன் யதீந்திரதாஸ் 63 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து அணு அணுவாக மடிந்து செத்தான்; எதற்காக? சிறையிலுள்ள அரசியல் கைதிகள் நன்றாக நடத்தப்பட வேண்டுமென்று தன்னுயிரையே பலியிட்டான்! பாரத நாட்டின் சிறையும் கைதிகளும் இருக்கும்வரை யதீந்திரதாசின் பேரும் புகழும்நீடித்து இருக்கும். போனமாதம் அலகாபாத் பார்க்கில்—பறவை போல் சுடப்பட்டு மாண்டு போனானே சந்திர சேகர ஆசாத் —எங்களில் மூத்தவன், அவன் வீரத்தின் இமயம். ஆ...அந்த மாவீரனும் மாண்டு விட்டான்! இவர்களைப் பின்பற்றி நிற்கும் எங்களால் —சுதந்திரத்தின் பாதை செப்பனிடப் பட்டுள்ளது. சீக்கிரமே நீங்கள் காணப்போகும் சுதந்திர மாளிகை

யின்—அஸ்தி வாரக் கற்களாகப் போகிறோம்நாங்கள். அழாதீர்கள். கீழ்த்திசையில் சூரியன் உதயமாகும் அந்த அழகான வைகறைவேளையில்,ஒளி வீசிச் சிரிக்கும் ஜோதி நட்சத்திரங்களெல்லாம் அடிவானத்தின் மடியிலேமறைந்துவிடுவது இயற்கை! நட்சத்திரங்களைமறைப்பது சூரியோதயத்தின் இயற்கை. பாரத சுதந்திரம் என்ற சூரியனின் உதய காலம் இது!

பகத்சிங்: ஆம்! விடுதலையின் வைகறை வேளை, இதற்கு எம்போன்ற எரிநட்சத்திரங்களெல்லாம் பலியாகியே தீர வேண்டும். இது வீரத்தின் பயங்கரமான தீர்ப்பு. என்ன செய்வது? நாங்கள் பேசிக்கொண்டே இருக்கிறோம் நீங்கள் அழுதுகொண்டே இருக்கிறீர்கள். உங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. எமக்கு எவ்வித உரிமையுமில்லை. நாங்கள் கைதிகள்! அஸ்தமனமாகும் விடிவெள்ளிகள்! உதிரப்போகும் சிறு மலர்கள்! அழக்கூடாது; அழுகை வராது. சிரிக்கிறோம்! எம் நாட்டின் அழுகையைத் தீர்க்க இறுதி நேரத்திலும் எப்படிச் சிரித்தோம் என்று நாட்டு மக்களுக்குச் சொல்லுங்கள். வக்கீல் சார், எங்கள் முகத்தின் சிரிப்பைப் பார்த்தீர்கள். இதோ எங்கள் முதுகின் சிரிப்பைப் பாருங்கள். வெள்ளை ஏகாதிபத்தியம் சுதந்திர வீரர்களுக்குக் கொடுத்த பரிசைப் பாருங்களய்யா பாருங்கள்! இதன் பெருமையை பதவி மோகங்கொண்டு தேசத்தை அழிக்கும்—பாவிகளுக்கு மறக்காமல் சொல்லுங்கள்.

[முதுகைத்திருப்பிக் காட்டுகிறார்கள். அடிபட்ட வீர வடுக்களைப் பார்த்து[

வக்கீல் : ஆ! இதுவும் நடந்ததா?

பகத்சிங் : இதற்கே பயப்படுகிறீர்களே? எங்களோடு வாழ்ந்து ஜெயிலில் அரசியல்கைதிகளின் அந்தஸ்து உயர 63 நாட்கள் உண்ணுவிரதமிருந்து—அமரனுனே வீரன் யதீந்திரநாததாஸ்—அவன் பிரிவை எண்ணி இந்த நாடு என்ன செய்தது? இப்பொழுதும் எங்களுக்கு வேறு ஒன்றும் வேண்டாம். எங்கள் மூவரையும் தூக்கில் ஏற்ருமல், முன்னே நிறுத்தி எங்கள் மார்பினில் சுட்டுக் கொல்லவேண்டும்... இதுவே எங்கள் ஆசை! வீரர்களாகக் களத்தில் மடிய எண்ணுகிருேம்—கொலைகாரர்களைப் போல் தூக்கில் ஏற்றப் படுவதை நாங்கள் வெறுக்கிருேம். இதற்கு வேண்டுமானுல் நீங்கள் அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்யுங்கள். போய் வாருங்கள்! நாளை தூக்கு மேடையிலும் இப்படித்தான் சிரிப்போம் என்பதை உலகுக்குச் சொல்லுங்கள். நாங்கள் விரும்புவது தேசபக்தி! — வெறுப்பது தேசத் துரோகம்.

சிங் : அழாதீர்கள். அதோ, சிறையின் மணியோசை! மரணகீதத்தின் முன்னுேலை. இன்னும் சில நாட்களிலே இந்த சிறையொலிகள்—உலக நினைவுகள்—நியாய வரம்புகள்—நீதியின் நாடகங்கள்—உங்களைப் போன்ற வக்கீல்கள் — வாதங்கள் — பெற்றேரின் பாசம், உற்ருரின் உறவு, நட்பு—பகை, துன்பம் இவைகளெல்லாம் அணுக முடியாத அவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்துவிடுவோம். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சகோதரர்களுக்கும் என் இறுதி வணக்கம். வாழ்க பாரதம். வந்தேமாதரம்! புரட்சி வெல்க.

[கம்பீரமாக நடந்து மறைகிருன்]

காட்சி முடிவு

## காட்சி : 20

காலம் : *மாலே.*

இடம் : *கொடும் சிறையில் மற்ருெரு பகுதி.*

நிகழ்ச்சி : *ஜெயில் வார்டன் ராஜகுருவிடம் பொர்சுக் கடிதம் பெறுதல்*

பாத்திரங்கள் : *ராஜகுரு, பகத்சிங், சுகதேவ், வார்டன் ஜகத்சிங்.*

ார்டன் : உங்களே எப்படியப்பா பிரிஞ்சி இருப்பேன். ரெண்டு வருஷமா - குழந்தைகள் மாதிரி இருந்த உங்களோடு பழகினேன். நாளேயிலிருந்து உங்களேப் பார்க்க முடியாது! அய்யா. பார்க்க முடியாது!

ரஜகுரு : ஓய், தூக்கிலே சாகறத்துக்கு துக்கப்பட வேண்டியது நாங்கய்யா. நீ ஏன் இப்படி அழறே? ஆறிலும் சாவு நூறிலும் சாவு. இதற்கு ஏனய்யா அழுகை?

ார்டன் : என்னமோ தம்பி, மனசு கேக்கல்லே. நானும் பத்துக் குழந்தைகளேப் பெத்தவன், அதிலே ஒரு குருட்டுப் பொண்ணு, காலராவிலே செத்துப்போச்சு அந்த சோகத்தையே சகிக்க முடியல்லேப்பா. ராஜ சிங்கம் போல இருக்கிற உங்களே எப்படி அய்யா தூக்கிலே போட, இந்தப் பாவிகளுக்கு மனசு வந்தது? அதை எப்படி அய்யா சகிக்கிறது?

ரஜகுரு : ஓய், ஜகத்சிங் நீர் உண்மையிலேதான் வருத்தப்படறீரா?

வார்டன் ; ஆமாம்பா. வீட்டிலே வளக்கற ஒரு ஆட்டை அறுக்கறத்துக்கே நம்மாலே முடியற தில்லே! நீங்கள் நாளைக்கு தூக்கிலே ஏறும்போது இந்தப் பாழாப்போன கண்ணுலே எப்படிப்பா பார்த்துச் சகிச்சிகிட்டிருப்பேன்.

ராஜகுரு : சகிக்கிலேன்னு லீவு போட்டுவிட்டு வீட்டுக் குப் போயிடும். இல்லாவிட்டா நீரும் எங்களோட தூக்கிலே ஏறும். கூடவே வாரும்!

வார்டன் : லீவு கேட்டா தரமாட்டான், அய்யா! ராஜத் துரோகின்னு சந்தேகப்படுவான், தூக்கிலேயும் ஏத்தமாட்டான்.

ராஜகுரு : ஆமாம். உமக்கு எவ்வளவு சம்பளம்?

வார்டன் : மாதம் ஐம்பது.

ராஜகுரு : இதுவரைக்கும் எத்தனைப் பேரைத் தூக்கிலே போட்டிருக்கீர்?

வார்டன் : என் சர்விசிலே சுமார் நூறு பேர் இருக்கும் தம்பி.

ராஜகுரு : அத்தனை பேருமே கொலைகாரங்கதானா?

வார்டன் : இல்லை. பாதிக்குமேலே அரசியல் கைதிகள். ஆனா அவங்ககிட்டேயெல்லாம் நான் நெருங்கிப் பழகினதில்லே. எங்கோ தண்டனை விதிப்பாங்க. இங்கே வந்ததும் ரெண்டு நாள்ளே, தூக்கிலே போட்டுடுவாங்க. ஆனால் உங்களோட ரொம்ப நாள் நெருங்கிப் பழகிபுட்டேன் தம்பி.

ராஜகுரு : சரி. உம்மை ஒன்னு கேக்கறேன். நீர் இத்தனை பேரை தூக்கிலே போடறதை சகிச்சிகிட்டு உயிர் வாழ்றீரே! எதுக்கய்யா?

வாாடன் : வேறெ எதுக்கு? குழந்தை குட்டியைப் பெத்துத் தொலைச்சுட்டேன். அதுகளைக் காப்பாத்த வேண்டாமா? அதுக்குத்தான், இந்த நரகத்திலே வேலை பார்க்கறேன். ஆமாம் தம்பி ராசாவூட்டு, புள்ளைங்க மாதிரி இருக்கற உங்களுக்கு ஏம்பா இந்தத் தலைவிதி?

ராஜகுரு : தலைவிதி இல்லேய்யா. இது எங்கள் கடமை உமக்கிருக்கிற பத்துக் குழந்தைகளைக் காப்பாத்த உம் கடமையை நிறைவேற்ற நீர் இப்படி நரக வேதனைப்படறீர். நமது தாய்நாட்டின் கோடானு கோடி ஏழைமக்கள் நல்வாழ்வு பெற, நாங்கள் நரகத்துக்குப் போகலே அய்யா. வீர சொர்க்கத்துக் குப் போகிறோம். எங்களுக்குத் தூக்குக் கயிற் றையே வெற்றி மாலையாகப் போட்டு வழியனுப்புது பிரிட்டிஷ் அரசாங்கம்.

[உள்ளிருந்து விசில் சப்தம் கேட்கிறது]

சரி நேரமாகிறது, ஜகத்சிங். கடைசியாக எங்களைப் பாச மொழிகள் கூறி ஆசையுடன் வழியனுப்பும் உமக்கு எங்கள் நன்றி. (ஒரு காகிதத்தைக் கொடுத்து) இந்தாரும். இந்தக் காகிதத்தைக் கொண்டுபோய், அதில் எழுதியுள்ள விலாசத்தில் கொடும், உம் வறுமை தீரும். உம்மை அங்கேயே வேலைக்கு வைத்துக் கொள்வார்கள். நல்ல சம்பளம் வரும். உமக்கு இன்றிலிருந்து, இந்த நரக லோகத்

திலிருந்து நான் விடுதலை தருகிறேன். பாவம், நல்ல மனம் படைத்த மனிதர். குழந்தை குட்டிக்காரர். சந்தோஷமா வாழும்.

வார்டன் : தம்பி. சாகறப்போது கூட உபகாரமா? அதுவும் உங்களைத் தூக்கிலே போடப்போற எனக்கா?

ராஜகுரு : அழாதீங்கய்யா. பாவம்: நீரா எங்களைத் தூக்கில் போடுகிறீர்? நீங்கள் ஒரு கருவி. எம்மை அழிப்பது அந்நியர் ஏகாதிபத்தியம். சரி நேரமாகிறது.

வார்டன் : உனக்கு எப்படியப்பா நன்றி செலுத்தப் போறேன்?

ராஜகுரு : மனித நன்றிகளுக்கும் ஆசாபாசங்களுக்கும் அப்பாற்பட்ட நிலைமையை அடைந்து விட்டோம் நாங்கள். ஜகத்சிங், எப்போதாவது எங்களை நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள் அல்லவா? அப்போது உங்கள் குழந்தைகளிடம் நாங்கள் வீரச் சிரிப்போடு நாட்டுக்காகத் தூக்குமேடை ஏறினோம் என்று சொல்லுங்கள். அந்தக் குழந்தை பெரியவனானதும் தன் குழந்தைக்கு எங்கள் கதையைச் சொல்லும். அது போதும் எங்களுக்கு, அது போதும். நீங்கள் எங்களுக்காகச் சிந்து பாட வேண்டாம், சிலை வைக்க வேண்டாம், கண்ணீர் சிந்த வேண்டாம், இந்த மண்ணுக்காக மண்ணாகப் போகும் எங்களை எப்போதாவது ஒரு சமயம் எண்ணிப் பார்த்தால் அதுவே போதும். அது போதுமய்யா எங்களுக்கு!

வார்டன் : எவ்வளவு பெரிய மனசப்பா! ஏம்பா. உங்க அப்பா அம்மாவுக்கு ஏதாவது கடுதாசி?

ராஜகுரு : அதெல்லாம் முதலிலேயே கொடுத்து அனுப்பி விட்டோம். பாவம்! பெற்ற தாய் தந்தையர்கள் மனம் வெதும்பித் துடிப்பார்கள். உம், என்ன செய்வது? தாயினும் சிறந்தது தாய்நாடு. சரி. போய் வருகிறேன். புரட்சி வாழ்க. வந்தேமாதரம்

[போகிருன்]

**காட்சி முடிவு**

## காட்சி : 21

காலம் : *மாலை இருள் —1931-மார்ச் 23.*

இடம் : *தூக்குமேடை*

நிகழ்ச்சி : *பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரும் தூக்கிலிடப்படுதல்*

பாத்திரங்கள் : *பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மாஜிஸ்ட்ரேட், இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்கள், வார்டன் முதலியோர்.*

*[பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் முகத்தை மூடப் பார்க்கிறார்கள். ஜெயில் வார்டன், மாஜிஸ்ட்ரேட் மரம் போல் நிற்கிறார்கள்]*

பகத்சிங் : வேண்டாம். கருப்புத் துணியால் களங்கமற்ற எங்கள் முகங்களை மூட வேண்டாம்.

ராஜகுரு : உங்களுக்குப் பயமாக இருந்தால் உங்கள் கண்களை மூடிக் கொள்ளுங்கள்.

சுகதேவ் : பயமா? இவர்களுக்கா? இவர்கள் மரணத்தின் கடவுள்கள். நம்மைப்போல் எத்தனையோ பேரைக் கொன்ற எமகாதகர்கள். உயிர்களைக் கொன்று உயிர் பிழைப்பவர்கள்.

மாஜிஸ்ட்ரேட் : உங்கள் கடைசி விருப்பம்?

பகத்சிங் : சுகதேவ். நமது கடைசி விருப்பத்தை ஐயா கேட்கிறார், சொல்லப்பா.

சுகதேவ் : கடைசி விருப்பம். நன்ருகக் கேட்டுக்கொள்! பாரதநாடு பரிபூரண சுதந்திரம் அடைய வேண்டும்! ஆண்டு பலவாக செத்துக் கொண்டிருக்கும் நமது மக்கள் புதுவாழ்வு பெற வேண்டும்; ஏழையென்றும் அடிமையென்றும் இழிவுபட்ட இன்றைய சமுதாயம் வீரமிக்க வெற்றி பெற்று வாழ வேண்டும். பிச்சைக் காரர்களற்ற, கொச்சைக் கோழைகளற்ற—பொது வுடைமைச் சமுதாயம் அமைதல் வேண்டும்.

ராஜகுரு : அதுமட்டுமல்ல. நாங்கள் தூக்கில் மடிவது எவ்வளவு நிச்சயமோ—அவ்வளவு நிச்சயம் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலிருந்து மறையப் போவது.

பகத்சிங் : அதைவிட ஆயிரம் மடங்கு நிச்சயம் நமது பாரத நாட்டின் சுதந்திரம். வரப் போகும் அந்த வீர சுதந்திரத்தை, தேசத் துரோகிகளும் ஐந்தாம் படைகளும் ஒழித்துவிடாமல் பார்த்துக்கொள்வது வருங் கால வாலிபர்களின் கடமை. ஆம் அருமைச் சுதந்திரத்தைச் பதவி வெறியர்களும் சந்தர்ப்பவாதி களும் அழித்து விடாமல் என்றும் காப்பாற்ற வேண்டியது இந்த நாட்டின் கடமை, இதுவே எமது இறுதி ஆசை. இதைப் போய் எமது பாரத நாட்டு மக்களுக்குச் சொல்லுங்கள். வாழ்க புது உலகம்! புரட்சி வாழ்க! வந்தேமாதரம்.

[மூவரும் தூக்குக் கயிற்றை முத்தமிட்டு மாலைபோல் மாட்டிக் கொள்கிருர்கள்: ஒருவன் கருப்புக்கர்ச் சிப்பை ஆட்டுகிருன். பலகைத் தட்டிவிடப் படுகிறது]

**காட்சி முடிவு**

## நிழற் காட்சி

**பின்னணி :** சட்டத்திற்கு விரோதமாக இரவு நேரத்தில் தூக்கிலே போட்ட உடல்களைப் பெற்றவர்களிடம் கூட த்தரவில்லை. அரசாங்கமே சட்லஜ் நதிக்கரையில் சுட்டெரித்து ஆற்றில் கரைத்து விடுகிறது! மாவீரன் பகத்சிங்கின் மறக்க முடியாத உயிர்த் தியாகம், இமயமுதல் குமரி வரையுள்ள இந்திய நாட்டை உலுக்கி எழுப்புகிறது! இளைஞர்களின் இலட்சிய தீபமாக விளங்குகிறது, புரட்சி—வீரர்களின் புனிதப் பயணம். அவர்களைப் போலவே உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாய்நாட்டுக்கு அர்ப்பணம் செய்ய ஆயிரமாயிரம் இளைஞர்கள் துடித்தெழுகின்றனர். இப்படி ஆயிரமாயிரம் வீர நட்சத்திரங்கள் இருட்சிறைகளிலும் தூக்குமேடைகளிலும் மறைவதைக்கண்டு நாடே மனம்கொதிக்கிறது. இச்சமயத்தில் புயலின்நடுவே அமைதியைப் போல் இந்திய அரசியல் வானத்தில் காந்திமகான் என்ற காலைக் கதிரொளி, தோன்றி விடுதலைப் போர்க்களத்தில் தனது புதிய ஒளியைப் பரப்புகிறது.

*[காந்திமகான் என்ற பாடல். பாடலில் வரும் கருத்திற்கேற்ப ஸ்லைடுகள் நிழலில் தெரியட்டும்*

காந்திமகான் என்ற காலைக் கதிரவன்
காரிருள் நீங்கிட இங்குவந்தான்
சாந்தியுடன் நாடு சக்தியுடன் வாழ
சத்திய சோதனை தந்த மகான்

பட்டாளம் வேட்டு வெடிமருந்து குண்டு
போட்டு மடிந்திடும் மாந்தர்களின்
பாவக் கனல் போக்கி பக்தியுடன் இந்தப்
பாரதம் சாந்தியில் வாழ வந்தான்.

இராட்டையிலே நாட்டு மானத்தைக் காத்துநம்
வீட்டையும் காத்திட ஓடிவந்தான்
காட்டு விலங்குகள் மத்தியிலே ஒரு
காருண்ய மாமுனியாக வந்தான்.

வான்மறை வள்ளுவன் வாய்மை விளக்கினை
வாழ்க்கையில் காட்டிட வந்த மகான்
ஆண்மையுடன் மாந்தர் அஞ்சாமல் வாழ்ந்திட
ஆத்ம சக்தினை தந்த மகான்.

தீட்டிய கத்தியால் ஆட்சி நடத்திய
தீயவர் கூட்டம் நடுங்கிடவே—ஒரு
வேட்டியைக் கட்டிய வீரத்தளபதி
வீதியில் புன்னகையோடு வந்தான்.

செங்கோலுக்கு முன்னொரு சங்கீதம்
செல்லுமா என்றான் ஆங்கிலேயன்
சிங்க மறவர்கள் செல்வம் விடுதலை
சீக்கிரமே அது தேவையென்றான்.

பாட்டெழுதும் கவி பண்டிதரும் சூட்டு
போட்ட வக்கீல் பட்டதாரிகளும்
பூட்டை இறுக்கும் பணக்காரனும் இந்த
நாட்டை நினைத்திடச் செய்தமகான்.

**காட்சி முடிவு**

## காட்சி : 22

காலம் : 1932 ஜனவரி மாதம் 10-ந் தேதி

இடம் : சாலை

நிகழ்ச்சி : திருப்பூர் குமரனுடன் விடுதலை வீரர்கள் பேசுதல்

பாத்திரங்கள் : பி எஸ். சுந்தரம், ராமன்நாயர், குமரன் மற்றவர்கள்.

தண்டோரா : ஜாக்கிரதை! 144—வது செக்ஷன் அமுலில் இருக்கிறது. தெருவில் நாலு பேருக்குமேல் கூடி நிற்பதோ-பேசுவதோ சட்ட விரோதம். தடையுத்தரவு அமுலில் இருக்கிறது. வந்தேமாதரம் என்று கொடி எடுத்தால் போலீஸ் சுடும்—சுடும்—சுடும்.

[வந்தேமாதரம் என்போம் என்ற பாடல் பாடி, மூவர்ண ராட்டைக் கொடிஏந்தி தொண்டர்கள் உள்ளிருந்து வருகிறார்கள். விடுதலை வீரர்களின் மத்தியில் சுந்தரம், ராமன் போன்றோர் மேடையில் நிற்கின்றனர்]

சுந்தரம் : நண்பர்களே! சகோதரர்களே! நாம் ஏந்தி நிற்பது சத்தியம், அன்பு, அகிம்சை, தியாகம், சுபிட்சம், சமாதானம் இவைகளைச் சின்னமாகக் கொண்ட மூவர்ணக்கொடி. இவ்வளவு பண்பினையும் மனித அபிமானத்தையும் உழைப்பால்தான் மனிதன் பெறமுடியும். என்பதை எடுத்துக்காட்ட உழைப்பின் சின்னமாக கைராட்டையையும் மத்தியில் பொறித்துள்ளோம். பெரியோர்களே!

இன்று நாம் அரசாங்கத்தை எதிர்க்கவோ ... கலவரத்தை இங்கு உண்டாக்கவோ கூடியிருக்கவில்லை. தலைவர்களைக் கைது செய்தது தவறு. விடுதலை செய்யுங்கள் என்ற வேண்டுகோளை... பொதுமக்கள் அறியும்படிச் செய்ய நாம் செய்யும் ஒரு சாத்வீகமான முயற்சி. மறந்தும் நம்மால பிறர்க்கு இடையூறு ஏற்படாது. ஏற்பட விடக் கூடாது. கட்டுப்பாடு, கடமை, இவை காந்தியத்தின் இருபெரும் சட்டங்கள்! புறப்படுவோம்.

ராமன் : அண்ணு! எங்கே இன்னைக்குத் தலைமை வகிக்க வேண்டிய ஈஸ்வரமூர்த்தி இன்னும் வரவில்லையே, காரணம்?

சுந்தரம் : ராமன்! நண்பர் ஈஸ்வரமூர்த்தி இன்றைய ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியாத காரணத்தை இந்தக் கட்டத்தில் கூற வேண்டாம் என எண்ணுகிறேன். அவருக்கு ஏதோ தவிர்க்க முடியாத அவசர வேலை, குடும்ப விவகாரம். பரவாயில்லை. யார் வந்தாலும் வராவிட்டாலும் நாம் முடிவு செய்தபடி இன்றைய கொடி ஊர்வலம் நடந்தே தீரும். ஈஸ்வரமூர்த்திக்குப் பதில் நானே தலைமை வகிக்கிறேன்.

ராமன் : சரி. எல்லாம் தயார்தானு? நீங்கள் தாய் தந்தையர் சம்மதத்துடன்தானே வந்துள்ளீர்கள்?

சுந்தரம் : ஆமாம்.

ராமன் : இது சத்தியந்தானே.

சுந்தரம் : சத்தியம்.

ராமன் : வந்தேமாதரம்.

குமரன் : வந்தேமாதரம்.

சுந்தரம் : யாரது?

குமரன் : வந்தேமாதரம் அய்யா.

சுந்தரம் : ராமன், யாரது? தம்பி புதுசாயிருக்கார்?

ராமன் : இவரை எனக்குத் தெரியும். நல்லபிள்ளை. நம்ம ஈ, ஆர். அண்டு சன்ஸ் ஜின்னிங் பாக்டரியிலே கணக்கப்பிள்ளை. மகாத்மா மேலே ரொம்ப பக்தி யுள்ளவர்; பெயர் குமாரசாமி.

குமரன் : ஆமாய்யா. வீட்டிலே குமரன்னு கூப்பிடு வாங்க.

சுந்தரம் : இவர் பெயர் நம்ம சத்தியாகிரகிகளின் பட்டி யலில் இல்லையே தம்பி.

ராமன் : இல்லாவிட்டால் என்ன அண்ணு. இன்று வராத ஈஸ்வரமூர்த்திக்குப் பதிலாக அந்த ஈஸ்வரனுப் பார்த்து இந்தக் குமரனை அனுப்பி வச்சிருக் காருன்னு எண்ணிக்குவோம்.

சுந்தரம் : பெற்றோர்களின் அனுமதி?

குமரன் : பெரியவங்ககிட்டே ஆசீர்வாதம் வாங்கிட்டு தானய்யா வந்திருக்கேன்.

சுந்தரம் : இருந்தாலும் பாவம்! பார்த்தா ரொம்ப மெலிஞ் சிருக்கிறே தம்பி. அடிகிடி பட்டா தாங்கணுமே.

மேலும் போலீஸ் பயமுறுத்தினு பின்வாங்கி ஓடாத துணிச்சல் வேணும் தம்பி.

ராமன் : அண்ணு! ஆளைப் பார்த்து எடை போடதீங்க ஆளு பலே ஆள். குமரனைப் பல வருஷமா தெரியும். வைரம் பாஞ்ச மனசு! இடி விழுந்தாலும் கலங்க மாட்டார்.

சுந்தரம் : கலியாணம் ஆயிட்டுதா?

குமரன் : ஆயிடுச்சிங்க.

சுந்தரம் : உங்க துணைவியின் சம்மதம்?

ராமன் : எல்லா சம்மதத்தையும் வாங்கிக் கொண்டு தான் வந்திருக்கார். அவங்க அப்பா இல்லே. அம்மா இருக்காங்க. அவங்க குடும்பம் ஏழையா இருந் தாலும் வீரமுள்ள குடும்பம்.

சுந்தரம் : ஏம்பா, உன் குடும்பமோ ஏழை. உன்னையே நம்பி இருக்க-நீ தேசத்துக்காகத் தொண்டு செய்ய வந்திருக்கே. நல்லா யோசனை செய் குமரா! எங்களை யெல்லாம் பார்த்து உணர்ச்சி வசப்பட்டோ-அவசரப்பட்டோ, திடீர் முடிவுக்கு வரவேண்டாம். நாங்கள் பல வருஷமா மனசைப் பண்படுத்தி கடைசியா இந்த முடிவுக்கு வந்திருக்கோம். உனக்குக் கடைசியா ஒன்னு சொல்றேம்பா, குமரா, ஏதோ கொடி ஏந்தி-பாட்டுப் பாடி-மகாத்மா காந்திக்கு ஜே போட்டுட்டு போயிடலாம்னு நினைக்காதே. அப்படி எண்ணி இதிலே ஈடுபடக்கூடாது. வர வர நம்ம ஊர் போலீஸ் ரொம்பக் கடுமையா இருக்கு.

எப்படியும் இயக்கத்தை அடக்கவேண்டும் என்பது அரசாங்க உத்தரவு. எதிர்பாராதபடி ஏதாவது நேர லாம், ஆகையால் எல்லாவிதக் கஷ்டங்களையும் எதிர் பார்த்துதான் இதிலே ஈடுபடணும்.

குமரன் : உங்கள் அன்பான அறிவுரைக்கு எனது நன்றி. ஆனால் நான் நீங்க சொன்ன மாதிரி அவசரப் பட்டோ, அல்லது உணர்ச்சிவசப்பட்டோ, ஆவேசப் பட்டோ இந்த முடிவுக்கு வரவில்லை.

இதந்தரு மனையும்நீங்கி இடர்மிகுசிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டு மாறிப் பழிமிகுத் திழிவுற்றாலும்
விதந்தருகோடியின்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே!

என்ற மகாகவி பாரதியின் மந்திரத்தை, என் வாழ் வின் இலட்சியமாக்கிக் கொண்டுதான்வந்துள்ளேன். எம்மான் காந்தியண்ணலை என் இதய மூச்சாக வைத்து உயிர்வாழும் ஒரு ஏழைத்தொண்டன் நான்! ஆனால் ஏழையின் நெஞ்சத்தில், தேச பக்தி என்ற உணர்ச்சிக்கு இடமே இல்லை என்று இந்த நாட்டின் தலைவர்கள் முடிவு கட்டினால், நான் உண்மையி லேயே இந்த இயக்கத்தில் பங்குகொள்ள அருகதை யற்றவன்தான். சொல்லுங்கள். என்போன்ற ஏழைக்கும் சுதந்திர இயக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால், அதையும் சொல்லிவிடுங்கள், நான் உங்களுடன் வரவில்லை. திரும்பிவிடுகிறேன்.

சுந்தரம் : தம்பி! நீ ஒரு ஏழை என்பதற்காகவோ, அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவோ, நான் உன்னை வேண்டாமென்று சொல்லவில்லை. அப்படி யெல்லாம் சந்தேகப்படமாட்டேன். மகாத்மாவின்

சுதந்திர இயக்கமே ஏழைகளின் இயக்கந் தானப்பா. மக்களின் மகத்தான ஜனசக்தியை நம்பித் தான் மகாத்மா இப்புனிதப் போராட்டத்தைத் துவக்கியுள்ளார். பணக்காரர்களை நம்பியல்ல! உன்னையும் என்னையும் போன்ற கோடானுகோடி ஏழைகள் உயர்வு பெற்று, மனிதர்களாக வாழத் தான், அண்ணல் இந்த அறப்போரைத் துவக்கியுள் ளார். நான் உன் வீரத்தைச் சந்தேகப்பட்டதாக எண் ணாதே உன் தேசபக்திக்கு ஒரு பரீட்சை வைத்தேன் அதில் நீ தேறி விட்டாய்! என் தேசபக்தத் திலகமே! உன் போன்று ஊருக்கு ஒரு குமரன் இருந்தால் போதும். நம் நாடு நாளையே விடுதலை பெறும். வாழ்க எம் சகோதரர்!

ராமன் : வாழ்க நம் குமரன்!

குமரன் : வாழ்க மகாத்மா! வந்தேமாதரம்.

[மீண்டும் வந்தேமாதரத்தைத் தொடர்ந்து பாடிய வண்ணம் ஊர்வலம் போகிறார்கள்.]

காட்சி முடிவு

## காட்சி : 23

**காலம் :** பகல்.

**இடம் :** சாலே.

**நிகழ்ச்சி :** விடுதலேப் போராட்டத்தில் திருப்பூர் குமரன் தாக்கப்படுதல்.

['வந்தேமாதரம்' பாட்டுப் பாடிக்கொண்டே தேச பக்த வீரர்கள் ஊர்வலம் செல்கின்றனர். அவர் களேப் பின் தொடர்ந்து போலீஸ் செல்லு கிறது.]

போலீஸ் : பாடாதே. 144. கொடியைக் கீழே போடு! தடையுத்தரவு.

[பாட்டு மேலும் முன்னேறுகிறது. இன்ஸ்பெக்டர் மேடையில் வெளிச்சத்தில் தோன்றுகிறுன்.]

இன்ஸ்பெக்டர் : அடே நில். ஊர்வலத்தைக் கலே. ஓடு, பாடாதே; கொடிய்யைக் கீழே போடு. ஊம், ஓடு.

சுந்தரம் : ஓடுவதற்காக வரவில்லே. மகாத்மா ஆணேப் படி சத்தியப் போர் புரிய வந்திருக்கிறேம். இது பேச்சுரிமையுள்ள நாடு.

இன்ஸ் : இல்லே. ஆங்கிலேய ஆட்சியின் அடிமை நாடு.

சுந்தரம் : இல்லே. நமது சொந்த நாடு! சுதந்திர நாடு.

இன்ஸ் : சுதந்திர நாடு! எங்கிருந்து வந்தது சுதந்திரம்?

சுந்தரம் : மகாத்மா தந்த சுதந்திரம்! துணிவு கொண்ட மனித இதயத்திலே பிறப்பது சுதந்திரம்.

இன்ஸ் : யார் கொடுத்து வந்தது? எப்படி வந்தது?

குமரன் : யார் கொடுத்துப்பெறுவது? எங்கிருந்து வருவது? இச்சை கொண்ட போதிலே நிச்சயம் சுதந்திரம்.

இன்ஸ் : விளையாடாதே.

குமரன் : மிரட்டாதீர். வெம்போரின் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்.

இன்ஸ் : ஜாக்கிரதை! அடி விழும்.

குமரன் : இடிவிழுந்த போதும் அச்சமில்லை! உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!

இன்ஸ் : கடைசியா சொல்றேன்! கலைந்து போய்விடுங்கள்.

சுந்தரம் : முடியாது! ஊர்வலம் முடியும்வரை கலைந்து போக முடியாது.

இன்ஸ் : முடியாது?

குமரன் : முடியாது.

[எல்லாரும் வந்தேமாதரம் என்ற பாட்டைத் துரிதமாகப் பாடுகின்றனர்.

இன்ஸ் : முடியாதா? அடே 420. அடியாத மாடு படியாது ஒன்று இரண்டு மூன்று எண்ணுவதற்குள் பறந்து போயிடணும். இல்லே, உங்கள் உயிர் பறக்கும்.

[விடுதலை வீரர்கள் உச்சக் குரலில் வந்தேமாதரம் பாட்டுப் பாடுகின்றனர்]

ஒன்......டூ......த்ரீ......ஃபோர்—சார்ஜ்!

குமரன் : வந்தேமாதரம்.

[எல்லாரும் வந்தேமாதரம் என்ற பாட்டைத் துரிதமாகப் பாடுகின்றனர்]

[போலீஸ்காரர்கள் குமரனை தடியால் அடித்துக் கீழே சாய்க்கின்றனர். தொண்டர்களை அடித்து நொறுக்குகிறார்கள். இரண்டு போலீஸ்காரர்கள் குமரனை அடித்துக் கொண்டிருக்கின்றனர். குமரன் வந்தே மாதரம் வந்தே மாதரம் என்று சொல்லிக் கொண்டே, கொடியை கீழேவிடாது பிடித்துக் கொண்டே சாய்கிறான்.

காட்சி முடிவு

## காட்சி : 24

காலம் : காலை.

இடம் : ஆஸ்பத்திரியில் ஒரு புறம்.

நிகழ்ச்சி : விலங்கு போடவேண்டுமென்ற உத்தரவுடன் வந்த இன்ஸ்பெக்டருடன் டாக்டர் உரையாடுதல்.

பாத்திரங்கள் : குமரனின் தாய் கருப்பாயி, ஒரு பெரியவர், டாக்டர், இன்ஸ்பெக்டர், நர்ஸ் முதலியோர்.

கருப்பாயி : அண்ணு! நான் என்ன செய்வேண்ணு. எவ்வளவோ சொன்னேன். ஏழைக்கு எதுக்கப்பா இந்த வேலையெல்லாம்னு படிச்சுப் படிச்சு சொன்னேன். ஊர் பெரியவங்களும் சொன்னுங்க. ஒன்றும் வராது-தைரியமா இரும்மா-சௌக்கியமா நான் திரும்பி வந்துடுவேன்னு சொல்லிட்டு வந்தோனே, ஆனு என் மகனை இப்படி சித்திரவதைப் பண்ணிட்டானுகளே பாவிப் பாசங்க! உருப்படுவாங்களா? அய்யய்யோ! என் குழந்தை என்ன பாடு படருனே தெய்வமே! நான் என்ன செய்வேன்? என் பிள்ளை பிழைச்சு வருவானு அண்ணு!

பெரியவர் : பயப்படாதேம்மா! கடவுள் காப்பாத்துவார்.

கருப்பாயி : அப்படித்தான் என்னண்ணு பண்ணிட்டான் என் பிள்ளை. ஏதோ காந்திக் கொடியை ஏந்தி வந்தே மாதரம்னு சொன்னுன், இதுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? இப்படியா அடிக்கிறது? அவங்க புள்ளைக்குட்டிங்க உருப்படுமா? அவன்கள் வாழ்வான்களா? தெய்வமே!

[இரண்டு போலீஸ்காரர்களுடன் இன்ஸ்பெக்டர் அங்கு வருகிறார். கலங்கியழும் குமரனின் தாயைப் பார்த்து]

இன்ஸ் : உங்களுக்கு இங்கென்ன வேலே? கலாட்டா பண்ணீங்க, உங்களேயும் லாக்கப்பிலே தள்ளி விடுவேன்; ஜாக்ரதை.

டாக்டர்: (வருகிறார்) என்ன இன்ஸ்பெக்டர் மிஸ்டர் முகமது. என்ன? இது ஆஸ்பத்திரி! உங்க போலீஸ் ஸ்டேஷன் இல்லே. உங்க அதிகாரம் ஆர்ப்பாட்டம் எல்லா இங்கே வேண்டாம். போகலாம். (குமரனின் தாயிடம் அம்மா! நீங்க அப்படி போயிருங்க. நான் அப்புறம் உங்களேக் கூப்பிடறேன்.

இன்ஸ் : டாக்டர் சார், டாக்டர் சார். அடிபட்டு சிகிச்சை பெறும் குமரன்-சுந்தரம்-ராமன் மூன்று பேரும் பயங்கரவாதிகள். அவர்கள் கைதி செய்யப்பட்டவர்கள். சட்டப்படி அவர்களுக்கு விலங்கு போட்டு-போலீஸ் பாரா கொடுக்கணும்.

டாக்டர் : மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! உயர்ந்த உத்தியோகத்திலே இருக்கிறவங்களுக்கு புத்தி மாத்திரம் இருந்தா போதாதய்யா! கொஞ்சம் மனித இதயமும் இருக்கணும்.

இன்ஸ் : டாக்டர். கவர்ன்மெண்ட் கடமையைச் செய்ய வந்துள்ளேன். கைதிகளுக்கு விலங்கு போடணும் அது சட்டம்.

டாக்டர் : பேஷ்! விலங்குப் போடணுமா? இந்த விலங்கை யாருக்குப் போடப் போறீங்க! அவங்க உடம்பிலே கட்டுப் போடவே இடமில்லே. அப்படி

அடிச்சிருக்கீங்க! இந்த லட்சணத்திலே எங்கய்யா விலங்கு போடப் போகிறீர்? குமரனுக்கு மண்டை ஓடு முறிஞ்சு-மூளையிலே ஏறிட்டுது; சுந்தரத்துக்கு. 19 எலும்பு முறிஞ்சிருக்கு. ராமனுக்கு விலா எலும்பு முறிஞ்சி விட்டது. இவ்வளவும் செய்துட்டு விலங் கோட நிக்கிறீரே அய்யா...சரி. உம்மோடு பேச எனக்கு நேரமில்லை. நீர் போகலாம்.

இன்ஸ் : டாக்டர்! ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கேவலப் படுத்துறீங்க.

டாக்டர் : ஒய். என்னய்யா மிரட்டுறீர்? நீர் போலீஸ் இன்ஸ்பெக்டரா இருக்கலாம்! ஆனால் நான் உயிரைக் காப்பாத்தற டாக்டரய்யா டாக்டர். உம்மைப் போல கொலைகாரனில்லை. ஓய்! நீர் அடிச்சதே சட்ட விரோதம். ஆயுதம் தாங்காத ஜனங்களை முழங் காலுக்குக் கீழேதான் அடிச்சிருக்கணும், எடுத்ததும் கொலை செய்யறமாதிரி நீர் அடிச்சிருக்கீர்.

இன்ஸ் : டாக்டர்! ஆகட்டும் பார்க்கிறேன்! கவர்ன் மெண்டுக்கு ரிப்போர்ட் அனுப்பறேன்.

[போலீஸ் இன்ஸ்பெக்டர் கோபத்துடன் முறைக் கிறார். அப்போது நர்ஸ் ஓடிவந்து]

நர்ஸ் : டாக்டர் குமரனுக்கு ரொம்ப சீரியஸா இருக்கு.
[டாக்டர் அதைக் கேட்டதும் ஓடுகிறார்]

இன்ஸ் : டாக்டர்! எனக்கு என்ன பதில் சொல்றீங்க?

டாக்டர் : ப்ளீஸ் கெட் அவுட்.

**காட்சி முடிவு**

## காட்சி : 25

**காலம் :** இரவு.

**இடம் :** ஆஸ்பத்திரியில் படுக்கை அறை.

**நிகழ்ச்சி :** திருப்பூர் குமரன் உயிர் பிரிதல்.

**பாதிரங்கள் :** குமரன், ராமன், சுதந்திரம், டாக்டர், குமரனின் தாய், இன்ஸ்பெக்டர், நர்ஸ், போலீஸ் காரர்கள் முதலியோர்.

[ஆஸ்பத்திரி படுக்கையறையில் குமரன் அடிபட்டுக் கிடக்கிருன்]

குமரன் : என் கொடி எங்கே? கொடி எங்கே? வந்தே மாதரம். வந்தேமாதரம். வாழ்க மணிக்கொடி, வாழ்க...

டாக்டர் : குமரா! கொடி வேணுமாப்பா? இதோ, இதோ.

[டாக்டர் ஒரு கொடியைக் கொண்டு வந்து கொடுக்கிருர். அதைப் பிடித்துக் கொண்டே 'வந்தே மாதரம்–வாழ்க மணிக்கொடி' என்று சொல்லிக் கொண்டே உயிர் விடுகிருன்]

ராமன் : குமரா போய்விட்டாயா! குமரா போய் விட்டாயா? எங்களையெல்லாம் விட்டுப் போய் விட்டாயா? தியாகப் பரிட்சையில் நீ எங்களையெல் லாம் முந்திவிட்டாயப்பா? (டாக்டரிடம்) டாக்டர். (குமரன் தாயிடம்) அம்மா, மாவீரனைப் பெற்ற தாயே! உங்கள் மகனைப் பறிகொடுத்துவிட்டீர்கள்'

இனிமேல் நாங்களெல்லாம் உங்களுக்குப் பிள்ளை யாக இருந்து காப்பாற்றுவோம்! அம்மா.

[குமரனின் தாய் அழுது குமரன்மேல் விழுந்துபுரள் கிருள்.]

சுந்தரம் : டாக்டர். அவனை அடித்த போலீஸ் தடிகள் தான் ஓய்ந்து கீழே விழுந்தன. ஆனுல் மாவீரன் குமரன் ஏந்திய மணிக்கொடி-கடைசிவரையில் கீழே விழவே இல்லை டாக்டர்,

ராமன் : (மேலும் அழும் குரலில்) தன் உயிரைக் கொடுத்து-கொடியின் உயிரைக் காப்பாற்றி விட்டாய் குமரா! குமரா. நீமண்ணிலே விழுந்துவிட்டாய். ஆனுல் கொடியை நழுவ விடவில்லை. அதைக் கீர்த்தியின் விண்ணிலே நிரந்தரமாகப் பொறித்து விட்டாய்.

சுந்தரம் : அவன் கடைசிவரை முழங்கிய வீரமுழக்கம். 'வந்தே மாதரம்' என்ற தாரக மந்திரம்தான். குமரா, இந்தியா இருக்கும் வரை உன்னுடைய பெயர் தேச பக்தர்களின் நெஞ்சிலே நிலைத்திருக்கும்பா நிலைத் திருக்கும்.

ராமன் : வாருங்கள் புறப்படுவோம். இந்த கர்மவீரனின் கடைசி ஊர்வலத்தையாவது நடத்துவோம். நமது கண்ணீரால் இந்தப் புனித உடலை நீராட்டுவோம் நம் நெஞ்சில் எரிந்து கொண்டிருக்கும் சுதிந்திரத் தீயால் குமரன் சிதைக்கு தீ மூட்டுவோம்.

டாக்டர் : சுந்தரம், என்ன இது? நீ போவதா? அசையவே கூடாதப்பா. ராமன், உங்களுக்குந்தான்

சொல்றேன். நீங்கள் இவ்வளவு தூரம் நின்றதே தவறு. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். ப்ளீஸ். ம்.

சுந்தரம் : எப்படி அய்யா நாங்கள் இங்கிருக்க முடியும்? குமரனை விட்டுவிட்டு நாங்கள் எப்படி அய்யா படுத்துக் கொண்டிருக்க முடியும்? எங்களால் முடியாது டாக்டர், முடியாது.

ராமன் : டாக்டர் எங்களை மன்னிக்க வேண்டும்.

டாக்டர் : (கோபமாக) நீங்கள் எங்கும் போகக் கூடாது. இது என் கட்டளை.

சுந்தரம் : டாக்டர்! நாங்கள்?

டாக்டர் : உம்! போய் படுங்கள்! நர்ஸ், டேக் கேர்ஆப் தெம்.

சுந்தரம் : டாக்டர்! குமரன் கொடியாகவே ஆகி விட்டான். அவன் இனி குமரன் இல்லே டாக்டர்-அமரன். அவன் உடலை வீர மரியாதையோடு அடக்கம் செய்வோம்.

இன்ஸ் : வீர மரியாதை! ராஜத் துரோகிக்கு ராஜமரி யாதை; ஊர்லே 144 உத்தரவு இருக்கு. ஊர்வலம் கூடாது. மேலும் கவர்ன்மெண்ட் கைதி, வீட்டுக்கு கூடக் கொண்டு போகக் கூடாது. போஸ்ட்மார்ட்டம் பண்ணனும். அதுக்குப் பிறகு இப்படியே சுடு காட்டுக்குக் கொண்டு போனுல் போங்க. இல்லே! போலீஸ் அந்த வேலையைப் பண்ணும்.

டாக்டர் : இன்ஸ்பெக்டர்.

கருப்பாயி : வேணுமய்யா. போலீஸ் வேணுய்யா கையெடுத்துக் கும்பிடுறேனய்யா. பெத்தக் கையாலேயே மண்ணையள்ளிப் போடுற பாக்கியத்தை யாவது கொடுங்க. அவனை உயிரோடு வாழத்தான் விடலே. அவன் உடலை அடக்கம் செய்யவாவது எனக்கு அனுமதி கொடுங்கய்யா.

டாக்டர் : பயப்படாதிங்க. உங்க விருப்பப்படி நடக்க நான் ஏற்பாடு பண்றேன். இன்ஸ்பெக்டர்! ஐ டோல்ட் யு நாட்டு என்டர் மை ஆஸ்பிடல்—யு கெட் அவுட்—மெர்சிலெஸ் மெஷின்' Inspector! I told you not to enter my Hospital. You get out—Merciless machine. I will report to the Government about your excessive action!

**காட்சி முடிவு**

## காட்சி : 26

**காலம் :** *அந்தி மாலை*

**இடம் :** *திருப்பூரில் சுடுகாட்டு வழி*

**நிகழ்ச்சி :** *திருப்பூர்க் குமரனை அடக்கம் செய்தல்*

**பாத்திரங்கள் :** *திருப்பூர் குமரன் பூ உடல். மற்றவர்கள்.*

*[திருப்பூர்க் குமரனின் உடலை ஒரு பாடையில் கிடத்தி அமைதியாக நடந்து செல்கின்றனர். வெள்ளைத் திரையில் இதை நிழற்காட்சியாகக் காண்பிக்க வேண்டும்.]*

*பின்னணி :* நாம் நிழலில் காணும் இந்தக் கொடுமையான காட்சி கற்பனைச் சம்பவமல்ல. 1932 ஜனவரி மாதம் 11-ந்தேதி திருப்பூரில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சி. அன்று ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கோரக் கைகளால் தாக்குண்டு மடிந்த தேச பக்தன் திருப்பூர் குமரனின் உடலை அடக்கம் செய்வதற்குக் கூட முடியாத ஒரு நிலையில் இந்தியா இருண்டு கிடந்தது.

காலச்சக்கரம் சுழல்கிறது. 'இந்தியனே உனக்கு மானமுள்ள விடுதலை வேண்டுமானால் உன் கடமையைச் செய். இல்லையேல் செத்து மடி' என்று 1942-ல் காந்திமகான் என்ற காலைக் கதிரவன் நமக்குக் கட்டளையிட்டது. நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம் எதிரியை நெருக்கியது. பம்பாயில் கடற்படை வெள்ளையர்க்கு எதிராகக் கலகம் செய்தது.

நாடெங்கும் கலவரம், தலைவர்கள் சிறையில்! 1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது.

பின்னணி : விடுதலை வந்தவுடன் அதைப் பெற்றுத் தந்த தளபதியை மறந்துவிட்டோம். மறந்தது மாத்திரமல்ல; தேசத் தந்தைக்கு உரிய நமது நன்றியின் பரிசையும் கொடுத்து விட்டோம். சரித்திரம் மறவாத 1948 ஜனவரி 30 வெள்ளிக்கிழமை! விளக்கேற்றும் நேரம் நம்மையெல்லாம் மனிதர்களாக்கிய மகாத்மாவிற்கு நாம் தந்த பரிசு மூன்று துப்பாக்கிக் குண்டுகள். அவர் நமக்கு உயிர் கொடுத்தார். நாம் அவரது உயிரையே எடுத்துவிட்டோம். ஏகாதிபத்தியத்திற்கு அவர் கொடுத்த தொல்லைகளை ஐம்பது ஆண்டுகள் அந்நிய அரசாங்கம் பொறுத்துக் கொண்டது. ஆனால் விடுதலை வந்த ஐந்து மாதங்கள் கூட மகாத்மா வின் சத்திய விரதத்தைப் பொறுத்துக் கொள்ள நம்மால் முடியவில்லை. அவரைக் கொன்றுவிட்டோம். வந்த விடுதலைக்கு வெள்ளி விழாவும் கொண்டாடிவிட்டோம். இன்றும் நாம் மகாத்மாவுக்கு ஒரு பெரும் பரிசைக கொடுத்துக கொண்டிருக்கிறோம். வரப்போகும் காட்சிகளில் இன்றைய சமுதாய நிழலைப் பார்த்து என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

[மேற்கண்ட பின்னணிச் சம்பவங்களுக்கேற்ற ஸ்லைடுகளை பின்னணிப் படுதாவிலே போட வேண்டும்.]

காட்சி முடிவு

## காட்சி : 27

காலம் : *மாலை.*

இடம் : *சாலை.*

நிகழ்ச்சி : போலி தேசபக்தர்கள் உருவாகுதல்

பாத்திரங்கள் : *சத்தியா பிள்ளை, கத்தியா பிள்ளை, உத்தியா பிள்ளை, சோணாசலம்.*

சத்தியா : இப்போ நாம் மூவரும் எதுக்காகக் கூடியிருக் கோம்னு தெரியுமா?

உத்தி : தெரியல்லியே!

கத்தியா : யோவ், தெரியாததை எல்லாம் தெரியும்னு சொன்னாத்தானய்யா இந்த நாட்டிலே புத்தி சாலின்னு மதிப்பான்.

உத்தியா : ஓகோ! அப்படியா? அப்படின்னா தெரியுங்க.

சத்தியா : வீரவாள் கொண்டு வரலாற்றை உருவாக் கிய மூவேந்தர்கள் ஞாபகார்த்தமாக நாம் மூவரும் இங்கே கூடியிருக்கோம்னு நான் நெனைக்கிறேன்.

கத்தியா : அட போய்யா. மூவேந்தராவது முன்னூறு வேந்தராவது. இந்த நாட்டிலே சின்னப் பசங்க ளெல்லாம் பெரிய தலைவனாயிட்டானுங்கய்யா. சிட்டுக் குருவிகளெல்லாம் பட்டம் கட்டிகிட்டு அரசி யல் சட்டிப்பானையை உருட்டித்தள்ளுதய்யா.

உத்தியா : அடே. ஏதோ எவனோ எப்படியோ போகட்டுங் களே. நமக்கென்னங்க.

சத்தியா : எவன் தலைவன் ஆனு நமக்கென்னுன்னு ஒதுங்கிப் போகக் கூடாதய்யா. இவங்களை இப் படியே வளர விட்டோம்னு நாம வாழ முடியாது. ஏன்னு பயங்கர இயக்கத்தைச்சேர்ந்தவங்க அவங்க! ஆனுனப்பட்ட ஆங்கிலேய ஆட்சியையே ஆட்டி வச்சவங்களாச்சே. நம்மை சும்மா விடுவாங்களா. சுரண்டித் தள்ளிடுவானுங்க.

கத்தியா : நாம என்ன அரசாங்கமா, நம்மளைச் சுரண் டறதுக்கு.

சத்தியா : அட. நாளைக்கே அரசாங்கம் நம்ம கைக்கு வந்துட்டுதுன்னு வச்சுக்கோ.

கத்தியா : இது ரொம்பப் பேராசைங்க. நீங்க ரொம்ப தூரத்துக்குப் போறீங்க. அரசியல் ஒரு முருங்கை மரங்க. இதை நம்பி ஆசைங்கற வேதாளம் ஏறினு, மரமும் முறிஞ்சிடும்; நம்ம முழங்காலும் முறிஞ்சிடும்

சத்தியா : நீ ஒண்ணு. நான் ஒரு பத்து பதினைஞ்சு ஜோசியனைப் பார்த்தேன். நமக்கு இனிமேதான் நல்ல நேரம்னு சொன்னுன். அதுக்குப் பிறகுதான் என் பேச்சை இப்படி மாத்திக்கிட்டேன்.

கத்தியா : அப்ப நீர் ரோசலே. உம்ம கிரகம் இப்படிப் பேசச் சொல்லுது. ஆமா. இதுக்கு நாம் என்ன பண்ணனும்?

சத்தியா : ஒன்னு ரெண்டா. எவ்வளவோ திட்டங்கள் இருக்கு. ஆகா. அதோ பார். திட்ட மலையே நடந்து வருது.

[பெரிய சரீரமான சோணுசலம் மெதுவாக நடந்து வருகிருர்.]

சோணு : என்ன? என்ன பேசிக்கிட்டிருக்கீக.

கத்தியா : எல்லாம் உங்களைப் பத்தித்தான்.

சோணு : என்னைப்பத்தியா?

சத்தியா : ஆமா. பெரியவகளைப் பத்திப் பேசா நாள் எல்லாம் பிறவா நாளே. ஐயா, பெரியவர்களைப் பத்தி தெரியுமில்லே?

கத்தியா : பெரியவங்க சோணுசல பூபதியின் மகன் சுகராஜ பூபதி மகன் ஸ்ரீமான் ஏழுமலை சோணுசல எட்டுமலை பூபதி.

கத்தியா : நிறுத்துங்க நிறுத்துங்க. அவர் சிரமப்பட்டு வாங்கின மற்ருெரு பட்டத்தை விட்டுட்டீங்களே.

சத்தியா : என்னது?

கத்தியா : உம். ஸ்ரீமான் சோணுசல பூபதியின் மகன் சுகராச பூபதி கவிராஜ கேசரி ஸ்ரீமான் ஏழுமலை சோணுசல எட்டுமலை பூபதி.

மற்றவர் : ஏழைகளின் தோழர் வாழ்க! பணக்காரர் களின் பாது காவலர் வாழ்க! அறிவின் பொதியமலை வாழ்க! வாழ்க!

சோணு : (சிரித்து) செலவழிச்சு வாங்கின அந்தத் திவான் பகதூர் பட்டத்தை விட்டிட்டீகளே.

உத்தியா : அது ரொம்பப் பழசாப் போச்சுங்க இப்ப வேண்டாங்க.

சத்தியா : அடுத்த கூட்டத்திலே அறிமுகப்படுத்தும் போது சொல்லிவிடறேன்.

சோணு : ஆமா. என்னமோ திட்டம் கிட்டம்னு பேசிக் கிட்டிருந்தீங்களே. நான் இல்லாம திட்டமா?

உத்தி : அய்யய்யோ. அந்த திட்டத்தையே உங்க தலைமேலேதானே தீட்டணும்.

சோணு : என் தலை என்ன சாணைக் கல்லா?

சத்தியா : புத்திக் கூர்மைக்காகச் சொல்றரு. நீங்க தப்பா எடுத்திட்டீங்களே.

சோணு : ஓகோ! ஆமா, என்ன திட்டம்?

சத்தி : நம்ம நாட்டுக்கு சுதந்திரம் வந்துடுச்சே. வராதுன்னு நெனைச்ச சுதந்திரம் வந்து தொலைச் சிடுச்சே. அதை நினைக்கறபோதெல்லாம் அழுகையா வருது!

சோணு : யோவ், அதுக்கு ஏன்யா இப்போ வருத்தப் படறே? அது வந்துதான் 30 வருஷத்துக்குமேலே ஆயிடுச்சே. சுதந்திர இந்தியாவைப் பற்றி உலக மெல்லாம் ஆனந்தப்பட்டுக்கிட்டிருக்கு. நீ ஏன் அழுவுறே?

சத்தியா : உலகம் ஆனந்தப்படலாம். ஆனு, நாம ஆனந்தப்பட முடியாதே. உள்ளூர் பகை வளர்ந் திடுமே.

சோணு : அதுக்கு நாம் என்னய்யா பண்ண?

சுத்தியா : நாமெல்லாம் ஊக்கமா சேர்ந்து ஒரு ஏக்கம் ஆரம்பிக்கணும்.

சோணு : ஏக்கமா?

உத்தியா : ஏக்கம் இல்லைங்க. இயக்கம்.

சோணு ஓகோ! இபக்கமா! இபக்கத்தின் நோக்கம் தயக்கமின்றிச் சொல்லுங்க.

சுத்தியா : இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களின் வறுமையைப் போக்க—பாடுபடும் தொழிலாளியின் வாட்டத்தை நீக்க — உழைப்பவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க—பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வாங்கிக் கொடுக்க—புதிய சமுதாயத்தை அமைக்க—என்று சொலலுவேன் என்று—எண்ணு கிறீர்களா? இல்லை, இல்லை, இல்லை நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளத்தான் இந்த இயக்கம் வேண்டும், வேண்டும், வேண்டும்.

சோணு : வேண்டாம்; வேண்டாம் வேண்டாம். நாம உண்டு—நம்ம வியாபாரம் உண்டுன்னு இருந்திடலாம். அய்யா! அய்யா! அய்யா!

சத்தியா , அய்யோ அய்யோ அய்யோ! நம்ம உண்டு—நம்ம வியாபாரம் உண்டு—நம்மவீடு உண்டுன்னு இருந்தா, இந்த ஆளுக நம்மளேயே? உண்டு விழுங்கிடுவானுங்களே!

சோணு : என்னே விழுங்குறதா? ரொம்ப கஷ்டமாச்சே.

ந்தியா : மலே முழுங்கி மகா தேவன்களெல்லாம் இருக்காங்க இந்த நாட்டிலே நீங்க எம்மாத்திரம்? ஆனா நாங்க இருக்கிற வரைக்கும் இன்னொருத்தன் உங்களை முழுங்க நாங்க விடமாட்டோம்.

ந்தி : அய்யா! அரசியலைப் பத்தி நாம பேசக்கூடாது. அதுக்கெல்லாம் நமக்கு ஆயுசு போதாது. அயல் நாட்டிலிருந்து நிறையக் கடனெல்லாம் கொடுக்கப் போறாங்களாம். அதுக்கு நாம கட்டுப்பாடா இருந்தா நமக்கும் பங்கு கிடைக்கும்.

த்தி , ஆமாங்க. நமக்குரிய பங்கை நாம விட்டுடலாமா?

ாணு : அதுக்கு நாம என்ன செய்ய?

ந்தி : அவங்க நம்மை பயமுறுத்தற மாதிரி அவங்களை நாம பயமுறுத்தணும்.

ாணு : யோவ் நம்மகிட்ட என்னய்யா இருக்கு? வேட்டு வெடிமருந்து துப்பாக்கி இதெல்லாம் இருக்காய்யா அவங்களைப் பயமுறுத்த?

ந்தி : நீங்க ஒன்னு. வேட்டு வெடிமருந்து துப்பாக்கி இதெல்லாத்தையும்விட, ஓட்டு உரிமைங்கிற ஒரு பலமான ஆயுதத்தை– அந்த ஓட்டாண்டியான காந்தி மகான், இந்த அப்பாவிஜனங்களுக்கு வாங்கிகொடுத்துட்டுப் போயிருக்காரே! அது ஒன்னு போதுங்களே

ாணு: ஆமா; ஓட்டையெல்லாம் அவங்களுக்குத்தானே அய்யா போடுவாக இந்த ஜனங்க.

சத்தி : அது அவங்களுக்குப் போகாதபடி ஓட்டு வியாபாரத்தை நாமே ஆரம்பிச்சுட்டா என்ன?

சோணு : அடபோய்யா. ஓட்டு வியாபாரமா? அவனவன் மாடி வீடு கட்டிக்கிட்டு இருக்கிறான். எவனய்யா ஓட்டு வீடு கட்டறான்? ஓட்டு வியாபாரம் செய்ய.

சத்தி : ஓட்டுன்னு வீடு கட்டற ஓடுன்னு நெனைச்சிங்களா. ஓட்டு உரிமை.ஜனநாயக நாட்டிலே மககளுக்குக் கொடுத்த வாக்குச் சீட்டு.

சோணு : எல்லாம் தெரியுது. சொல்லுய்யா!

சத்தி : அதாவது மக்கள் ஓட்டுகளை நாம மொத்தமா வாங்கி ஏத்துமதி இறக்குமதி பிசினஸ் பண்ணிட்டா என்ன? எப்படி என் யோசனை?

சோணு : கோரோசனை! அடபோய்யா. இது என்ன வெளி நாட்டு வியாபாரமா, ஏத்துமதி இறக்குமதி பண்ண? உள்நாட்டு வியாபாரம்தானேய்யா? ஓட்டை விக்கிறதும் நம்ம ஜனங்க, அதை விலைக்கு வாங்கறதும் நம்ம ஜனங்க.

சத்தியா: அததுக்கு அங்கங்கே அப்படி அப்படி கொஞ்சம் பணத்தைச செலவழிக்கணும்; அவ்வளவுதான. தேர்தல் சமயத்திலே கொஞ்சம் நோட்டைத் தாராளமா விட்டா ஓட்டெல்லாம நாமளே வாங்கிடலாம். நோட்டை கொஞ்சம் அதிகமா அடிக்கணும்.

சோணு : ஆமாம் ஏழை ஜனங்கதானே, நோட்டைக் காட்டிஞ ஓட்டைப் போட்டுடுவாங்க.

ந்தி : ஆமாங்க. தேர்தல் நேரத்திலே நோட்டை சில் லரையா மாத்திப் பறக்க விட்டா அவங்க எல்லாம் ஓட்டைப் போட்டுடுவாங்க. நாம கோட்டையை பிடிச்சுடலாம்.

ாணு :நம்ம முகத்தைப்பாத்து எவன்யா ஓட்டைப் போடுவான்?

ந்தி : நாம் ஏன் முகத்தைக் காட்டணும். முகத்தைப் பார்த்தா ஒரு பய போடமாட்டான். ஆனு நாம நீட்டற நோட்டுக்குப் போடுவான். அதுக்குத்தான் நாமெல்லாம் சேர்ந்து ஒரு ஓட்டு இயக்கம் ஆரம்பிக் கணும் என்கிறேன்.

ாணு : என்ன இயக்கம்?

ந்தி : கிடுகிடு இயக்கம்! இடி இடிப்போராட்டம்! கிடுகிடுத் தாக்குதல்! கொடி ஏற்றும் திட்டம். படி மாற்றும் திட்டம். மகாத்மா காந்தி அவர்கள் உண்ணுவிரதம் இருந்தார். நாம் உண்ணும் விரதம் இருப்போம். அவர்உப்பு சத்தியாக்கிரகம் செய்தார். நாம் பருப்பு சத்தியாக்கிரகம் செய்வோம். சக்கரை சத்தியா கிரகம் பண்ணுவோம் !

ாணு : அய்யய்யோ! இனிக்குதே, இனிக்குதே!

ந்தியா : மகாத்மா காந்தி அவர்கள் அரிச்சந்திரா நாட கம் பார்த்தார். நாம் காதல் சினிமா பார்ப்போம்; பாவம், அவர் நடையாநடந்து—அடிபட்டு ஜெயில்லே அடைபட்டு, இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார். நாம். இருந்த இடத்திலிருந்தே பிரியாணி கோழி, குருமா, காடை, கௌதாரி, குயில், மயில் சாப்பிட்டு எல்லாம் சுதந்திரமா அனுபவிப்போம்,

எல்லோரும் : ஆஹாஹா. சுகமான வழி!

கத்தியா : இப்படி ஒரு திட்டத்தை இந்த நாட்டிலே இது வரைக்கும் எந்தத் தலைவனுவது சொல்லியிருக்கானு?

உத்தியா : இதுவரைக்கும் எந்தக் குடிமகனும் சொல்ல இல்லே! இனிமேல் எப்படியோ?

கத்தி : இந்த இயக்கத்தையே உங்க தலைமேலேதான் நடத்தணும்னு நாங்க முடிவு பண்ணியிருக்கோம்.

சோணு : அய்யய்யோ, என் தலைமேலேயா? வேண்டாம்.

மூவரும் : இல்லே! இல்லே! நீங்கதான் இருக்கணும்.

சோணு : வேண்டாம்; வேண்டாம்.

கத்தி : ஐயோ! பக்தர்கள் ஏழுமலையானை நம்பியிருக்கிற மாதிரி உங்களைத்தான் மலை போல நம்பியிருக்கோம்.

சோணு : வேண்டாங்க, வேண்டாங்க.

கத்தி : ஏங்க, தலைவர் ரொம்ப மறுக்கிறுரே... அப்ப... வேறு யாரையாவது தலைவராப் போட்டுடலாமே!

கத்தி : ஏங்க, தலைவராயிருக்கிறதுக்குப் பயப்படறீங்களா? இல்லே, கூச்சப்படறீங்களா?

சோணு : நானெல்லாம் தலைவனு இருக்கணும்னு வெட்கமா இருக்கு. என்னமோ வெக்கமா இருக்கு...

கத்தியா : நீங்க ஏங்க வெட்கப்படணும்? நீங்க தலைவரா இருப்பதைப் பார்த்து இந்த நாடு வெட்கப்படட்டும்.

சோணு : சரி. வீதியிலே பேசினது போதும். மத்த விஷயங்களை நாளைக்கு வீட்டிலே பேசுவோம். ஒரு மனுசனை என் வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கேன். நீங்கள் சென்றுவாருங்கள், பார்க்கலாம். (போகிறுர்)

சத்தியா : ஏங்க, மனுசனை வரச் சொல்லியிருக்கேன்னு சொல்லீட்டுப் போருரே. அப்ப நாமளையெல்லாம் என்னன்னு நினைச்சிட்டாரு?

கத்தியா : அவர்மாதிரி மிருகமா நினைச்சுட்டாரோ என்னமோ?

உத்தியா : மனுஷனை மண்ணு மலைன்னு நெனச்சோம் சரியான கல்லுமலை.

கத்தியா : உம். நாம அவ்வளவு இலேசிலே உட்டுடு வோமா? இந்தக் கல்லிலேயும் நார் உரிப்போம்!

உத்தியா : இந்த ஆளைத் தலைவனுக்கி தெருத்தெருவா அலையவச்சி உருத்தெரியாமா குலையவச்சி, பணத் தைக் கரைய வச்சு, உடம்பையும் குறைய வச்சாத் தான் நம்ம கூட்டணி நிம்மதியா இருக்க முடியும். எப்படி என் எட்டு அம்சத்திட்டம்?

சத்தி : நல்ல திட்டமய்யா! எதிரியை மட்டம் தட்டும் திட் டம். நான் சத்தி, இவர் கத்தி, நீர் சுத்தி இந்த முப்பெரும் புத்திசாலிகளாகிய நமது இயக்கமே ஒரு தத்துவப் பாசறை. இதிலே உண்டு பல அறை. அதிலே ஒரு குறை நமது கறை. சரி வாரும். பேசா மல் காரியத்தில் இறங்குவோம்.

காட்சி முடிவு

## காட்சி : 28

காலம் : மாலை.

இடம் : சோணாசலம் வீடு.

நிகழ்ச்சி : சோணாசலம், தன்னை ஆதரிக்கும்படி வாலிபன் கந்தசாமியை வற்புறுத்துதல்.

பாத்திரங்கள் : சோணாசலம், கந்தசாமி, சத்தியாபிள்ளை கத்தியா பிள்ளை, உத்தியா பிள்ளை.

கந்தசாமி : வணக்கமய்யா. என்னை வரச் சொன்னீர்களாமே?

சோணாசலம் : ஆமா. வரச் சொன்னேன். இப்பத்தான் வந்திருக்கே. ஆமா நீ எங்களுக்கு ஆதரவா இருக்கணும்பா.

கந்த : என் ஆதரவு உங்களுக்கு எதுக்குங்க? நான் ஏழை! நீங்க பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க.

சோண : ஆ...ங்...ங்...அப்படிச் சொல்லக் கூடாது. எனக்கு உங்க தாத்தாவைத் தெரியும்; அப்பாவைத் தெரியும்; மாமாவைத் தெரியும்; மாமியைத் தெரியும். எவ்வளவு நாணயமான குடும்பம். உங்க மாமா மணியான பொருளையெல்லாம் தானம் பண்ணிருரு· உங்கப்பா, சுதந்திரம், தேசம்னு உயிரையே விட்டவர். பாவம் நீயோ!...

ந்த : நானும் அதுக்குத் தயாரா இருந்தவன்தாய்யா.

சாணு : தெரியும், நீயும் ஜெயிலுக்கெல்லாம் போய் அடி பட்டவன்தானே, தம்பி! அடிபடறது வேறே, அனு பவிக்கிறது வேறே!

ந்த : ஆமாய்யா. இந்த நாட்டிலே அடிபடறதுக்குன்னே சில பேர் பொறந்திருக்கான்! அனுபவிக்கிறதுக் குன்னே சில பேர் பொறந்திருக்கான்! அதுசரி, இப்போ எதுக்குக் கூப்பிட்டீங்க?

சாணு : தம்பி! இப்போ ஒரு புது இயக்கம் ஆரம்பிச் சிருக்கோம்.

ந்த : புது இயக்கமா! ஏற்கனவே இந்த நாட்டிலே 1008 இயக்கம் இருக்கு. அது போதாதா?

சாணு : தம்பி! இந்த இயக்கம் உன் நன்மைக்காக. அதனுடைய இலட்சியம் ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்க்கிறது. அரசாங்கத்தை எதிர்க்கிறது. அரசை எதிர்த்தா ஜனங்க நம்ம பக்கம் சேர்ந்திடுவாங்க. உனக்கும் ஒரு பதவி வர சான்ஸ் இருக்கு. எப்படி?

ந்த : அய்யா. பதவியை எண்ணி நான் பாடுபடலே. மேலும் அரசாங்கத் திட்டத்தை ஏன் எதிர்க்கணும்? அரசாங்கம் போட்ட பல திட்டத்திலேதானே நீங் கள் எல்லாம் இப்படிப் பணக்காரராக இருக்கீங்க.

சாணு : ஆ...ங்...ங். எங்கப் பணம் அரசாங்கத் திட்டத் திலே வந்தது இல்லேப்பா. எங்க அதிர்ஷ்டத்திலே வந்தது.

கந்த : இதை முட்டாள்கூட நம்ப மாட்டான். உம்மை நீரே மறுத்துப் பேசுகிறீர். சுதந்திரத்திற்கு முன்னுல் உமக்கு இருந்த செல்வத்தின் மதிப்பென்ன? எப்படி இருந்தீர்? அன்று நீர் ஒரு சாதாரண வியாபாரி· இன்று 10 ஆலேகளுக்கு அதிபதி. பல கம்பெனி களின் தலைமைப் பொறுப்பு உமது கையில் இருக் கிறது. இதெல்லாம் எப்படி வந்தது. மக்களின் உழைப்பு! நம் தலைவர்கள் போட்ட திட்டங்கள்· நேசநாடுகள் நமக்குச் செய்த உதவிகள்! இதை நீர் மறுக்க முடியுமா

சோணு : மறுக்கலேய்யா.

கந்த : பின் ஏன் திட்டத்தை வேண்டாமென்கிறீர்

சோணு : மேலே மேலே திட்டத்தைப் போட்டுகினே போனு, எங்க மார்க்கெட்டு கெட்டுப் போயிடுமே. எல்லாருமே எங்க மாதிரி பெரிய மனுசனுங்க ஆயிடு வாங்களே.

கந்த : உண்மையைச் சொல்லிட்டிங்கய்யா. அப்போ உங்களைத் தவிர உலகத்திலே வேறு யாரும் வாழக் கூடாது. அப்படித் தானே.

சோணு : அதெல்லாம்இல்லே. இந்த சோசலிஷம், சம தர்மம், பரவல் பொருளாதாரம், அப்படியெல்லாம் சொல்லிக்கிறுங்களே, அதைகேக்கவே பயமா இருக்கு அந்தப்பயத்திலேயிருந்து நாட்டைக் காப்பாத்தனும் பணம்என்பது ஒரு லட்சுமி. அதைப் பல இடத்திலே அலையவிடக் கூடாது. ஒரே இடத்திலே பத்திரமாப் பூட்டி வைக்கணும்! சர்வோதயம் பண்ணப்படாது!

நந்த : அய்யா. இந்த ஊர் சாக்ரடீஸ் அவர்களே, உங்க உபதேசத்தைக் கேக்க வரலே. எனக்கு வேறே வேலே இருக்கு—வருகிறேன்.

சோணு : என்ன வேலே? ஊரைச் சுத்தற வேலே! உனக்குத்தான் மில் மேனேஜர் வேலே கொடுத்தேன். வேண்டான்னுட்டே. நீ செயல் வீரன். உன்னே நல்லாத் தெரியும். நீ வெறும் வாய்ப் பேச்சை நம்ப மாட்டே. இரு...இரு...செயலிலேயே காட்டிடுறேன்.

[உள்ளே போய் ஒரு பை நிறைய பணம் கொண்டு வந்து]

இந்தா, இது எவ்வளவு தெரியுமா? ஒண்ணு பெரிய ஒண்ணு. ஒரு லட்சம். ம். உன்னே நான் நம்புறேன். ஏன்னு நீ காந்தி வழி வந்தவன். வாங்கினு செய் வேங்கற நம்பிக்கை உண்டு. ஆமாம், சிலபேர் கை நிறைய வாங்குவான். ஆனு செய்யமாட்டான். நீ நல்லவன்! நீ என்னே ஆதரிக்க வேண்டாம். எதிர்த்துப் பேசாமல் இருந்தா அதுவே போதும் உன் லட்சியத்தையும் விடாதே. இந்த லட்சத்தையும் வாங்கிங்கோ! போ—சௌக்கியமா இரு. நீயும் வாழு! என்னேயும் வாழவிடு! ஊரைமற; உன்னே நினே.

நந்த : நீரும் நானும் மட்டும் வாழ்ந்து பயனில்லே அய்யா! இந்த ஊர் வாழணும்; உலகம் வாழணும்.

சோணு : ஆமாம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்னமோ அப்பா! எப்படியாவது என்னே ஆதரிக்கணும். நான் பெரிய மனுசனுவே இருக்கணும்! அம்புடுதான்.

கந்த : என்ன மிஸ்டர் சோணுசலம். பாம்புக்குப் பாலை யும் ஊத்தணும்! அது கடிக்க வந்தா, அதை அடிக்க வும் கூடாது. உம். அதுதானே உங்க எண்ணம்?

சோணு : இதைப் பாரு தம்பி, நான் எவ்வளவு பெரிய மனுஷன் தோத்துப் போனு. என் கௌரவமே போயி டுமே!

கந்த : அப்போ உங்க கௌரவத்தை இந்தக் காகித நோட்டாலே காப்பாத்திக்கப் பாக்கிறீங்க? அப்படித் தானே? அட பேப்பர் மனுஷா!

சோணு : உலகமே! இந்தப் பேப்பர்லேதாம்பா நடக்குது. சர்வம் பேப்பர் மயம் ஜகத்.

கந்த : காசுக்கு ஆசைப்பட்டு மணிக்கு ஒரு கொள்கை மாறும் மடையனிடம் இந்தக் காசைக் கொடும். அவன் உமக்குத் தாளம் போடுவான்! நீர் சொல்ற படி நடனமும் ஆடுவான்.

சோணு : இது கள்ளப் பணம் இல்லை தம்பி, வெள்ளைப் பணம்.

கந்த : இல்லை! கொள்ளைப் பணம். அரசாங்க நிர்வாகத் தையே நிலைகுலைய வைத்து, நாட்டின் பொருளாதா ரத்தையே நலிய வைத்து, ஏழை எளியவர்களை நாச மாக்கும் நாசப்பணம். தேவைக்கு மீறி மனிதனிடம் இருக்கும் பணம் திருட்டுப்பணம் என்று மகாத்மா கூறியது எவ்வளவு உண்மை என்று இப்பொழுது தான் புரிகிறது. நீங்களெல்லாம் மனம் மாறுவீர்கள் என்றுதான் பணத்துக்குத் தர்மகர்த்தாவாக இருக் கச் சொன்னுர் அண்ணல் காந்தி.

சோணு : அப்படின்னு?

கந்த : அப்படினு புரியவில்லையா? கோயில் தர்மகர்த்தா சிலையைத் திருடக்கூடாது. பேங்க் கேஷியர் பேங்க் பணத்தை தனது என்று எடுக்கக்கூடாது. நான் உமது ஆகாரத்தைத் திருடக் கூடாது. சரியான சமுதாய வில்லன் நீர்! [பணத்தை எறிகிறான்.]

சோணு : தம்பி! என்னைப் பகைச்சிகிட்டு இந்த ஊர்லே வாழ முடியும்னு நினைக்கிறியா? இந்தப் பாரு! நீ மேடை மேடையாப் பேசலாம். கூடை கூடையா மாலை போடுவான். ஆனா ஒரு பயலும் ஒருவேளை சோறு போடமாட்டான்.

கந்த : என்ன மிரட்டுகிறீர்? சோற்றுக்கும் சுகத்துக்கும் அடிமையாகும் சோம்பேறியலல்ல நான். 60 நாள் பட்டினி கிடந்த அனுபவம் எனக்கு உண்டு.

சோணு : இந்த மகாத்மா சாட்சியா சொல்றேன், நீ மனம் மாறினா நல்லது.

கந்த : மாறுபவன் மாறட்டும். சத்தியம் மாறாது! அந்த சத்தியத்தின் ஒளியைத்தான் மகாத்மா உருவத்தில் நாம் சந்தித்தோம். அவர் தந்த விடுதலையால் ஏதோ சுதந்திரம் வந்தது. அதன் பயனாக சுபிட்சம் வந்தது. அந்த சுகபோகத்தை உங்களைப் போன்றவர் அகம் பாவத்திற்குப் பயன் படுத்துகிறீர்கள். மகாத்மாவின் பெயரால் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றங்கள் நிகழ்கின்றன. இந்த நாட்டில்! இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டின் தலைவிதியை ஆண்டவனால் கூட மாற்ற முடியாது. நான் வருகிறேன்.

சோணு : அப்படின்னா என் தேர்தல் என்ன ஆகிறது?

கந்த : தேர்தல்! தேசம் இருந்தால் தானே தேர்தலை நடத்த முடியும்? நீர் தான் தேசத்தின் சுபிட்சத்திற்கே வெடி வைக்கிறீரே? உம்போன்ற சுயநலக் கூட்டத்திற்குத் தேர்தல் ஒரு சூதாட்டம். அரசியல் களத்திற்கு அது ஒரு விளையாட்டு. பொதுமக்களுக்கு அது ஒரு திருவிழா. இன்னும் உண்மையை நம்பியிருக்கின்ற என் போன்ற அபாக்கியசாலிகளுக்கு அது ஒரு புனிதமான லட்சியம். புது யுகத்தை அமைக்கும் போராட்டம். சரி, வருகிறேன். ஒன்று சொல்கிறேன் இனி உங்கள் மாய இராவண வாழ்க்கை மாண்டு மடியும் காலம் வந்துவிட்டது.

[அங்கு மாட்டப்பட்டிருந்த மகாத்மா படத்தைப் பார்த்து]

ஓ. நீரும் மகாத்மாவின் படத்தை வைத்திருக்கிறீரா?

சோணு : ஆமாம்: நம்ம பிரசிலே அச்சடிச்சது!

கந்த : ஓய். சோணுசலம். நீர் பத்தாயிரம் கோடிக்குக் கள்ளநோட்டு அச்சடிக்கலாம். அரசாங்கத்தை ஏமாற்றலாம். ஆனால் இந்த மகாத்மாவின் படத்தை மட்டும் அச்சடிக்காதீர். உடனே இந்தப் படத்தை இந்த இடத்தைவிட்டு அகற்றிவிடும். மகாத்மா படம்வைக்கும் யோக்யதை உமக்கு இல்லை. சரி நீர் அகற்றமாட்டீர்! நானே எடுத்துப் போகிறேன்.

[படத்தைக் கழற்றி எடுத்துக் கொள்கிறான்]

சோணு : அய்யையோ. இதுதாம்பா எல்லாத்தையும் காப்பாத்துது. இதுதாம்பா இன்னும் நமக்குக் கேடயமா இருக்கு. அட உலகம் தெரியாத ஆளா இருக்கியே. பணத்தைக் கொடுத்தா— அதை விட்டுட்டுப் படத்தை எடுத்துக்கிட்டு போறியே.

இந்தாப் பாரு தம்பி, நீ இந்தப் படத்தைத் தூக்கிட்டுப் போயிடலாம். பல லட்ச ரூபா செலவு பண்ணி முச்சந்தியிலே காந்தி சிலையை வச்சிருக்கேனே, ஊரெல்லாம் என்னைத்தானே புகழுது. அதுக்கு என்ன பண்ணப் போறே?

கந்த : அப்படியா? அந்தத் தைரியத்திலேதான் இவ்வளவும் பேசறீரா? அந்தப் போலிப் புகழுக்கும் ஒரு முடிவு கட்டுவேன். எது வந்து எதிர்த்தாலும் இந்தப் பாவத்துக்கு ஒரு முடிவு கட்டியே தீருவேன்.

[கந்தசாமி காந்திபடத்துடன். ஒருபுறம் போக மறுபுறம் சத்தியாப்பிள்ளை நுழைந்து[

சத்தி : என்ன தலைவரே! மனுசன் என்ன சொல்றான. மசிஞ்சானா? மறுத்தானா? மனம் மாறினானா?

சோணு : மகா முரட்டுப் பயப்பா! மாறவேமாட்டேங்கிறான். மாத்தவும் முடியலே! ஏமாத்தவும் முடியல்லே!

சத்தி : அவனை மாத்தறப் பொறுப்பை எங்கிட்டே உட்டுடும்.

சோணு : எப்படி? பை நிறையப் பணம் கொடுத்தே மாறு — தவனை நீ எப்படி மாத்துவே?

சத்தி : கொடுக்கத் தெரியாம கொடுத்தீர். அவன் எடுக்கத் தெரியாமல் போயிட்டான். அதைக் கொடும் என்னிடம் கொடுக்க வேண்டிய விதத்தில கொடுத்து, அவன் விரதத்தைக் கெடுக்க வேண்டிய மருந்தால் கெடுத்து, காரியத்தை முடித்து வருகிறேன்.

சோணு : இந்தா—போ! எப்படியாவது ஆளை மாத்து போ! இவனை மாத்தினா இந்த நாட்டையே மாத்தற மாதிரி!

**காட்சி முடிவு**

## காட்சி : 29

காலம் : *பகல்.*

இடம் : *ஒரு சாலையின் ஒதுக்குப்புறம்.*

நிகழ்ச்சி : *வாலிபன் கந்தசாமிக்கு மதுவை ஊற்றிய பிறகு அவனுடன் உரையாடுகிறான்.*

பாத்திரங்கள் : *சத்தியாபிள்ளை, கந்தசாமி, ஆசிரியர்.*

*[வாலிபன் கந்தசாமி எதையோ குடிக்கக் கூடாததைக் கொஞ்சம் குடித்துவிட்டு பாதி மயக்கத்தில் வருகிறான். இதற்குக் காரணமான சத்தியா பிள்ளை கூடவே வருகிறான்]*

கந்த : ஓய் சத்தியாப்பிள்ளை. நான் எங்கே இருக்கேன்?

சத்தியா : இங்கேதான் இருக்கே இது நம் குடியரசு நாடு!

கந்த : நீர் என்ன கொடுத்தீர்? நான் என்ன சாப்பிட்டேன்?

சத்தி : நான் நன்னாரி ஷர்பத்தான் கொடுத்தேன். நீ முன்னாடி குடிச்சதில்லே போலிருக்கு.

கந்த : ஷர்பத்தா இப்படி இருக்கு?

சத்தி : அது புதுசா தயார் பண்ணது. இதனாலே பல ஏழைங்க பொழைக்கிறாக. இது ஒரு குடிசைத் தொழில்!

கந்த : ஏழைகள் பிழைக்கிறாங்களா? அப்படின்னா சரி, நீ ஏழையா...? சொல்லு! நீ ஏழையா?

சத்தி : ஒரு காலத்திலே ஏழை!

கந்த : இப்போ...

சத்தி : மது நீரியல் வாரியத் தலைவன் முகில் பாரி வள்ளல்.

கந்த : சீ, கோழைப்பயலே! எதையோ கொடுத்து என்னைக் கெடுத்துட்டே! போ! போயிடு.

சத்தி : கெட்டதுதான் கெட்டே! முழுக்கக் கெட்டுடலாம் வா. வாலிபனப்பா நீ வாழ்க்கையை அனுபவி! குடி! எலும்பைக்கடி! யாரையாவது பிடி! பணம் வந்தா கொள்ளை அடி! அப்புறம் பார்! எல்லாப்பயல்,களும்.உனக்கு அடிமை ஆயிடுவாங்க. இல்லே நீயும் எங்கமாதிரி ஆயிட்டே, பயப்படாதே. காந்தியம் என்ற கவசம் இருக்கு...உன்னைக் காப்பாத்தும். அதனாலே நீ எங்களைவிடப் பெரிய மனுஷன் ஆயிட்டே. வாழ்க பெரிய மனிதர்! காந்தியத்தைப் பேசிகிட்டே காரியத்தைப் பாரு! இந்த நாடு வெறும் கோஷம் போடறவங்களை, வேஷம் போடறவங்களைத் தான் ரசிக்குது! நீயும் அதையே செய்—உம்—தலைவனாகும் தகுதி உனக்குப் பூரணமாக இருக்கு; பிடி என் ஆசீர்வாதம்! மகாத்மா காந்தி வாழ்க!

கந்த : பேசாதே! ஆயிரம் பாவம் பண்ணு. ஆனால் அந்த உத்தமன் பேரை மட்டும் உன் வாயால்...

சத்தி : அட நீ ஒன்னு...அவர் பேருதாம்பா சர்வரோக சஞ்சீவி, மகாத்மா வாழ்க! மதுவாத்மா வாழ்க! தம்பி அந்த அயோக்யன், காந்தி சிலையை வச்சிருக்கான். அதை வெடி வச்சு உடைச்சுத் தள்ளு! காந்திக்கு சிலை பிடிக்காது!

கந்த : காந்தி என்ற பெயரை உச்சரிக்காதே! உங்களை எல்லாமே வெடிவைச்சுக் கொல்லணும்! கொல்லு வேன்! தந்தையே மகாத்மா, நான் என்ன செய் தேன்? நான் என்ன செய்தேன்? ஆம். செய்யக் கூடாத குற்றம்—சேரக்கூடாத இடம்! அடே பாவி! [ஓடுகிருன்]

சத்தி : (கந்தசாமி தள்ளாடி ஓடுவதைப் பார்த்து, விருந்திலே கொடுத்த மருந்து வேலே செய்ய ஆரம்பிச்சுட்டுது. இனிப் பய மீள முடியாது சரியா ஆப்புட்டுக்கிட்டான். பணத்தை அவன் வாங்கி கிட்டாதாக ஊரெல்லாம் பிரச்சாரம் பண்ணிப் புட லாம்.

[போக எத்தனிக்கும்போது கந்தசாமியின் ஆசிரியர் ஓடிவந்து]

ஆசிரியர் : ஏம்பா சத்தியம், கந்தசாமி உன் வீட்டுக்கு வந்தானுமே. எங்கே அப்பா?

சத்தி : உங்க சிஷ்யன்தானே! அவன் பெரிய ஆளுங்க அவனே நம்பாதிங்க. ஆளு கெட்டுப் போயிட்டான் குடிக்கவும் ஆரம்பிச்சுட்டான். பாவிப் பய!

ஆசிரியர் : சத்தியம்! பொய் சொல்லாதே ஜாக்கிரதை! என் கந்தசாமி நல்லவன், வைராக்கிய முள்ளவன், அவன் உத்தமன்.

சத்தி : நானும் அப்படித்தான் நெனைச்சேன், ஆனு, சாது மிரண்டா காடு கொள்ளாதுங்க. ஆசாமி மாறி விட்டான். ஒரே மூச்சிலே இரண்டு பாட்டிலேக் குடிக்கிருன்.

ஆசிரியர் : இப்போ எங்கே அவன்?

சத்தி : அதான் அந்தக் காந்திசிலைகிட்டேயே சுத்திக் கிட்டிருப்பான்! காந்தி சிலையை வெடிவச்சு உடைக்கப் போறதாக உளர்ரான்.

ஆசிரியர் : காந்தி சிலையை உடைக்கிறதா? எங்கே அவன்?

சத்தி : எங்கே எங்கேன்னு என்னைக் கேட்டா! அங்கே போய்ப் பாருங்க!

[ஆசிரியர் ஓடுகிறார்]

சத்தி : (தனித்து) உம். அவன் வெடிவைக்கிறானோ இல்லையோ! நான் வாங்கிக் கொடுத்த பாட்டில் வெடி நல்லா வெடிக்குது. உம்! நடக்கட்டும் உம், இப்படிப் நாலு பேரை முட்டாளாக்கினால்தானே நான் புத்தி சாலியாக முடியும். ஊரை முட்டாள் ஆக்கினா உளறு வாயன் புத்திசாலி ஆகமுடியும்; நாட்டைக் கெடுத் தவன் நாயகனாக முடியும். பூட்டை உடைத்தவன் கொள்ளையடிக்க முடியும். ஊரைக் கெடுத்தவன் உயர்ந்தவனாக முடியும்.

**காட்சி முடிவு**

## காட்சி : 30

**காலம்** இருட்டும் நேரம்.

**இடம் :** *காந்தி சிலை அருகில்.*

**நிகழ்ச்சி:** *காந்தி சிலையைஉடைக்க முயற்சித்த கந்தசாமியைத் தடுத்து ஆசிரியர் காப்பாற்றுதல்.*

**பாத்திரங்கள் ;** *கந்தசாமி' ஆசிரியர் சோணசலம், மற்றவர்கள்*

*கந்தசாமி :* (நல்ல தெளிவுடன்) அப்பனே! என்னை மன்னிக்க வேண்டும். நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ பதில் சொல்லியே ஆகவேண்டும். உன்னை வெறும் சிலையாக மதிக்கவில்லை. உயிருள்ள தெய்வமாக மதிக்கிறேன். பதில் சொல்லுங்கள். அய்யனே! நாங்கள் வள்ளுவனை பார்த்ததில்லை. உன்னைத்தான் நடமாடும் திருவள்ளுவராகப் பார்த்தோம். வள்ளுவன பொது மறைக்கு உயிர் கொடுத்த மனித தெய்வம்நீ. தெய்வமே! உன்னைச் சில கேள்விகள் கேட்கிறேன். சொல்வதை மட்டும் செய் என்றாய். செய்வதை மாத்திரம் சொல் என்றாய். உன் கட்டளைப்படி செய்தவர் —உன் கட்டளைப்படி நடந்தவர் உலகில் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். எத்தனைச் சித்திரவதை அனுபவிக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா, தெரியாதா?

காட்டுவிலங்குகள். மத்தியிலே ஒரு காருண்ய தெய்வம் போல் வந்தாய் ஆனல் நாங்கள் திருந்தினோமா? பாலைவனத்தில் ஒரு பைந்தமிழ்க் கவேரியாகப்

பாய்ந்துவந்தாய்! ஆனால் அந்த ஜீவ நதியையே சாக்கடையாக்கினோம். இதற்கு என்னகாரணம்? யார் காரணம்? பதவியா? பணமா? எது பெரிது என்று கேட்டால்? எல்லாம் பணம் என்கிறான்—என்னடா' என்றால் வாழும் வழி என்கிறான். இப்பொழுது உன் சிலையை வைக்கத்தகாதவன் வைக்கிறான். உன் புகழின் நிழலிலேயே ஊழலைவளர்க்கிறான். சமுதாயத்தின் ஆணிவேரியிலேயே கொள்ளி வைக்கிறான். சொல், இதெல்லாம் சரியா? உனக்குச் சம்மதம்தானா? இந்நாடு இப்படியே போய்க் கொண்டிருந்தால், இந்த நாடு ஒரு நாள் வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் காய்ந்து கரிந்துச் சாம்பலாகி விடாதா? எங்கும் நிறைந்த உன் ஒளியை இந்தச் சிலையிலே முடக்கி அடக்கப் பார்க்கிறார்கள் சிலர். இதை நீ அனுமதிக்கலாமா? உனது சிலையை, தங்கள் சூழ்ச்சி நாடகத்தை மறைக்கும் ஒரு கலையாகப் பயன்படுத்து கிறார்களே, இது உனக்குச் சம்மதம்தானா? இமயமலையான உனக்கு இந்த ஈனர்கள் வைக்கிற சிலை தேவை தானா? அய்யனே தேவைதானா? உம். என்ன பதில். எங்கே உன் பதில்? ஏன் மௌனம்? சத்தியம் ஊமையாகிவிட்டதா?' உண்மை உறங்கி விட்டதா? நீயும் இறந்து விட்டாயா? சீக்கிரம் சொல். சண்டையாளர்கள் வைக்கும் சிலை உனக்குத் தேவைதானா?

காந்தியின் மனச்சான்று: (பின்னணி) இல்லை தம்பி. சிலை வைப்பார்கள் என்றோ சிந்துபாடுவார்கள் என்றோ, நான்கஷ்டப்பட்டவிபல்லை. ஏதோ தெரிந்ததைச் சொன்னேன் சொன்னதைச் செய்தேன். இப்படி என் ஆத்மாவையே கொன்று, கேவலம் கற்சிலைகளில் சிறைப்படுத்தி இப்படியெல்லாம் சீரழிவார்கள் என்று எண்ணவே இல்லை தம்பி.

கந்தசாமி : பேஷ்! என் அய்யன் பேசிவிட்டான். மகாத்மா பேசி விட்டார். இனி வீம்புகாரர்கள் சிலை வைத்து இந்த நாட்டில் விளையாட முடியாது. போலிகள் வேஷம் போட முடியாது. வில்லர்கள் மக்களுக்கு விஷத்தை ஊட்ட முடியாது! சூழ்ச்சிக்காரர்கள் உன் நிழலில் சூதாட முடியாது மகாத்மாவின் பெயரால் மாலை போட்டுக் கொள்ளமுடியாது! விடுதலை! ஆம் விடுதலை! எனதப்பன் வாய்மைக்கு விடுதலை! போலி களின் பொய்மைக்கு விடுதலை! இந்தச் சிலை என்ற சிறையில் மறைந்துவிட்ட ஜீவனுக்கு விடுதலை! இந்தச் சிலையை வைத்து அதன் புகழின் நிழலிலே பஞ்சமாபாதகம் செய்யும் பாவிகளின் சூழ்ச்சிகளுக்கு விடுதலை. என் அய்யனது இமாலயக் கீர்த்தியைச் சிறைபடுத்திச் சீரழிக்கும் இந்தச் சிலை என்னும் சிறை—தூள் தூளாக, ஆயிரம் துகளாகி வெடித்துச் சிதறட்டும்! அந்தப் பாவிகளின் மனம் துடித்துப் பதறட்டும். திருடர்களின் கூட்டம் அடிபட்டு மறை யட்டும்! குருடர்களாகி விட்ட மக்களின் மனம் புது ஒளி பெறட்டும்!

[கையில் இருந்த இரண்டு வெடியில் ஒன்றை எரியப் போகிறான். அச்சமயத்தில் ஆசிரியர் உள்ளி ருந்தே 'கந்தசாமி கந்தசாமி' என்று கதறிவண் ணம் ஓடி வருகிறார். பதட்டத்துடன் கந்தசாமி வருவது யாரென்றும் தெரியாமல் வெடி குண்டை எரிகிறான். வெடிக்கிறது! சிலை சேத மடைகிறது! தூள்பறக்றகிது! அதனால் ஆசிரியர் கொஞ்சம் அடிபட்டுக் காயத்துடனும் நெற்றி யில் சிறு காயம்பட்ட இரத்தத்துடனும் மேடைக்கு வருகிறார். வந்து துணிச்சலோடு காந்திசிலை முன் இருகை நீட்டி, சிலையைக் காப் பாற்ற நின்று]

ஆசிரியர் : கந்தசாமி! (உரக்கக் கத்துகிருர்)

கந்தசாமி : ஆ, அய்யா! நீங்களா!

ஆசிரியர் : ஆம். நான்தானப்பா, நான்தான். உம், ஏன் யோசிக்கிருய்? கையிலிருக்கும் அந்த வெடிகுண்டையும் என்மேல் வீசு. இந்தச்சிலையோடு என் உடம்பும் தூளாகி வெடிக்கட்டும். உன் மனம் குளிரட்டும். உம். சீக்கிரம் செய். உம்...

கந்தசாமி : அய்யா, அய்யா!

ஆசிரியர் : கந்தசாமி! இச்செயல் நியாயமென்று நீ நினைத்தால் செய்து முடி.

கந்தசாமி : இல்லை அய்யா. என் ஆசிரியர் தாங்கள்.

ஆசிரியர் : நான் உன் ஆசிரியர் என்ற எண்ணத்தில் கருணை காட்டுகிருயா தம்பி. இவர் யார்? உலகத்தின் பேராசிரியர்! மானிடத்தின் மனேசாட்சி. இவர் சிலையை உடைக்கலாமா? கொடு அந்த வெடிகுண்டை.

[அப்போது சோணசலத்தின் ஆட்கள் வந்து கந்தசாமியை அடி வெட்டு குத்து என்று கூறிக் கொண்டு அடிக்கிருர்கள்.]

ஆசிரியர் : (ஓடி வந்து) நில்லுங்கள்! :அவனை அடிக்காதீர்கள்! அவனை நான் விசாரிக்கிறேன். தம்பி கந்தசாமி, கொடு அந்த வெடிகுண்டை.

கந்தசாமி : அய்யா! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

ஆசிரியர் : உம். நான் கேட்கிறேன், உன் ஆசிரியர் கேட்கிறேன். உத்தமரான உன் தந்தையின் உயிர் நண்பன் கேட்கிறேன். கொடு அதை.

[வெடிகுண்டை பயந்து நடுங்கிய நிலையில் ஆசிரியரிடம் கொடுக்கிறான். ஆசிரியர் அதைத் தூர எறிகிறார். அது வெடிக்கிறது]

ஆசிரியர் : கந்தசாமி! இதுவே நீ செய்த முதல் வெடிகுண்டு, இதுவே கடைசியாக இருக்கட்டும். இனி இத்தகைய கொடுமைகளுக்கு மனதைப் பறிகொடுக்காதே.

கந்தசாமி : என்னை மறந்து மன்னித்துவிடுங்கள் அய்யா!

சோணு : பாத்தீங்களா? மகாத்மா சிலையை உடைக்க வந்ததும் இல்லாமே, மறக்கணும் மன்னிக்கணும்னு ஏதோ பேசறான்!

கந்தசாமி : அய்யா! நான் சிலையை உடைக்க நினைத்ததற்கே இந்த மனித உருவங்கள்தான் அய்யா காரணம்! இனி இந்நாட்டிற்கு மகாத்மா தேவையில்லை! வெடிகுண்டுதான் வேண்டும்.

ஆசிரியர் : இந்தப் பெருச்சாளிகளுக்குப் பயந்து பெரிய கோயிலையே இடிக்க எண்ணலாமா தம்பி.

கந்த : அய்யா! இந்த ஊரில் இவர் ஒரு பெரிய மனிதர்! இவர் ஒரு அச்சுக்கூடம் வைத்திருக்கிறார். அதில் கள்ள நோட்டையும் அடிக்கிறார். காமக் கதைகளையும் அடிக்கிறார். அதிலேயே காந்திப் படத்தையும் அச்சடிக்கிறார். அது தவறு என்று அச்சு யந்திரத்துக்கும் தெரியாது. இந்த மனித யந்திரத்துக்கும் தெரியாது. இல்லை-தெரிந்துகொள்ள மறுக்கிறது. இப்படி உலகை ஏய்க்கும் இவர்கள், மகாத்மாவின் புகழை மாய்க்கத் துணிந்து விட்டார்கள். இப்பேர்ப்பட்ட பாவிகள் வைக்கும் சிலை தேவைதானா அய்யா?

ஆசிரியர் : தம்பி! நீ ஆயிரம் சமாதானம் சொல்லலாம். நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். நீ செய்த காரியம் வெறுப்பில் வந்த விளைவு. வியாதியின்மேல் கோபித்துக் கொண்டு டாக்டரைப் பழிவாங்கும் பைத்தியக்காரத்தனம் செய்ய இருந்தாய். மகாத்மா யார்? ஊமைகளாயிருந்தோம். ஓட்டுரிமை தந்தார். அடிமைகளாயிருந்தோம். அமைச்சர்களாக்கினர். மண்ணுடை பூண்டு மக்கிக் கிடந்தோம். பொன்னுடை பூணும் புலவர்களாக்கினர். பொய்மையின் போலிகளாயிருந்தோம். மெய்மையின் ஜோதிகளாக்கினர். நமக்கென்று ஒரு நாடு-நமக்கென்று ஒரு கொடி-படை குடி—அமைச்சு—நட்பு—அரண் இவற்றைச் சுதந்திரச் செல்வமாகச் சேமித்து வைத்தார் மகாத்மா. அவர் நம் குடும்பத்தின் தாய். தந்தை நல்லாசான். நண்பன். அரசன். அமைச்சன்! அவர் தான் அண்ணல் மகாத்மா. கருணை எனும் பெருங் குணம், காந்தி வடிவம் கொண்டது! சத்தியம் என்னும் ஒளி, சாந்தப் புன்னகை பூத்தது. சேவையே பாதமாக, செம்மையே கைகளாக, உறுதியெனும் கோலூன்றி, வழிநடந்து காட்டினர். அய்யன். நன்றி மறந்துவிட்டோம்

கந்தசாமி : இனி மறக்கமாட்டேனய்யா. அய்யா என்றால் உங்கள் நெற்றியிலே காயம். வாருங்கள் போகலாம்.

ஆசிரியர் : இது சிறு காயமப்பா. ஆறிவிடும், ஆனால் உன் செயலால் என் மனதிலே ஏற்பட்ட காயத்தை யாரப்பா ஆற்றுவது?

சோணு : பாவிப் பய. இன்ரேம் சிலை பூராவும் உடைஞ்சிருந்தான எங்கெளரவம் மதிப்பு எல்லாமே தூள்

தூளாயிருக்குமே. பத்தாயிரம் இருபதாயிரம், நன் கொடை கொடுத்த எங்க பேர் எல்லாம் கொட்டையா எழுதியிருக்குது. அதெல்லாம்கூட வீணாப்போயிருக் குமே. நல்லவேளை. வாத்தியாரய்யா வந்து எங்க நல்ல பேரைக் காப்பாத்தினீங்க. நீங்க நல்லா இருக்கணும்.

ஆசிரியர் : அட சட். பேசாமருலிங்கள் அய்யா! வயிற் றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள். நீங்கள்தான் இதற் கெல்லாம் காரணம். கந்தசாமி, நீ செய்ய இருந்த குற்றம் எவ்வளவு கொடுமையானது தெரியுமா? அன்று கோட்சே செய்த கொடுமையைவிடக் கொடூர மானது. என் ஆத்மாவே நடுங்கும் கொடுமையான காரியத்தை அரை நொடியில் செய்ய இருந்தாய். தம்பி! இதைப் பார்க்கும் என் கண்கள் பாவம் செய்தது. நான் இனி இந்த ஊரில் உயிர் வாழ்வது கூடப் பாவம். அண்ணலே! என் மாணவன் செய்ய இருந்த குற்றத்திற்காக என்னை மன்னித்துவிடு. உன் சிலையை உடைக்க நினைத்தது அவன் குற்ற மல்ல. அவனுக்கு உன்னைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய முறையில், விளக்கிச் சொல்லாதது எங்கள் குற்றம். அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அவன் பாவத்துக்கு என்னை மன்னித்துவிடு.

கந்த : (அவரைப் பிடித்து) அய்யா! இந்தப் பாவிகள் மேலிருந்த கோபத்தில் இப்படிச் செய்துவிட்டேன். இனி இப்படிச் செய்யமாட்டேன். மன்னிக்க வேண்டும் சார்.

ஆசிரியர் : தம்பி, நீதானப்பா என்னை மன்னிக்க வேண்டும். குற்றம் என்னுடையதப்பா. விடுதலை

வந்து இருபத்தேழு ஆண்டுகளாக மகாத்மாவைப் பற்றி நாங்களும் புரியும்படி சொல்லிக் கொடுக்க வில்லை. சொன்னாலும் அதன்படி யாரும் நடக்க வில்லை. அவரை எல்லோருமே மறந்துவிட்டோம். மறைத்துவிட்டோம். ஆனால் அது மறைக்க முடி யாத சூரியஜோதி என்பதை உனக்கு உணர்த்து கிறேன்.

கந்த : என்னை மன்னிச்சுடுங்க சார். ஏதோ மனக்குழப் பத்தில் ஏற்பட்ட மயக்கம்.

ஆசிரியர் : நீ என்னிடம் மன்னிப்புக் கேட்பதைவிட உலகத்திடம் மன்னிப்புக் கேள் தம்பி. உலகத்திடம் மன்னிப்புக் கேள்.

கந்தசாமி : கேட்கிறேன், அய்யா. ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்கிறேன். நான் செய்ய இருந்த குற்றத்துக்கு உலகம் கொடுக்கும் தண்டனையையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட போலிகள் எல்லாம் மகாத்மாவின் பெயரை உச்சரிக் கலாமா? அந்தப் புனித சக்தியைக் கொச்சைப்படுத்த லாமா? அவர் பெயரால் பாவம் செய்யலாமா? இந்தக் கேள்விக்கு இவர்கள் பதில் சொல்ல வேண்டாமா?

ஆசிரியர் : சொல்லுங்களய்யா. இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்கிறீர்கள்? காந்தி சிலையை வைக் கவோ, வணங்கவோ, நாம் தகுதி உள்ளவர்கள்தானா இந்தக் கேள்வியை கந்தசாமி மட்டும் கேட்கவில்லை. அய்யா. உலகத்தின் மனோசாட்சி நம்மைப் பார்த்துக் கேட்கிறது. இது ஒரு இமாலயக் கேள்வியாக இன்று நம்முன் நிற்கிறது. பதில் சொல்லுங்கள். உம். பதில் சொல்லுங்கள்! "பல நாடுகளிலும் கடன்

வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, தொழில் பயிற்சி இல்லாமல் தூங்கிவிட்டு கள்ளுண்டு மயங்கிய பின், மகாத்மாக்களுக்குச் சிலை வைப்பதும் அந்தச் சிலைகளை உடைப்பதும்தான் இந்தியரின் வேலையா'' என்று உலகம் கேட்கிறது! பதில் சொல்லுங்கள்! நாம் எங்கே போகிறோம்?

[சோணாசலம் முதலியோர் நழுவப் பார்க்கிறார்கள். அவர்களைத் தடுத்து]

நழுவாதீர்கள்! இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் எந்த மனிதனும் இனி தப்பி ஓடிவிட முடியாது! நழுவாதீர்கள்! பதுங்காதீர்கள்! பதில் சொல்லுங்கள்! சபையிலே சொல்ல வெட்கமாயிருந்தால், யோசனை செய்து நாளை தனிமையிலாவது பதில் சொல்லுங்கள்! எப்படியும் பதில் சொல்லியே தீர வேண்டும்! என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? இந்தக் கேள்விக்கேற்ற பதிலை நீங்கள் சொல்லாவிட்டால் இந்த நாட்டை மும்முறை எதிரிகளின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றிய, பாரதநாட்டின் இராணுவம், இந்தக் கேள்விக்குரிய பதிலை வெகு சீக்கிரம் சொல்லிவிடும். உம்! அதற்கு முன் நீங்கள் சொல்லுங்கள்! என்ன உங்கள் பதில்? எங்கே உங்கள் பதில்!

['ஜன கணமன அதிநாயக ஜெயஹே' பாடல் ஒலிச் சென்று கேட்கிறது. எல்லோரும் வணங்கி நிற்கின்றனர்.

**-காட்சி-நாடகம் நிறைவுபெறுகிறது-**

# இதற்கு ஆதாரமான நூல்கள்

| பெயர் | மொழி | ஆசிரியர் |
|---|---|---|
| பகத்சிங்கும் அவர் எண்ணங்களும் | (ஆங்கிலம்) | கோபால் தாகூர் |
| எனது நினைவுகள் | ( ,, ) | அஜய்கோஷ் |
| எம். என். ராய் அவர்களின் நினைவலைகள் | ( ,, ) | எம். என். ராய் |
| யுவ பாரதம் | (தமிழ்) | லாலா லஜபதிராய் |
| காங்கிரஸ் மகாசபை | (ஆங்கிலம்) | பட்டாபி சீதாராமய்ய ,, |
| நான் கண்ட பாரதி | (தமிழ்) | வ. உ. சிதம்பரம்பிள்ளை |
| திருப்பூர் குமரன் | ( ,, ) | பி எஸ் சுந்தரம் |
| உயிர்க் கவிதைகள் | | மகாகவி பாரதியார் |
| Unto this last | (ஆங்கிலம்) | — JHON RUSKIN |
| Tale of two cities | ( ,, ) | by. Charles Dickens. |

இந்த நாடகத்தை அரங்கேற்ற விரும்பும் நண்பர்கள் ஆசிரியரிடம் உரிய அனுமதி பெற்று நடத்தலாம்

**எஸ். டி. சுந்தரம்**

1, சன்னதி தெரு, லட்சுமிபுரம், சென்னை-14

அச்சிட்டோர்: மூவேந்தர் அச்சகம், சென்னை-14.



ஜெய்ஹிந்த்!

இந்தியா வாழ்ந்தால்

இந்தியர் வாழலாம்!

மாவீரன் பகத்சிங்.